October 2012
Issue : 58

# செங்கதிர்

இலட்சியம் இல்லாமல் இலக்கியம் இல்லை

இலங்கையிலிருந்து வெளிவரும்
கலை - இலக்கிய - பண்பாட்டுப் பல்சுவைத் திங்களிதழ்



மூத்த எழுத்தாளர் வே.சண்முகநாதன்
(முகில் வண்ணன்)



அற்புத மனிதர் → 58

தர்மஸ்ரீ பண்டாரநாயக்கா

ஐப்பசி 2012
வீச்சு : 58

60/=

# 'செங்கதிர்' ஆண்டுச் சந்தா : ரூ 1000/-க்குக் குறையாத இயன்ற அன்பளிப்பு

✲ **"செங்கதிர்"** இன் வரவுக்கும் வளர்ச்சிக்கும் அன்பளிப்புச் செய்ய விரும்பும் நலம் விரும்பிகள் (உதவும் கரங்கள்) தாங்கள் விரும்பும் தொகையை ஆசிரியரிடம் நேரில் வழங்கலாம்.

**அல்லது**

✲ மக்கள் வங்கி (நகரக்கிளை), மட்டக்களப்பு, நடைமுறைக் கணக்கு இல : 113100138588996 க்கு வைப்பிலிடலாம்.

**People's Bank (Town Branch) Batticaloa.**

**Current account No.:113100138588996 - For bank deposit**

**அல்லது**

✲ அஞ்சல் அலுவலகம், மட்டக்களப்பில் மாற்றக் கூடியவாறு காசுக்கட்டளை அனுப்பலாம்.

**Post Office, Batticaloa - For money orders**

✲ காசோலைகள் / காசுக்கட்டளைகளை த.கோபாலகிருஸ்ணன் எனப் பெயரிடுக. **Cheques / Money orders in Favour of T.Gopalakrishnan**

செங்கதிர்

தோற்றம் 30.01.2008

58

ஐப்பசி 2012(தி.வ.ஆண்டு-2043)

5வது ஆண்டு

ஆசிரியர்:

**செங்கதிரோன்**

தொ.பேசி/T.P -065-2227876
077-2602634

மின்னஞ்சல் / E.mail-
senkathirgopal@gmail.com

துணை ஆசிரியர்:

**அன்பழகன் குரூஸ்**

தொலைபேசி/T.P - 0777492861

மின்னஞ்சல்/E.mail -
croos_a@yahoo.com

**தொடர்பு முகவரி :**
**செங்கதிரோன்**
**திரு.த.கோபாலகிருஸ்ணன்**
19, மேல்மாடித் தெரு,
மட்டக்களப்பு,
இலங்கை.

**Contact :**
**Senkathiron**
**T.Gopalakrishnan**
19, Upstair Road,
Batticaloa,
Sri lanka.

◆ ஆசிரியர் பக்கம் 02
◆ அதிதிப்பக்கம் 03
◆ கவரிமான் (சிறுகதை) -முகில்வண்ணன் 07
◆ ஈழ மகள் தேடுகிறாள் - 02 (தொடர் கவிதை) - புதுமைவாணன். 14
◆ மட்டுநகரில் மணம் வீசும் "தென்றல்" 15
◆ வயிற்றெரிச்சல் கதைகள் -இணுவை இரகு 17
◆ சொல்வளம் பெருக்குவோம் - 38 - பன்மொழிப் புலவர் த.கனகரெத்தினம் 18
◆ மட்டக்களப்பு மாநில மண்வாசனைச் சொற்கள் பட்டியல் - IX - செ.எதிர்மன்னசிங்கம் 20
◆ ஏன் நடுக்கம் புவிமகளே! (கவிதை) - அக்கரைச்சக்தி 21
◆ எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் வழங்கும் தமிழியல் விருது - 2012 23
◆ கொழும்புத் தமிழ்ச்சங்கம் நடத்திய அமரர் இலங்கையர்கோன் ஞாபகார்த்தச் சிறுகதைப்போட்டி முடிவுகள் 25
◆ மூடுமந்திரம் (குறுங்கதை) - வேல்அமுதன் 26
◆ மணிப்புலவர் மஜீத் அவர்களின் 'பூர்வீக வரலாறு' கட்டுரை தொடர்பாக (சென்ற இதழ் தொடர்ச்சி.....) - சா.திருவேணிசங்கமம் 27
◆ கதை கூறும் குறள் - 35 - கோத்திரன் 35
◆ தேசிய சாஹித்திய விருது - 2012 43
◆ வாழ்க்கைத்தடம் - 07 - அன்புமணி 44
◆ மீண்டும் ஒரு காதல் கதை - 19 - திருக்கோவில் யோகா.யோகேந்திரன் 51
◆ விசுவாமித்திர பக்கம் 55
◆ பேராசிரியர் மௌனகுரு பக்கம் 58
◆ மனிதனை மனிதனாக்கும் வாசிப்பு -காண்டீபன் 62
◆ விளாசல் வீரக்குட்டி 64

ஆக்கங்களுக்கு ஆக்கியோரே பொறுப்பு

# ஆசிரியர் பக்கம்

ஒக்டோபர் மாதம் இலங்கையில் (2004 முதல்) வாசிப்பு மாதமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அருகிவரும் வாசிப்புப்பழக்கத்தை வலியுறுத்தியும் வாசிப்பின் முக்கியத்துவத்தைக் குறிப்பிட்டும் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் கட்டுரைகள் வெளிவரும். அக்கட்டுரைகளைத்தானும் எத்தனைபேர் வாசிக்கிறார்களோ தெரியாது. ஊடகங்கள் மூலம் வாசிப்பை வலியுறுத்துவது மட்டும் போதாது. இளந்தலைமுறையினரிடையே வாசிப்பை ஊக்கப் படுத்தும் செயற்றிட்டங்கள் அறிமுகம் செய்யப்படல் அவசியம். உள்ளூராட்சி மன்றங்களே குறிப்பிடும்படியாக நூலகங்களை நடாத்துகின்றன. இந்நூலகங்கள் யாவும் தங்கள் நிர்வாக எல்லைக்குட்பட்ட (உள்ளூராட்சி எல்லைக்குட்பட்ட) வகையில் 'வாசகர் வட்டம்' களை உருவாக்கி அவற்றின் மூலம் இளந்தலை முறையினரிடையே வாசிப்பை ஊக்கப்படுத்தும் செயற்றிட்டங்களை முன்னெடுக்கலாம். இதற்குத் தேவையான நிதியுதவிகளை உள்ளூராட்சி மன்றங்களும் வேறு அரச, அரசசார்பற்ற நிறுவனங்களும் ஒதுக்கீடு செய்ய முன்வரவேண்டும். சம்மந்தப்பட்ட அரச திணைக்களங்களில் அல்லது உள்ளூராட்சி மன்றங்களில் 'டெங்கு ஒழிப்புவாரம்', 'எயிட்ஸ் விழிப்புணர்வு வாரம்' போன்ற நிகழ்ச்சித்திட்டங்கள் மக்களிடையே முன்னெடுக்கப்படுதல் போன்று வருடாவருடம் கிரமமாக 'வாசிப்பு ஊக்குவிப்பு வாரம்' மக்களிடையே முன்னெடுக்கப்படுதல் அவசியமானது. வாசிப்பை ஊக்குவிக்கக்கூடிய போட்டிகளைக் கூட பாடசாலை மாணவர் களிடையேயும் திறந்த போட்டிகளை வளர்ந்தோரிடையேயும் நடாத்திப் பரிசுகளும் வழங்கலாம். அரசாங்கம் இந்த விடயத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டும். ஏனெனில் வாசிப்புப் பழக் கத்தை ஊக்குவிப்பதன் மூலம் நாட்டில் குற்றச்செயல்களைக்கூடக் குறைக்கலாம்.

- **செங்கதிரோன்**

**அன்பானவர்களே!**

**உங்களால் இயன்ற அன்பளிப்புக்களை வழங்கி "செங்கதிர்" இன் வரவுக்கும் வளர்ச்சிக்கும் உதவுங்கள்.**

**– ஆசிரியர் –**

# அதிதிப்பக்கம்



**'செங்கதிர்'** இதழின் இம்மாத அதிதி, கல்முனைப் பிரதேசத்தின் **மூத்த எழுத்தாளர் வே.சண்முகநாதன் (முகில் வண்ணன்)** அவர்களாவார்.

கல்முனை, பாண்டிருப்பைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை அவர்கட்கும் மாரிமுத்து அவர்களுக்கும் எட்டாவது மகனாக 17.12.1942 அன்று பாண்டிருப்பில் பிறந்தார். இயற்பெயர் சண்முகநாதன் - வீட்டுப்பெயர் கணேஷ் - பிரதான புனைபெயர் முகில்வண்ணன் என்பதாகும். மழலைப்புலவர் என்னும் பெயரில் சிறுவர் விடயங்களை எழுதி வந்திருக்கிறார். வேறு சில புனைபெயர்களிலும் சொந்தப் பெயரிலும் எழுதியிருக்கிறார்.

எழுத்துலகப் பிரவேசம் பாடசாலைப் பத்திரிகையில் 1959ல் 17ம் வயதில் இடம்பெற்றது. தேசியப்பத்திரிகையில் 1961இல் தினகரன் மூலமாக அறிமுகமானார். ஆரம்பக்கல்வி பாண்டிருப்பு மெதடிஸ்த மிஷன் கலவன் பாடசாலையில். இடைநிலைக்கல்வி கல்முனை பற்றிமாக் கல்லூரியில். விவசாயப் பயிற்சி கரடியனாறு விவசாயப் பாடசாலையில். ஒரு வருடம் தொழிற் கல்வி இரத்மலானையில் நடந்தது. தொழிற்பயிற்சி கொழும்பில் பல இடங்களில் நடந்தது. வேலை செய்தபோது சிங்களத்தில் சாதாரண தரத்துக்குச் சமமான சித்தி பெற்றார்.

1965ல் வேலைக்குச் சேர்ந்து சில பிரச்சினைகள் காரணமாக 1982ல் வேலையைவிட்டு விலகவேண்டி ஏற்பட்டது. அப்போது சவூதி அரோபியாவுக்கு மதிப்பீட்டாளராகச் சென்றார். திரும்பி வந்து கல்முனை சர்வோதயத்தில் திட்ட இணைப்பாளராக வேலை செய்தார். அதன் பின்னர் சுனாமியின் பின்னரான வேலைத் திட்டத்தில் பொறியியலாளராகச் சேர்ந்து கொழும்பு லேடன் கம்பனி (குழுமம்)யில் சேர்ந்து சில வருடங்கள் பணியாற்றினார்.

## விருதுகள்:-

- கலாபூஷணம்
- சாமஸ்ரீ தேசமான்ய
- இரத்தின தீபம்
- இலக்கிய தீபம்

## பட்டங்கள்:-

- வெகுசனத் தொடர்புத் துறையில் டிப்ளோமா
- சட்டத்தில் டிப்ளோமா
- அகில இலங்கை சமாதான நீதவான்

**பதவிகள்:-**

- தொழில்நுட்பவியலாளர் - பொது வேலைகள் திணைக்களம்
- பொறியியலாளர் - (ஓய்வுநிலை) கட்டிடங்கள் திணைக்களம்
- பொறியியலாளர் - (ஓய்வுநிலை) லேடன் குறூப் கம்பனி
- தொழில் நுட்ப ஆலோசகர் - NHDA (தே.வீ.அ.சபை)
- திட்ட இணைப்பாளர் - சர்வோதயம், கல்முனை
- உதவிப்பணிப்பாளர் - மனித உரிமை சமாதான நீதவான் மன்றம் (கல்முனைப் பிரதேச சபை)
- தலைவர் - சிக்கன கடன் வ.கூ.சங்கம், பாண்டிருப்பு
- பொருளாளர் - கல்முனைத் தமிழ்ச்சங்கம்
- கணக்காய்வாளர் - சிக்கன கூட்டுறவு சங்கங்களின் சமாசம், கல்முனை
- இணைப்பாளர் - நாவலர் கோட்டம், கல்முனை.
- முன்னாள் தலைவர் - ஸ்ரீதிரௌபதி அம்மன் ஆலயம், மாணிக்கப் பிள்ளையார் ஆலய தேவஸ்தானம், பாண்டிருப்பு
- செயலாளர் - மலையக கலை கலாசார சங்கம் (கிழக்குக் காரியாலயம்), கண்டி

**பரிசு:-** ◆ சிறந்த சிறுகதை எழுத்தாளர் 1994 இல்

## தொடராக வெளிவந்த ஆக்கங்கள்:-

| | | | |
|---|---|---|---|
| ◆ சிங்கராஜா | - சிறுவர் நாவல் | 1968 - 1969 | - ராதா |
| ◆ மணற்கோலம் | - நாவல் | 1969 | - ராதா |
| ◆ ஆனந்தக் கண்ணீர் | - குறுநாவல் | 1971 | - மித்திரன் |
| ◆ பளிங்குமாளிகை | - சிறுவர்நாவல் | 1985 | - தினகரன் |
| ◆ நினைத்தது ஒன்று | - குறுநாவல் | 1986 | - தினகரன் |
| ◆ செல்லக்கிளி | - நாவல் | 1990 | தினகரன் |
| ◆ உன்னைக்காணாத நெஞ்சு | -நாவல் | 1997 | - வீரகேசரி |
| ◆ அஞ்ஞாதவாசம் | - குறுநாவல் | 1998 | - நவமணி |
| ◆ சவூதிஅரேபியாவில் ஒரு சஞ்சாரம் | - பயணக்கட்டுரை-சிந்தாமணி | | |
| ◆ இளவரசன் | - சிறுவர்நாவல் | 2012 | - தினகரன் |

## இதுவரை வெளிவந்த நூல்கள்:-

| | |
|---|---|
| ◆ அவள் ஒரு தமிழ்ப் பெண் - | சிறுகதைகள் |
| ◆ ஆனந்தக்கண்ணீர் - | இருகுறுநாவல்கள் |
| ◆ இனியும் நான் இராமன் தான் - | சிறுகதைகள் |
| ◆ செல்லக்கிளி - | நாவல் |
| ◆ முருகனருள் - | கவிதை |
| ◆ ஸ்ரீ திரௌபதை அம்மன் ஆலயம் - | ஆலய வரலாறு |
| ◆ பொன்விழா மலர் - | எழுத்துலகில் 50 ஆண்டுகள் |

## மொழிபெயர்ப்பில் பங்களிப்பு:- (பிரம்ம குமாரிகள் ஆன்மீக நூல்கள்)

- இன்றைய நல்ல நாளுக்கான சிந்தனைகள்
- இறைவன் - எனக்கும் இனியவன்
- ஆதி தேவி ஜெகதாம்பா சரஸ்வதி
- ஆத்மாவின் இறக்கைகள்
- ஆன்மீக வெற்றிக்கதைகள்
- இறத்தலும் இறப்பும்
- இராஜயோக தியான பாடத்திட்டம்

இவை தவிர ஏனைய கதை, கவிதை, கட்டுரைகள் 1961 இல் இருந்து எழுதப்பட்டவை தொகுக்கப்பட்டு தரப்பட்டுள்ளது. இவை படிப்படியாக நூலாக்கம் செய்யப்பட இருக்கின்றன.

- பொங்கல் கவிதைகள் - கவிதை
- பாவை நோன்பு - கட்டுரை
- அஞ்ஞாதவாசம் - இரு குறுநாவல்கள்
- சிங்கராஜா - சிறுவர் நாவல்
- பளிங்குமாளிகை - சிறுவர் நவீனம்
- பாதாளக்கிணறு - சிறுவர் நவீனம்
- கிறிஸ்மஸ் பரிசு - சிறுவர் நவீனம்
- பூங்கவிதைகள் - சிறுவர்பாடல்கள்
- பொன் மலர்கள் - சிறுவர்கவிதைகள்
- வெள்ளி விருந்து - சமயக்கட்டுரைகள்
- இராசாத்தி - நாவல்
- கலைந்த போகும் கோலங்கள் - நாவல்
- அறிவியல் கட்டுரைகள் - கட்டுரைத் தொகுப்பு
- நீறு பூத்த நெருப்பு - 3வது சிறுகதைத் தொகுதி
- மனுஷ்யா - 4வது சிறுகதைத் தொகுதி
- உண்மையே பேசு - சிறுவர் சிறுகதைகள்
- பயந்த புலி - சிறுவர் சிறுகதைகள்
- முகில்வண்ணன் கவிதைகள் - கவிதைகள்
- முத்துச்சரம் - அம்மன் கவிதைகள்
- பாரதியார் ஒரு யுக புருஷர் - கட்டுரைகள்
- திருவருள் மாலை - முருகன் கவிதைகள்
- பாமலர்கள் - முருகன் கவிதைகள்
- ஒரு தேடல் - கவிதைகள்
- ஞானக் கதைகள் - ஆன்மீகக் கதைகள்
- தந்தையானவள் - குறுங்காவியம்
- சண்முகநாதன் ஒரு...... - தொகுப்பு
- குடிகளின் வரலாறு - கட்டுரை
- தரிசனம் - கவிதைகள்
- சகோதர பாசம் - சிறுவர் சிறுகதைகள்
- இளவரசன் - சிறுவர் நவீனம்

## வானொலியில் பங்களிப்பு:- (ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்)

- ஈழத்துப் பாடல்கள் மெல்லிசைப் பாடல்கள் - ஏழு ஒலிபரப்பாகியுள்ளன.
- சிறுவர் மலரில் சிறுவருக்கான பாடல்கள், கதைகள் ஒலிபரப்பாகியுள்ளன.

## எழுதிய பத்திரிகைகள்:-

தினகரனில் ஆரம்பித்து ஏனைய பத்திரிகைகளிலும் எழுத ஆரம்பித்தார். வீரகேசரி, சிந்தாமணி, தினபதி, சூடாமணி, மித்திரன், தினமுரசு, நவமணி, தினத்தந்தி, சுதந்திரன், சுடர், அண்மையில் செங்கதிரிலும் இவரது கதை வெளிவந்திருக்கிறது.

இறுதியாக 2012இல் தினகரனில் 'இளவரசன்' என்னும் சிறுவர் தொடர் நவீனம் வெளிவந்து முடிந்திருக்கிறது. இப்போது லண்டனில் இருந்து வெளிவரும் 'காற்றுவெளியில்' (Digital) இவரது கவிதைகள் வெளிவந்து கொண்டிருக்கிறது.

## இவர் எழுதிய விடயங்களாவன:-

சிறுகதை, கவிதை, கட்டுரை (சமயம், இலக்கியம், அறிவியல்), நாவல், குறுநாவல், மெல்லிசைப்பாடல்கள், சிறுவர் சிறுகதைகள், சிறுவர் நவீனம், சிறுவர் கவிதைகள், பயணக்கட்டுரை, வரலாறு, மொழிபெயர்ப்பு என்பவற்றைக் குறிப்பிடலாம்.

## பொதுச்சேவைகள்:-

ஆரம்பத்தில் இருந்து பொதுச்சேவையிலும் ஆலய சமய சேவைகளிலும் ஈடுபாடு கொண்ட இவர் தொடர்ந்து இன்றுவரை பொதுச்சேவையில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்.

ஏற்கனவே பதினேழு சங்கம், மன்றங்களில் முக்கிய பதவிகள் வகித்த இவர் அவற்றில் சிலவற்றை மாதிரிச் சங்கங்களாக மாற்றிய பெருமை யுண்டு. இவர் ஆலயத்தில் செய்த சேவைகள் இன்னும் சான்று பகர்வதாக இருக்கின்றன. இப்போதும் சிலவற்றில் தலைவர், செயலாளர், பொருளாளர், கணக்காய்வாளர் எனப் பல பதவிகளை வகித்து வருகிறார். செய்யும் சேவையில் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கது:

## பக்தி மார்க்கச் சேவை:-

திருவாசகத்தை சிங்களத்தில் மொழி பெயர்ப்பது

மயிலாடுதுறை தருமபுரம் ஆதீனம், பன்னிரு திருமுறை மொழி பெயர்ப்புத் திட்டத் தலைவர் மறவன் புலவு சச்சிதானந்தன் அவர்களுக்காக மொழி பெயர்ப்பாளர்கள் திரு இ.வடிவேல், திரு.டி.ஜி.லிண்டன் ஆகியோரை இணைத்துக் கொண்டு ஒருங்கிணைப்பாளராக இத்திட்டத்தை நிறை வேற்றுவது. ஏற்கனவே பல பதிகங்கள் இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. இணையத்தளம் - www.thevaaram.org. இல் இதனைப் பார்வையிடலாம்.

## ஞான மார்க்கச் சேவை:-

ஞான, தியான ஆங்கில நூல்களை தமிழில் மொழிபெயர்ப்பது. இதுவரை ஏழு ஆங்கில நூல்கள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

## பொதுச்சேவை:-

கண்டி மலையக கலைகலாசாரச் சங்கத்தின் செயலாளராக இருந்து செய்யும் சேவைகள்.

மக்களுக்கு மாண்புறு சேவை செய்பவர்களுக்கு இரத்தின தீபம் முதல் பல விருதுகள் வழங்கிக் கௌரவிப்பது. இதன் விபரங்களை Rathna Theepam முகநூலில் காணலாம். தொடர்புகளுக்கு மின்னஞ்சல் முகவரி - kal.rathnatheepam@yahoo.com.sg கல்வியில் சிறந்த சித்தி எடுக்கும் மாணவர்களைப் பாராட்டி சான்றிதழ்கள் வழங்குவது.

# சிறுகதை

# கவரி மான்

**முகில்வண்ணன்**

பொலீஸ் நிலையத்திலிருந்து வந்ததில் இருந்து அந்த வீடு அமர்க்களப் பட்டது. கோபால் மாஸ்டர் படு கோபத்தில் இருந்தார். வீட்டுச் சாமான்களை எல்லாம் போட்டு உடைத்தார். என்னவெல்லாமோ சொல்லிப் பேசிக் கொண்டிருந்தார்.



குழந்தைகள் மூவரும் - அரவிந், பிருந்தா, திவ்யா ஒவ்வோர் மூலையில் 'உம்' என்று உட்கார்ந்து இருந்தனர். அவருடைய பேச்சுக்குக் குழந்தைகள் என்ன செய்ய முடியும்? பருந்தைக் கண்ட கோழிக் குஞ்சைப் போன்று ஆகிவிட்டனர்.

“கொம்மா உங்களைத் தன்னிட்டத் தரட்டாம் என்று பொலிசில் முறைப்பாடு கொடுத்திருக்கிறாள். உங்கட விருப்பம் இல்லாம நான் உங்களத் தடுத்து வைத்து இருக்கிறேனாம். நாளைக்கே உங்களை எல்லாம் கொண்டு ஒப்படைத்து விட்டு நானும் எங்காவது போறன். உங்களுக்காகவே குருவி மாதிரிச் சேர்த்து வீடு கட்டினன். பொருட்கள் எல்லாம் தேடினன். இதெல்லாம் இனி எதற்காக? நீங்க இல்லாம அது யாருக்குப் பயன்படப் போகுது.?” என்று கூறிக் கூறித்தான் கோபால் மாஸ்டர் சாமான்களை எல்லாம் உடைத்துக் கொண்டு இருந்தார். அவருக்கு அவளில் அத்தனை கோபம்.

ஆத்திரம் சற்று அடங்கியபோது சிந்திக்கலானார். “சே... வீட்டுக்குப் பக்கத்தில் ஒரு கண்ணிவெடி வெடிச்சா நல்லது. வீடு தரைமட்டமாகிப் போகும். என்னையும் அழிச்சாலும் பரவாயில்லை. இனி நான் வாழ்ந்து என்ன பயன்? யாருக்காகப் பயன்படப் போகிறேன்? அந்தக் கால கட்டத்தைக் கடந்து விட்டேன்... இல்லாவிட்டால் ஒரு 'கிறனைட்' வைத்து விட்டால் ..... இத்தனை காலமாக கட்டிக் காத்து வந்த மானம் மரியாதை இன்று பொலீஸ் நிலையம் சென்று வந்ததும் போய்விட்டதே. இனி என்ன செய்தால்தான் என்ன? எப்படிப் போனால்தான் என்ன?”

“ஒவ்வொருத்தனும் கேட்கிறானே, என்ன மாஸ்டர் இஞ்சால பக்கம்? பொலீஸில ஏதும் கேஸா என்று. ஒவ்வொருத்தரும் ஒரு மாதிரிப் பார்க்கிறானுகள். நான் இவனுகளுக்கெல்லாம் பதில் சொல்ல வேணுமா?”

பிருந்தா அவரது செல்லம். வீட்டில் கடைக்குட்டி. மெல்ல மெல்லக் கிட்டே வந்தாள். ஏறிட்டுப் பார்த்தார். “நான் உங்கள விட்டுத்துப் போக மாட்டன். எனக்கு நீங்க இல்லாம நித்திரை வராது.....” அவருடைய கன்னங்களில் கண்ணீர் கோடிட்டது.

இதுவரை அடக்கி வைத்திருந்த பாசம் அவரை உசுப்பி விட்டது. அவளை அள்ளி மடியில் இருத்தி அணைத்துக் கொண்டு அழுதார்.

"எனக்கு என்ன உரிமை இருக்கிறது உங்களை வைத்திருக்க... பொலீஸ் சொல்லிட்டாங்க உங்கட அம்மாட்டக் கொடுக்கட்டுமாம்..... என்று. நீங்க இல்லாம நான் எதுக்கு? உங்களுக்குப் பணிவிடை செய்யாம நான் மட்டும் தூங்குவேனா? அதாலதான் நிரந்தரத் தூக்கத்திற்கு வழி தேடுறன்..." என்று சொல்லி அழுதார் கோபால் மாஸ்டர்.

*****

சகோதரிகளுக்குக் கூடப்பிறந்த குற்றத்திற்காகத் தந்தை இல்லாததால் அவர்களை வாழ வைக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டு முப்பத்து ஐந்து வயதைக் கடத்தி விட்டான் கோபால். ஏற்கனவே மணம் முடித்து விட்ட அக்காவோடு இரு தங்கைகளுக்கும் மணவாழ்வு கண்டுவிட்ட மகிழ்ச்சியில் தனக்கு ஒரு மணவாழ்வு வேண்டும் என்ற எண்ணத்தை மறந்திருந்தான். மற்றவர்களும் அப்படி ஒன்றைச் செய்து வைக்க வேண்டும் என்று எண்ணவே இல்லை. அவன் எப்படி வாய்விட்டுக் கேட்பான்? எனக்கொரு கல்யாணம் வேண்டும் என்று.

ஐந்து வருடங்கள் முடிந்த பின்னர் கடைசித் தங்கை குழந்தைகளோடு வீட்டுக்கு வந்திருந்தாள் கண்களைக் கசக்கிக் கொண்டு.

அவன் சொல்லி விட்டான். "உங்களுக்கு எத்தனை நாள் வேண்டுமானாலும் நான் சாப்பாடு போடுறன். நீங்க இங்கே இருக்கலாம். ஆனா உங்கட குடும்ப விசயத்தில நான் தலையிட மாட்டன். பெண்களைப் பத்தி எனக்கு நல்லாத் தெரியும். புருஷனுக்கு எதிரா நடவடிக்கை எடுத்தால், புருஷன் பக்கம் நின்று அண்ணனைத்தான் எதிர்ப்பாங்க. இதை எத்தின சினிமாவில பார்த்திட்டம்..."

"என்னண்ணா! நீங்க சொல்றது? இத்தனை வருஷமா என்னைத் துன்புறுத்தினார்.. நீங்க கொடுத்த சீதனம் எல்லாத்தையும் அழித்தார்... நான் வந்தனானா? இப்போது அவர் வேறு ஒருத்தியையும் கூட்டித்துப்போய் குடும்பம் நடத்துறார்.. இன்னும் அவருடன் வாழ்வேன் என்று நம்புறீங்களா அண்ணா?........."

"இந்தப் பெண்களை நம்பவே முடியாது. அவன் நாளைக்கு வந்து நான் அவளை விட்டுத்தன் என்று கெஞ்ச நீயும் அவனுடன் போய் வாழத்தான் போகிறாய்..."

"இல்லண்ணா! சத்தியமா இல்ல... இனி அவரிடம் இருந்து பிரிஞ்சி வாழப்போறன். 'டைவோர்ஸ்' எடுக்கிற முடிவோடதான் வந்திருக்கிறன். இனி அந்த வீட்டு வாசற்படி மிதிக்க மாட்டன்." என்றாள்.

"இப்ப ஆத்திரத்தில் இப்படிச் சொல்கிறாய். இன்னும் ஒரு வருசம் சுணங்க... பிறகு பார்ப்பமே......" அவன்.

“இல்லண்ணா! இனி நான் எந்தக்காலத்திலும் சேர்ந்து வாழப்போற தில்லை.”

“சரி அப்படி என்டா நீ இங்க நிற்கலாம். உன்னையும் குழந்தைகளையும் காப்பாற்றுவது எனக்குக் கஷ்டமில்லை. எனக்கென்று குடும்பமா குழந்தை குட்டிகளா? இனி எனக்கு எல்லாம் நீயும் உன்ர குழந்தைகளும்தான்.” என்றவன் அன்றிலிருந்து இன்றுவரை அவளையும் குழந்தைகளையும் பாதுகாத்து வந்தான். தங்கைக்கும் குழந்தைகளுக்காகவுமே தன் வாழ்க்கை முழுவதையுமே அர்ப்பணித்தான்.

தங்கையின் கணவன் அவள் வாழ்க்கையில் தலையீடு எதுவும் செய்யாததில், விவாகரத்துச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் மழுங்கிப் போய்விட்டது. செலவுக்குப் பணம் தேவை என்ற நிலையும் இருக்கவில்லை. இல்லையேல் ஜீவனாம்சம் கோரியிருப்பாள்.

மற்றும்படி குழந்தைகளுக்குத் தகப்பனாக, மாமனாக பணிவிடைகள் செய்தான் கோபால். தனது உழைப்பைச் சேர்த்து திவ்யாவுக்கு ஒரு வீட்டைக் கட்டி முடித்தான். அந்த வளவில் பாதி பிருந்தாவுக்கு வீடு கட்டத் தயார் நிலையில் இருந்தது.

மணம் முடிக்காத அண்ணாவின் உழைப்பில் தங்களுக்கும் பங்கிருக்கிறது என்று வந்த மற்றச் சகோதரிகள் ஏமாற்றத்துடன் சண்டையிட்டுப் பிரிந்து விட்டார்கள்.

“உங்களுக்குக் கணவன்மார் இருக்கிறார்கள். உங்களைப் பாதுகாக்க துணை இருக்கிறது. பானுவுக்கு இனி எல்லாம் நான்தானே? அவளுடைய குழந்தைகளின் எதிர்காலம் என் பொறுப்பு. ஆகவே நீங்கள் எவரும் என்னிடம் எதையும் எதிர்பார்க்கக்கூடாது.” என்று கூறிவிட்டான்.

போனவர்கள் போனதுதான்.

பத்து வருடங்களுக்குப் பிறகு தாய் இறந்ததற்கு ஒன்று சேர்ந்தார்கள். தங்கை பானு அண்ணாவின் உழைப்பை அபகரிக்கப் பாசாங்கு செய்கிறாள் என்று எண்ணியவர்கள் தங்கையின் பாழான வாழ்வைக் கண்டு பரிவுடன் அன்பு செலுத்தினார்கள். மீண்டும் ஒட்டி உறவாடினார்கள்.

கடைக்குட்டி பிருந்தாவுக்கு இப்போது பத்து வயது ஆகிவிட்டாலும் அவள் மாமாவின் செல்லம்தான். தன்னை ‘மாமா’ என்று அழைத்தாலும் அவன் தன்னை ஒரு தகப்பனாகவே கணித்துக் கொண்டு செயற்பட்டான். அவள் தந்தையின் பாசம் அறியாதவள்.

அதன் பிரதிபலிப்பே இந்த வீடும், இத்தனை தோட்டமும். பிருந்தாவுக்கு மாமாவே சோறு ஊட்ட வேண்டும். மாமாவைக் கட்டிப் பிடித்துக் கொண்டு படுத்தால்தான் தூக்கம் வரும். அவனுக்கும் அப்படிப் பழகிவிட்டது. அவன் இல்லாமல் அவளால் ஒரு கணமும் இருக்க முடியும் என்பது சந்தேகம்.

மூத்தவள் திவ்யா பெரிசாகியதும் சடங்கு வைத்ததில் ஒரு சிறு பிரச்சினை. இதற்கே வரிந்து கட்டிக் கொண்டு அக்கா வீட்டுக்குச் சென்றுவிட்டாள் பானு. எங்கே செல்லப் போகிறாள். இன்றல்லது நாளை வந்து விடுவாள் என்று இருந்து விட்டான்.

"எனக்கு அந்த வீட்டில் எந்த உரிமையும் இல்ல. அண்ணா வைச்சது தான் சட்டம். பிள்ளைகள் எல்லாம் சிறையில் இருப்பது போலத்தான் இருக்கிறாங்க. எங்களுக்கு எந்தச் சுதந்திரமும் இல்ல. எங்க போறது என்றாலும் அவர் விரும்பிக் கூட்டிச் சென்றாத்தான்." என்று அவள் சிணுங்கியதில் மற்றவர்களும் மனமிரங்கிச் சேர்த்துக் கொண்டார்கள்.

மூன்று மாதங்கள் கடந்து விட்டது.

இதுவரை அவள் பிள்ளைகளைப் பார்க்கவும் வரவில்லை. "சரி வாற நேரம் வரட்டும்" என்று விட்டு விட்டான்.

இப்போது அவளுக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை. நேற்று பொலிஸ் ஜீப்பில் வந்த பொலிஸ்காரர் நாளை பொலிஸ் நிலையம் வரும்படி கூறிச் சென்றார். என்ன ஏது என்று விளங்காமல் சென்ற கோபால் மாஸ்டரைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி வரவேற்றார். அவர் சிங்களவர்தான் என்றாலும் தமிழ் பேசத் தெரியும்.

"ஆ.... மாஸ்டர் நீங்களா... உங்களுக்கு எதிராக ஒரு 'கொம்பளைண்ட்' வந்து இருக்கிறது.... உட்காருங்க....." ஒரு தமிழ்ப் பொலிஸ்காரரை அழைத்து அதை வாசித்துக் காட்டச் சொன்னார்.

'செல்லையா பானுமதி. வயது 45. இந்து. பிள்ளையார் கோவில் வீதியை வசிப்பிடமாகக் கொண்ட நான் தரும் முறைப்பாடாவது, எனது அண்ணன் செல்லையா கோபால் மாஸ்டர் என்பவர் என்னை எனது கணவரிடம் இருந்து பலவந்தமாகப் பிரித்து என்னையும் எனது குழந்தைகளையும் சட்டவிரோதமாகத் தடுத்து வைத்திருக்கிறார். அவரிடம் இருந்து நான் தப்பித்து விட்டேன். அவரிடம் இருந்து எனது குழந்தைகள் மூவரையும் விடுதலை பெற்று என்னிடம் ஒப்படைக்குமாறு மன்றாட்டமாக வேண்டுகிறேன்." என்றிருந்தது.

அதற்கு மேல் கோபால் மாஸ்டரால் கேட்க முடியவில்லை. வியர்வையில் 'சேர்ட்' நனைந்து கொண்டிருந்தது. கைகள் நடுங்க கதிரையைப் பிடித்துக் கொண்டார். முகத்தைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. கூனிக் குறுகிப் போயிருந்தார். ஊரில் கூட்டப்படும் கூட்டங்களுக்குக் கோபால் வந்திருக் கிறார். அதனால் பொலிஸ் அதிகாரிக்கு அவரை நன்றாகத் தெரிந்திருந்தது. நல்ல பெயரும் பொதுமக்கள் அபிப்பிராயமும் உள்ளவர் மாஸ்டர் என்பதும் தெரிந்திருந்தது.

"உங்கட தங்கச்சி பிள்ளைகள் அவங்கட்ட விடுற நல்லங் தானே..." என்றார் அவர்.

ஓம் சார். அவங்கள நான் தடுத்த வைக்கல்ல. பத்து வருஷமா வளர்த்து வாறன். சோறு தண்ணி கொடுத்து வளர்த்த தங்கச்சியே மார்பில் உதைத்து விட்டாள். இனி மற்றங்க எதுக்கு....?"

"நாளைக்குக் கொண்டு வாங்க. நாங்க தாயிடம் ஒப்படைக்கிறம்..."

"சரி சேர். ஆனா நான் இஞ்ச வரும்போது அவள் இஞ்ச இருக்கக்கூடாது. கண்டா என்ன செய்வேனோ தெரியாது."

"சரி. மன்னிக்க வேணும் நாங்க எங்கட கடமையைத்தான் செய்யிறம்" என்று அனுப்பி வைத்தார்.

***

அங்கிருந்து வந்தவர்தான் ஆத்திரத்தில் அட்டகாசம் செய்து கொண்டிருந்தார். அப்போது பிருந்தா அவரைத் திசை திருப்பி விட்டாள். அப்போது ஆள் அரவம் கேட்டு எட்டிப்பார்த்தார். மற்றத் தங்கைகள் வந்திருந்தனர். அவர்கள்தான் பானுவுக்கு இப்போது இடம் கொடுத்துக் கொண்டிருப்பவர்கள்.

"என்ன வந்த நீங்க? இனி இங்கே யாரும் வரக்கூடாது. ஏன் இன்னும் சாகாமல் இருக்கிறேன் என்று பார்க்க வந்த நீங்களா? உங்களால்தான் அவள் இந்தளவுக்குப் போய் இருக்கிறாள். அவளைக் கொலை செய்தால் தான் என் நெஞ்சிற்கு நிம்மதி கிடைக்கும். எல்லோரும் போங்க வெளியே...." என்று கத்தினார்.

"இல்லண்ணா! நாங்க அவளுக்கு இடம் கொடுத்தது பிழைதான். அவள் இப்படிச் செய்வாள் என்று எங்களுக்குத் தெரியாது. யார் இப்படிப் புத்தி சொல்லிக் கொடுத்ததோ தெரியல்ல..."

"எனக்கு எந்த விளக்கமும் தேவையில்லை. நீங்கள் போகலாம்...." என்று கொஞ்சம் இறங்கினார்.

ஐம்பது வயதைக் கடந்த பின்னும் ஆத்திரம் - கோபத்தை அவரால் அடக்க முடியவில்லை. அவர் திருமணம் செய்யாததுதான் காரணம் என்றனர் சிலர். அவர் தங்கைகள் மீது கொண்டிருந்த அளவுக்கதிகமான பாசம் என்றனர் சிலர். நல்ல உள்ளம் என்றும் நீதிக்கும் நேர்மைக்கும் குரல் எழுப்பக் கொதித்து எழும் என்று இவர்கள் அறியவில்லை.

இப்போது அவரது இரத்தம் கொதித்துக் கொண்டிருந்தது. நெஞ்சு நிம்மதி இழந்து தவித்தது. அவருக்கு 'வி.பி' ஏறியிருக்க வேண்டும். அது யாருக்கும் தெரியவில்லை.

அன்று இரவு இரு குழந்தைகளை இருபக்கத்திலும் பிருந்தாவை மடியிலும் வைத்துக் கொண்டு கதைத்துக் கொண்டிருந்தார். அவர்கள் வந்ததிலிருந்து அவர்களுக்காகத் தான் வாழ்ந்த வாழ்க்கையை எல்லாம் எடுத்துச் சொன்னார். ஒவ்வொருவரது பெயரிலும் வைப்புச் செய்திருந்த புத்தகத்தை எடுத்துக் கொடுத்தார். மாதா மாதம் நூறு ரூபாய் போடப்பட்டிருந்தது. 'மைனர் கணக்கு'ப் புத்தகம் அவை. அவரது சேமிப்புப் புத்தகத்தைப் பிருந்தாவிடம் கொடுத்தார்.

"பிருந்தாக் குட்டி! இதில் இருப்பது உனக்கு வீடு கட்டச் சேர்த்திருக்கும் பணம். நீதான் பின் உரித்தாளி. எனக்கு எதும் நடந்தா நீதான் இதற்குச் சொந்தக்காரி." என்றார். இதை எல்லாம் ஏன் செய்கிறோம் என்று அவர் சிந்திக்கவே இல்லை.

"மாமா.. உங்களுக்கு......" என்றாள் பிருந்தாக் குட்டி.

"எனக்கு இருந்த செல்வமே நீங்கதானே. நீங்க போனாப் பிறகு எனக்கு எல்லாமே போய்விடும். எனக்கெதுக்கு இதெல்லாம்? எனக்கென்று நான் எதுவும் சேர்க்கவில்லையடா..." என்றவருக்கு ஒரு சின்ன ஆசை எழுந்தது. 'இந்தக் குழந்தைகள் நாளைக்குப் போய்விடுவார்கள். இவர்கள் அணைப்பிலே எனது உயிர் பிரிந்துவிடாதா?' என்ற எண்ணம் எழுந்தது. பிள்ளைகளை அணைத்துக் கொண்டார். விடிந்தால் போய் விடுவார்களே என்ற ஏக்கம். நல்ல உள்ளங்கள் நினைப்பது சில வேளை நடந்துவிடுவதும் உண்டல்லவா?

நெஞ்சுக்குள் குத்துவது போன்ற ஓர் உணர்வு. மாலை பொலிஸ் நிலையம் சென்று வந்ததிலிருந்து தண்ணீர் கூடக் குடிக்கவில்லை. இரவு பத்து மணிக்கும் மேலாகிவிட்டது. இதுவரை எவரும் சாப்பிடவும் இல்லை.

நெஞ்சு வலி கூடக் கூட அவருக்கு ஆலய மணி அடிப்பது போன்று ஆனந்தமாக இருந்தது. அழைப்போசை காதில் விழுவது போன்ற ஆனந்தம். பிள்ளைகளை அணைத்திருந்த கைகள் சோர்ந்து விழுந்தன. அவர் சரிந்தார். அப்போதுதான் பிள்ளைகள் "மாமா மாமா" என்று கதறினர். "எனக்கு ஒன்றுமில்லை.... நெஞ்சு... வலிக்குது..." என்று சொல்வதற்கே பாடாய்ப் போய்விட்டது. அரவிந் 'விக்ஸ்' எடுத்துத் தேய்த்து விட்டான்.

"பிருந்தாக்குட்டி பக்கத்தில் வாம்மா......" குழந்தை பயந்து போய் நின்றிருந்தாள். திடீரென அவளுக்கு ஒரு மின்னல் கீற்று. தேவர் மகன் படம் பார்த்தபோது மாமா சொன்ன ஞாபகம். அது போல் மாமா இப்போது துடிக்கிறார்.

சுவாமி படத்துக்கு முன்னால் சென்று "கடவுளே மாமாவை அமைதிப்படுத்து. அவரை நிம்மதியாகத் தூங்கவிடு." என்று வேண்டிக் கொண்டவள் பக்கத்தில் வந்தமர்ந்து மாமாவின் தலையை எடுத்து மடியில் வைத்துக் கொண்டாள்.

"மாமா.... போற்றிப் பாடடி பெண்ணே...." என்றாள். அவளுக்கு... எப்படி இத்தனை... தைரியம்...? ஆண்டவன் கொடுத்ததோ...?

அவருடைய நெஞ்சைத் தடவியபடி 'போற்றிப் பாடடி பெண்ணே' பாட்டைப் பாடினாள். பிள்ளைகள் பயந்து விடக்கூடாது என்று கண்களை மூடினார்.

அவர் தூங்கி விட்டார் என்று பிள்ளைகள் எண்ணின. பாடல் முடிந்ததும் அவருடைய தலையைக் கீழே தூக்கி வைத்தபோது மரத்துப் போய் இருந்தது. அவளால் தூக்க முடியவில்லை. அரவிந் வந்து தூக்கினான். அவர் மீளாத் துயிலில் ஆழ்ந்து விட்டார் என்று தெரிந்தது.

"மாமா...!" என்ற மூன்று குழந்தைகளின் சத்தம் கேட்டு அயலவர் யாரும் வரவில்லை. "யாரோ மண்டையைப் போட்டு விட்டார்கள். காலையில் பார்க்கலாம்" என்று 'லைட்'டை அணைத்து விட்டுத் தூங்கச் சென்று விட்டார்கள்.

மாமா நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருப்பதைக் கண்ட பிள்ளைகள் இரவு முழுவதும் தூங்காமல் அழுது கொண்டிருந்தனர்.

"அண்ணா உனக்கு நானே எமனாக வந்து விட்டேன்" என்று நாளை வந்து ஒப்பாரி வைத்து என்ன பயன்? போன உயிர் திரும்பி வரப் போகிறதா?
அவர் செய்ததை ஊர் உலகம் நாளை போற்றத்தான் போகிறது.■


வரவு

இதழ் 10 – 2012 செப்டம்பர்

**பூங்காவனம்**

கலை இலக்கிய சமூக சஞ்சிகை



பிரதம ஆசிரியர் – ரிம்ஸா முஹம்மத்
தொடர்புகளுக்கு:-
'பூங்காவனம்'
21E, சிறி தர்மபால வீதி
கல்கிசை, இலங்கை.

Phone:-
0094(0)77 5009 222
0094(0)71 9200 580

Email:- bestqueen12@gmail.com

Website:-
www.bestqueen12.blogspot.com

தனிப்பிரதி:-80/=

**தொடர் கவிதை...**

# ஈழ மகள் தேடுகிறாள் – 02

## உறவைத்தேடும் உறவின் புலம்பல்

(ஈழமகள் தேடுகிறாள் தொடர்ச்சி.....)

*- புதுமை வாணன் -*

கண்ணீரால் ததும்பி
நிதம் கவலையால் கலைந்தோம் நாம்!
காலத்தின் கட்டாயத்தால்
கண்ணீராய் கலங்குகிறோம் நாம்!

கணவன் பிள்ளை யென
கண் நிறைந்த தேடலாய்
கதறியழும் பாடலாய்
காற்றில் கலந்த சோகமிது.

உறவைத் தேடும் உறவுகளாய்
உலா வருகின்றோம்.
உணர்வோடு வாழ்ந்தவர்கள் தான்
உண்மை புரியாமல் ஊசலாடுகின்றோம்.



கவலைக் காயங்கள் பெருகவே.
கண்ணீர் மட்டும் மருந்தானது.
கண்ணகியாய் மாற மனசில்லை
எங்களுக்கு
கண்ணீர் திவலைகள் எம் கண்ணோடு
மறையட்டும்.

உடல் வளர்க்கும் உணவு கூட
உள் எடுக்க முடியவிலை
உண்ண உணவிருந்தும் – எம்
உள்மனம் முயலவிலை

உடன் உண்ட உறவெலாம்
ஊர் மண்ணுண்ட உயிரெலாம்
உள் மனசுக்குள் மாரடிக்க
உயிருக்குப் போராடிய உறவுகள்
கண்முன்னே.

பசி இல்லை எங்களுக்கு
பாரமான நினைவுகளால்
உயிர் இல்லை எங்களுக்கு
உடல் மட்டுமே ஊசலாடுது

நிலமுழுது பயிர் செய்து
நின் என் பசி தீர்த்து போனவரே
நீ இருக்கும் இடம் சொல்லு
நில்லாமல் வருகிறேன். உயிர்
இருக்கும் இடம் தேடி

உன்பிள்ளைகள் தேடுவினம்
உயிரோடு இருக்கிறீரோ?
ஓர் செய்தி கூறுமப்பா – உன்
ஓசை கேட்க தேடுகின்றோம்.

(தொடரும்....)

# மட்டு நகரில் மணம் வீசும் 'தென்றல்'



மட்டு நகரிலிருந்து ஒரு மாதாந்தப் பத்திரிகை வெளிவர வேண்டுமென்ற உயரிய நோக்கோடு காலஞ்சென்ற சிரேஸ்ட ஊடகவியலாளரும், தென்றலின் உருவாக்கத்திற்கு உயிரூட்டிய என் குருவுமான வீ.சு.கதிர்காமத்தம்பியுடன் இணைந்து 'தென்றல்' மாதாந்தப் பத்திரிகையை 2001ம் ஆண்டு வெளிக்கொணர்ந்தேன்.

இந்நிகழ்வு மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலையில் தென்றல் மாதாந்தப் பத்திரிகை ஆசிரியர் க.கிருபாகரன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக கலாசாலைமுதல்வர் வி.தெய்வேந்திரன் கலந்து சிறப்பித்தார்.

இம்மாதாந்தப் பத்திரிகை 11 இதழ்களை வெளிக்கொணர்ந்த நிலையில் நிதிவளம் இன்மை காரணமாக உதிர்ந்து போனது. எனினும் காலக்கிரமத்தில் 2008.04.06 அன்று 'தென்றலை', தற்போது வெளிவரும் சஞ்சிகை வடிவில் அதே மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலை மண்டபத்தில் எனது தலைமையில் மாபெரும் விழாவொன்றினூடாக வெளிக் கொணர்ந்தேன். இந்நிகழ்வுக்கு மட்டக்களப்பு ஹரித்தாஸ் எகெட் நிறுவனப் பணிப்பாளர் அமரர் வணபிதா சிறிதரன் சில்வெஸ்டர் பிரதம அதிதியாகவும் மூத்த எழுத்தாளர் இரா.நாகலிங்கம் (அன்புமணி), கதைமாமணி மாஸ்டர் சிவலிங்கம் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகவும் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிலையில் காலாண்டு இதழாக 'தேசிய பல்சுவை குடும்ப சஞ்சிகை' என்ற மகுட வாசகத்துடன் 'தென்றல்' அனைத்துத் தரப்பினரையும் திருப்திப் படுத்தும் நோக்கோடு க.கிருபாகரனை ஆசிரியராகவும் மட்டக்களப்பின் முதுபெரும் தமிழறிஞரும், மூத்த எழுத்தாளரும், இலக்கிய விருதுகள் பல பெற்றவருமான இரா நாகலிங்கம்(அன்புமணி) அவர்களை ஆலோசகராகவும் திருமதி கவிதா கிருபாகரன், இ.கோபாலபிள்ளை, கலாபூஷணம் ஆறுமுகம் அரசரெத்தினம், வீ.கே.ரவீந்திரன் ஆகிய பண்பட்ட

எழுத்தாளர்களை ஆசிரியர் பீட உறுப்பினர்களாகவும் கொண்டு வெளிவந்து இன்று 'தென்றல்' இதமாக வீசுகிறது.

இந்நிலையில் சிறு சஞ்சிகையாளர்கள் எதிர்நோக்குகின்ற தடைகள், சோதனைகள், விமர்சனங்கள் அத்தனையும் தென்றலுக்கும் உண்டு. ஆரோக்கியமான விமர்சனங்களை ஆலோசனைகளாக ஏற்று தென்றல் வெளிவருகிறது.

இந்த அடிப்படையில் 15வது இதழின் வெளியீட்டு விழா 24.09.2011 அன்று பொது நூலக கேட்போர் கூடத்தில் எளிமையான முறையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் முன்னாள் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், தொல்லியல் ஆய்வாளருமான செல்வி க.தங்கேஸ்வரி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வு 15 அகல் விளக்கேற்றலுடன் ஆரம்பமானது. இவற்றில் 15வது சஞ்சிகை வெளியீடு, தென்றல் சஞ்சிகைக்கென இயற்றப்பட்ட பாடல் இறுவட்டு வெளியீடு என்பன முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந் திருந்தன. இதுவரை (ஆடி - புரட்டாதி 2012) 18இதழ்களை வெளியிட்டுள்ள நிலையில் தென்றலை அமரர் வீ.சு.கதிர்காமத்தம்பியின் உயரிய சிந்தனையை இலக்காகக் கொண்டு விமர்சனங்களை உள்வாங்கி புதுப் பொலிவோடு தொடர்ந்து வெளிக்கொணர்வதற்கு தென்றல் ஆசிரிய பீடம் உறுதி பூண்டுள்ளது.

**- க.கிருபாகரன்**

# – தமிழறிவோம் –

மரம் வெட்டுகின்ற ஆயுதம் எழுத்தில் 'கோடரி' என்றே காணப்படுகின்றது. 'கோடாலி' என்பது இப்போது பேச்சுவழக்குச் சொல்லாகக் கருதப்படுகின்றது.

**'கருங்காலிக் கட்டைக்கு நாணாக் கோடாலி
இருங்கதலித் தண்டுக்கு நாணும்......**

*- (ஔவையார் பாடல்)*

**'கோடாலி தன்னுள்ளே மரமது நுழைந்துதன்
கோத்திரமெலாம் அழிக்கும்**

*- (குமரேச சதகம்)*

போன்ற பழம் பாடல்களில் **'கோடாலி'** என்றே வருகிறது. இலக்கியம் கண்ட பின்புதான் இலக்கணம். எனவே **'கோடாலி'** என்று எழுதுவதில் தவறில்லை.

**-(திருவோணன்)-**

# 'வயிற்றெரிச்சல்' கதைகள்

- இணுவை இரகு

கதை - 04

## ஒரு பண்டிதரின் வயிற்றெரிச்சல்

நான் ஒரு தமிழ்ப்பண்டிதர்; ஆசிரியருங்கூட. வெறும் தமிழ்ப்பண்டிதர் இல்லை; தமிழ் இலக்கணம், இலக்கியம் முற்றுமுழுதாக கற்றுத் தெளிந்த பண்டிதர். நல்ல பேச்சாளர்; கதாப்பிரசங்கம், வில்லுப்பாட்டு முதலியனவும் செய்வதுண்டு.

மனைவி, ஆறுகுழந்தைகள் உட்பட அம்மா மற்றும் இரண்டு தங்கைமாரும் எனது பராமரிப்பில் உள்ளார்கள். எனது குடும்பச் செலவிற்கு எனது ஆசிரியர் சம்பளம் பாதி மாதத்திற்குக்கூட போதாது. இந்தக்காலத்தில் தமிழ்ப்பாடத்திற்கென யார் 'ரியூசன்' வைத்துக்கொள்கிறார்கள்? அப்படியிருந்தும் ஏதோ இரண்டொரு 'ரியூசன்'னுடனும், பாதி வயிற்றுடனும் காலம் ஒருமாதிரி ஓடுகிறது.

இதுவெல்லாம் எனது தலையெழுத்து! ஆனால் எனது 'வயிற்றெரிச்சல்' இதுவல்ல; நாடுபோற்றும் நல்ல பேச்சாளன் என உள்ளூரிலும் வெளியூரிற்கும் அழைத்துச் செல்வார்கள். பல்வேறுவித தலைப்புக்களிலும் மணித்தியாலக்கணக்காகத் தங்குதடையின்றி உரையாற்றுவேன். அழைத்துப் போகும்போது காரில் அழைத்துச் செல்வார்கள். கூட்டம் முடிந்து வரும்போது பல சமயங்களில் அம்போ! நடைராஜாதான்!

கூட்டம் என்னவோ சிறப்பாகத்தான் நடைபெறும். எனக்குப் பொன்னாடை, பூமாலை, விருது கூடக்கிடைக்கும். புகைப்படம் எடுப்பார்கள்; பத்திரிகைகளில் வரும். பேட்டிகாணுவார்கள்; பத்திரிகைகள் பிரசுரிக்கும். சில வேளைகளில் தொலைக்காட்சி களில்கூட நான் வருவதுண்டு. கைதட்டலுக்குப் பஞ்சமில்லை.

இவையெல்லாம் என் குடும்பத்துக்குச் சோறு போடுமா? பூமாலை அன்றே கசங்கிவிடும். பொன்னாடையை உடுக்க முடியுமா? விருதுகளை வைக்க வீட்டில் அலுமாரி இல்லை; புகைப்படங்களைப் போட 'அல்பம்' வாங்கப்பணம் இல்லை.

'புரிகிறதா எனது வயிற்றெரிச்சல்'!

# சொல்வளம் பெருக்குவோம் - 38

பன்மொழிப்புலவர். த. கனகரத்தினம்

## மொழியாசிரியர்கள் துறையாசிரியர்கள்

அறிவியல் வளர்ச்சி பெற்றுவரும் இக்காலத்தில் சொல்வளம் பெருகுதல் வேண்டும். துறை நிபுணர்கள் இருக்கிறார்கள். மறுபுறத்தில் தமிழ் அறிஞர்கள் இருக்கிறார்கள். துறை நிபுணர்கள் எல்லாரும் தமிழ் அறிஞர்கள் அல்லர். தமிழ் அறிஞர்கள் எல்லாரும் துறை நிபுணர்களும் அல்லர். சொல்வளம் பெருக்க வேண்டுமெனின் துறைநிபுணர், தமிழறிஞர் குழு இரண்டும் இணைந்து செயற்படல் வேண்டும். சொல்லாக்கம் அதைச் செய்பவரின் பின்னணி, அவர் வாழ்ந்த காலச் சூழ்நிலை என்பவற்றைப் பொறுத்தே அமைகிறது என்பது அறிஞர்கள் கொள்கையாகும். ஓரளவுக்கு அவரது விருப்பு வெறுப்பு ஆகியவற்றையும் பொறுத்து அமையலாம். அறிவியல் நூல்கள் வளர வளர அறிவியல் துறையில் எழுதுவோர் தொகை உயர உயரச் சொற்களில் எளிமையும், நடையில் தெளிவும் இயற்கையாகவே மலரும். உதாரணமாக **anatomy** என்ற சொல்லை எடுத்துக் கொள்வோம். இதற்கு **'மனுஷ அங்காதி பாதம்'** என 1872 இல் டாக்டர் **சாமுவேல் கிறீன்** மொழிபெயர்த்தார். இன்று அது **'உடற்கூறியல்'** ஆகிவிட்டது. **Light house** என்பதற்குத் **'தீபஸ்தம்பம்'** என்ற வழக்கு இருந்தது. இன்று **கலங்கரை விளக்கம்** என்ற சொல் வழக்கத்தில் வந்திருக்கிறது. இச்சொல் பண்டைய இலக்கியங்களிலும் பயின்று வந்த சொல்லாகவும் அமைந்துவிட்டது. **Department** என்பதற்கு **இலாகா, பகுதி** என்ற சொற்கள் வழங்கி வந்த ஒரு காலமும் உண்டு. இப்போது அவற்றிற்குப் பதிலாகத் **'திணைக்களம்'** என்ற சொல் வழக்குப் பெற்று விட்டது. எனவேதான், அறிவியலைப் பொறுத்த வயில் சொல்வளம் பெருக வேண்டின் அறிவியல் நூல்கள் தமிழில் நிறைய வெளிவருதல் வேண்டும்.

மொழியாசிரியர்கள் துறையாசிரியர்களின் ஒத்துழைப்பும் தமிழ் வளர்ச்சிக்கு அவசியம். எல்லாப் பாடங்களையும் ஆங்கில மொழி வாயிலாகக் கற்ற காலமும் உண்டு. அதனாற்றான் ஆங்கில மொழி வளர்ச்சி பெற்றதென்பர் ஒருசாரார். பாடசாலைகளில் தாய்மொழிக் கல்வியேற்பட்டபின் தமிழ்மொழி வளத்திற்கு **அறிவியல், பொருளாதாரம், சமூகவியல்** ஆகிய துறையாசிரியர்களின் பங்கு குறைவு எனப் பேசப்படுகிறது. மொழியாசிரியர் போன்று துறையாசிரியர்கள் தமிழ்மொழி வளர்ச்சியிலும் அக்கறை கொள்ளல் வேண்டும். மொழியாசிரியரின் கடமைதான் மொழிவளர்ச்சி என்றிருத்தல் பிழை. இருபகுதியினரும் ஒத்துழைத்தாற்றான் தமிழ்வளரும்; தமிழ் வளம் பெருகும்.

**தந்தி, தொலைஎழுதி (Telex), மின்னணுத் தட்டச்சு (Electronic type writer),** மின்னணுத்துறை தந்த **கணிப்பொறி** ஆகியவற்றைத் தமிழ் பயன்படுத்தல் வேண்டும். இதற்குத் தேவையான மாற்றங்களையும் நாம் வரவேற்க வேண்டும் என அறிஞர் கருதுகின்றனர்.

மேலே கூறப்பட்ட காரணங்கட்காக தமிழ் வரிவடிவம் சீரமைப்பை ஏற்க வேண்டும் என வாதப்பிரதிவாதங்கள் நடந்தன. ஈற்றில் **இந்தியா - தமிழ்நாடு, இலங்கை, சிங்கப்பூர், மலேசியா** ஆகிய நாடுகள் 13 எழுத்துக்களைச் சீரமைப்பதை ஏற்றுக்கொண்டன. நடைமுறையிலும் வந்துள்ளன.

**ணை**
**ணா ணொ ணோ லை**
**னை**
**றா றொ றோ**
**னா னை னொ னோ**

என்பவையே அவ்வாறு சீரமைக்கப்பட்ட எழுத்துக்களாகும். **கா, சா** வன்னா போன்று **ணா** வும், **றா** வும், **னா** வும், அரவு பெறுதல் சீராக இருப்பதென்பது உண்மைதான். **கணினி, தட்டச்சு** என்பவற்றின் மூலம் பொறித்தலும் இலகுதான் எனினும் இடைக்காலத்தில் பாடநூல்களிலும் நடைமுறையிலும் சிக்கல்களும் இல்லாமல் இல்லை. இயந்திரங்களுக்கு நாம் வளைந்து கொடுப்பதா? இயந்திரங்களை எமது உபயோகத்திற்கு ஏன் வளைத்து எடுக்கக் கூடாது என்று வாதாடுபவர்களும் உளர். இதற்குக் காலந்தான் பதில் சொல்லும்.

## தெறிகதிர்-27

கலாநிதி **கோணாமலை கோணேசர்,**
மண்டூர்

கதைகூறும் குறள் என்னும் தலைப்பில் அரிய செய்திகளை வெளியிட்டு வருகிறீர்கள். செங்கதிர் செய்யும் மெச்சத்தக்க சிறந்த பணி இதுவாகும். எனது பாராட்டுக்கள்.

செங்கதிர் 56 வது வீச்சில் அற்புத சிந்தனையாளர் ஜி.டி.நாயுடு பற்றிய கட்டுரை கற்போரைக் கவர்வதோடு மாத்திரமல்லாது அவர்களை ஊக்குவிக்கும் சக்தி வாய்ந்த தன்மையுடையது என்று கூறலாம்.

நான் கோயம்புத்தூருக்குச் சென்றிருந்தபோது அவர் பற்றிய சில செய்திகளை அறிந்தேன். இவைகளை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்:- இவர் ஒரு புதுமையான பழத்தோட்டம் வைத்திருந்தாராம். இத் தோட்டத்தில் விதையில்லாத பழம் தரும் பப்பாளி, முள் இல்லாத தோடை, உயர வளராத வாழை போன்ற பழ மரங்களை விருத்தி செய்திருந்தாராம். இவர் புதுமையான முறையில் வீடுகள் அமைப்பதில் ஈடுபட்டாராம். இந்த முயற்சியில் சிறந்த அம்சம் என்னவெனின் காலையில் வீட்டுக்கு அத்திவாரம் இட்டு மாலையில் வீட்டில் குடிபுகுவதாகும். அதாவது வீட்டுக்குத் தேவையான பகுதிகள் ஏற்கனவே உருவாக்கப் பெற்று விடுகின்றன. அத்திவாரம் இட்டபின் உருவாக்கப்பெற்ற பகுதிகளைப் பொருத்தினால் வீடு உருவாகிவிடுகிறது. இப்படி ஆச்சரியப்படத்தக்க வகையில் அற்புதமாக அமைந்த வீடுகளைத் திறந்து வைப்பதற்கு அப்போது இந்தியப் பிரதமராகப் பணியாற்றிய ஜவஹர்லால் நேரு அவர்களே வருகைதந்தாராம்.

ஜி.டி.நாயுடுவின் சிந்தனையைப் பயன்படுத்தினால் இந்தியா இலங்கை அகதிகளுக்காக அன்பளிப்பாக அமைப்பதற்கு முன்வந்துள்ள வீடுகளை விரைவில் அமைத்து அல்லல்படும் மக்களுக்கு உதவலாம்போல் தோன்றுகிறது.

# மட்டக்களப்பு மாநில மண்வாசனைச் சொற்கள் பட்டியல்– IX



மட்டக்களப்பு மாநிலம் எனப்படுவது வடக்கே வெருகல் ஆற்றையும் தெற்கே குமுக்கன் ஆற்றையும் கிழக்கே வங்காள விரிகுடாக்கடலையும் மேற்கே ஊவாமலைக்குன்றுகளையும் எல்லைகளாகக் கொண்ட நிலப்பரப்பாகும். தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தையும் அம்பாரை மாவட்டத்தையும் உள்ளடக்கிய பிரதேசம் எனக் கொள்ளலாம். இப்பிரதேசத்திற்கென இப்பிரதேசத்தில் மட்டுமே வழங்கி வரக்கூடிய வட்டார வழக்குத் தமிழ்ச்சொற்கள் ஏராளம் உள்ளன. அவை படைப்பிலக்கியங்களிலும் இப்பிரதேச எழுத்தாளர்களால் எடுத்தாளப்படுகின்றன. அத்தகைய மண்வாசனைச் சொற்களை 'செங்கதிர்' வாசகர்களுக்காக இப்பகுதியில் மாதாமாதம் தொடர்ந்து தொகுத்துத் தருகிறார் எழுத்தாளரும் முன்னாள் வடகிழக்குமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளருமான **திரு.செ.எதிர்மன்னசிங்கம்** அவர்கள்.

**121. இட்டுமம் - அகந்தை, இறுமாப்பு**
**122. ஈர்கொல்லி -(பேனை அழிக்கும் பொருள்)மெலிவான**
**123. வால்பிடித்தல் - பின்னால் திரிதல்**
**124. கும்மாளம் - துள்ளிக்குதித்தல்**
**125. கூத்தடித்தல் - கொண்டாட்டம்**
**126. இழுபறி - இழுத்தடித்தல்**
**127. உருப்படி - ஒரு பொருள் - ஒழுங்காக**
**128. இலா - இலுவா - உண்மை என்ன - சரி**
**129. ஒல்லி - மெலிவான - மெலிந்த**
**130. தொக்கை - பருத்த**
**131. ஒசில் - வடிவில்லாத - அழகில்லாத**
**132. தட்டுவாணி - கூடாதவள்**
**133. ஆட்டம் - ஆட்டக்காரி - ஓடுபட்டுத்திரிபவள்**
**134. கரைச்சல் - தொல்லை**
**135. தலையால தெறிப்பான் - கெட்டவன் - கூடாதவன்**

# ஏன் நடுக்கம் புவிமகளே!

ஏன் நடுக்கம் புவிமகளே! இங்குனக்குக் குளிர்ச்சுரமா?
இல்லை மனிதர்மேல் எல்லையில்லாக் கோபமா?
தான் நினைக்கும் போதெல்லாம் தாண்டவந்தான் போடுமுந்தன்
தாக்கத்தால் நிர்மாணம் தரைமட்டம் ஆகிறதே!
தேன்வழியும் இடமெல்லாம் செவ்விரத்தம் பாய்கிறதே!
சிக்கிவிட்ட உடலம் சின்னாபின்னம் ஆகிறதே!
வான் வழியில் ஏதும்கோள் மோதிவிடும் என்றேநீ
மனம் பதறி நடுங்கினையோ? வாய்திறந்து சொல்பெண்ணே!

எல்சல்வ டோரில்நீ எக்காளமிட்டதனால்
இருபதினாயிரம் மக்கள் இரையாகிப்போனாரே!
நல்லநகர் குஜராத்தில் உன்ஆட்டத்தால் பாவம்
நலிவடைந்த மக்கள்பலர் நமனுலகம் சென்றனரே!

எந்த ஒரு அறிவிப்பும் இல்லாமலே ஜப்பான்
ஈடுகொடுக்கும் நிலையின் எல்லையினைத்தகர்த்திட்டாய்!
இந்தோனேசியாவில் உன் எரிச்சலைக்காட்டியதால்
இலங்கையிலே சுனாமியால் இறந்தனர்பல் லாயிரம்பேர்!

அழக்கழ நீ குலுங்கி ஆடுவதேன் சொல்வாயா?
ஆடையெனும் நீர்நிலையை அசுத்தத்தால் நிரப்பிவிட்டு
குடித்தற்கே தண்ணீர் கொடுக்காமல் செய்பவரைக்
குட்டி அடக்கித் தலைகுனிய வைத்தனையோ?

உன்போர்வையான ஓசோனை ஓட்டையிட
உற்பத்தியாகும் வாயுவினை உருவாக்கி
அன்பான உந்தன் அழகைக் கெடுக்கின்ற
அறிவுகெட்டவர்களைநீ அடக்கிவைக்கவோ அதிர்ந்தாய்?

காடழித்து வளத்தைக் களவாடி வாழ எண்ணும்
காதகர்க்குப் பழிப்பினையைக் கடுமையாய்த் தெரிவிக்க
ஆடி அறிவுறுத்தி அவர்திருந்த அவகாசம்
அளிக்க நினைத்தாயோ? ஆரணங்கே சொல்லம்மா!

எண்ணெய் எடுத்தற்காய் எழில்மிக்க உன்மேனி
எங்கும் கைவைத்து அனுபவிக்க எண்ணியதால்
பெண்ணே விழிப்புற்றுப் பேதலித்து அதிர்ந்தனையோ?
பேசாமல் பேசி மாந்தர் பேதைமையைக் கடிந்தாயோ?

பாறை அசைவே பண்ணுகின்ற உராய்சக்தி
பாய்ந்து வெளிப்படலால் பார்நடுக்கம் வருமென்று

ஆரோ ஓர் விஞ்ஞானி ஆராய்ந்து அறிவித்தான்!
ஆனாலும் உந்தன் அதிர்வை நிறுத்திவிடும்
ஹீரோயார்? கம்ப்யூட்டர் கிடைத்ததென மார்தட்டி
கிட்டடியில் உலகத்தைக் கொண்டுவந்த கதைபேசித்
தாராளமாய்ப்புளுகும் தம்பட்டக் காரருக்குத்
தக்கபதில் கொடுக்கத்தான் எதிர்பாராத் தருணத்தில்
ஆராரோ பாடினையோ, அந்தோ உன் தாலாட்டும்
அறிவூட்டவில்லையெனின் ஆர்தான் படிப்பிப்பார்?

அணுக்குண்டை ஆக்கி அச்சுறுத்தி அகிலத்தை
அவர்கள் நினைத்தபடி ஆட்டுவிக்க எண்ணுபவர்
துணுக்குறவே உன்வலியைத் துலாம்பரமாய்க்காட்டிவிடு!
துன்மார்க்கர்கட்கெல்லாம் மதிதுலங்க வைத்துவிடு!

சண்டையிட்டுக்கொண்டே சமாதானம் பேசுகிற
சண்டாளச்சாதியினர் சரித்திரத்தை அழித்துவிடு!
அண்டை அயலாரை ஆயுதத்தால் பயமுறுத்தும்
அசகாய சூரர்களை அப்படியே விழுங்கிவிடு!

உச்சத்தில் நாம்தானே என்றதொரு உன்மத்தம்
உச்சியிலே நிறைத்துவிட்டு ஊரெல்லாம் யுத்தத்தின்
அச்சத்தில் மூழ்கவிட்டு ஆகாயத்திலும் ஆட்சி
அமைக்கத் தயார்படுத்தும் அடாவடித் தனம் தன்னால்
மிச்சமில்லாமல் சூழல்மீதும்கை வைத்துவிட்டு
மிகையாய்ப்பொருள் குவிக்கும் வேலைகளுக்காய்ப்பிறரைப்
பிச்சையெடுக்கவைத்த பேயர்கள் அனைவரையும்
பெண்ணே புவிமகளே! உன் பெரும்அதிர்வால் கலக்கிவிடு!

இருந்தாலும் அப்பாவி எம்மீது நீயிரங்கி
எப்போது அரங்கத்தில் ஏறிவந்து ஆடுவாயென்று
பருந்து ஆந்தை நாய் காகம் போன்ற பல சிற்றுயிர்கள்
பழகுகிற நடத்தைகளில் பல்வேறு மாற்றங்கள்
ஏற்படுத்தி எம்மை எச்சரிக்கை செய்துவிடு!
எங்களால் இயன்றால் எங்கேனும் வெளிகளிலே
ஓடிப்போய் நின்று உயிரையாதல் காத்திடுவோம்!
வீடு இருந்தென்ன? விதம் விதமாய் வசதிகளும்
ஆயிரந்தான் இருந்தும் உன் ஆட்டத்தின் முன்னாலே
அத்தனையும் அர்த்தமற்றதாகிவிடும் அதனை அறிவோம்நாம்!
ஆகையினால் உன்னை ஆத்திரத்திற்குள்ளாக்கா
அன்பர்களைக்காப்பாற்ற அறிவுறுத்தல் கொடுத்துவிடு.

அக்கரைச்சக்தி

# எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் வழங்கும் தமிழியல் விருது 2012

*எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் ஆண்டுதோறும் ஈழத்திலும் வெளிநாடுகளிலும் வாழ்கின்ற ஈழத்து தமிழ்ப்படைப்பாளிகளை ஊக்குவிக்கும் வண்ணம் தமிழியல் விருதும் பணமும் வழங்கிக் கௌரவித்து வருகின்றது.* ***இவ்வாண்டும் இவ் விருதினை வழங்குவதற்கு எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் செயல்வடிவம் கொண்டுள்ளது.***

## உயர் தமிழியல் விருது:

இலக்கிய மேம்பாட்டுக்கு உரமாய் உழைத்த மிகச் சிறந்த மூத்த படைப்பாளி ஒருவருக்கு எழுத்தாளர் ஊக்குவிப்பு மைய ஸ்தாபகர் **ஓ.கே.பாக்கியநாதன் உயர் தமிழியல் விருது** வழங்கிக் கௌரவிக்கும்.

## தமிழியல் விருது:

தமிழிலக்கிய மேம்பாட்டுக்கு உரமாய் உழைத்த மூத்த படைப்பாளிகள்/ ஊடகவியலாளர்கள் 10 பேருக்கு தலா பதினைந்தாயிரம் (15,000/=) பணத்துடன் **வவுனியூர் ஸ்ரீ இராமகிருஸ்ணா - கமலநாயகி தமிழியல் விருதும்** வழங்கிக் கௌரவிக்கும்.

## சிறந்த நூல்களுக்கான தமிழியல் விருது:

2011ஆம் ஆண்டில் வெளிவந்த சிறந்த 16 நூல்களுக்கும் தலா ரூபா பத்தாயிரம் (10,000/=) பணத்துடன்

⇒ சுவாமி விபுலானந்த அடிகளார் தமிழியல் விருது
⇒ புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை தமிழியல் விருது
⇒ புலவர்மணி ஆ.மு.ஷரிபுத்தீன் தமிழியல் விருது
⇒ அருட்கலைவாதிரி சு.சண்முகவடிவேல் தமிழியல் விருது
⇒ சிவநெறி புரவலர் சீ.ஏ.இராமஸ்வாமி தமிழியல் விருது
⇒ நாவலாசிரியை பவளசுந்தரம்மா தமிழியல் விருது
⇒ கலைஞர் ஒ.கே.கணபதிப்பிள்ளை தமிழியல் விருது
⇒ கல்விமான் க.முத்துலிங்கம் தமிழியல் விருது
⇒ பம்பைமடு நாகலிங்கம் - நல்லம்மா தமிழியல் விருது
⇒ வ.இராசையா தமிழியல் விருது
⇒ வணபிதா சந்திரா அடிகளார் தமிழியல் விருது
⇒ பதிவாளர்நாயகம் எஸ்.முத்துக்குமாரன் தமிழியல் விருது
⇒ வித்தியாகீர்த்தி ந.சந்திரகுமார் தமிழியல் விருது
⇒ செந்தமிழ்ச் செல்வர் சு.ஸ்ரீகந்தராஜா தமிழியல் விருது

⇒ பம்பைமடு கந்தையா ரஞ்சிதமலர் தமிழியல் விருது
⇒ கவிஞர் கல்லாறன் மு.கணபதிப்பிள்ளை தமிழியல் விருது
⇒ துறையூர் வே.நாகேந்திரன் தமிழியல் விருது

வழங்கிக் கௌரவிக்கும்

## ஓவியருக்கான தமிழியல் விருது:

மிகச் சிறந்த ஓவியர் ஒருவருக்கு ரூபா ஐயாயிரம் (5,000/=) பணத்துடன் ஓவியர் கிக்கோ தமிழியல் விருதும் வழங்கிக் கௌரவிக்கும்.

அந்தவகையில் 2012ம் ஆண்டு தமிழியல் விருதுக்கான நூல்களை தேர்வு செய்ய படைப்பாளிகளிடமிருந்து நூல்களை எதிர்பார்க்கின்றது.

இலங்கையிலும் வெளிநாடுகளிலும் வாழ்கின்ற இலங்கையைத் தாயகமாகக் கொண்ட படைப்பாளிகள் 2011ஆம் ஆண்டு தை 01 திகதி முதல் மார்கழி 31ஆம் திகதி வரை வெளிவந்த நூல்களை தேர்வுக்காக அனுப்பி வைக்கலாம்.

நாவல், சிறுகதை, கவிதை, குழந்தை இலக்கியம், சிறுவர் இலக்கியம், விடலை இலக்கியம், நாடகம், அறிவியல், ஆய்வியல், வரலாறு, பழந்தமிழ் இலக்கியம், மொழிபெயர்ப்பு, இனமத நல்லுறவு இலக்கியம், தொழில்நுட்பம் எனப் பல்துறை சார்ந்த நூல்களை தேர்வுக்காக அனுப்பி வைக்கலாம்.

தேர்வுக்காக வந்து சேரும் நூல்களில் இருந்து 2011 வெளிவந்த சிறந்த நூல்கள் நீதியானதும் சுதந்திரமானதுமான துறைசார் நடுவர் குழுவினால் தமிழியல் விருது 2012 ற்காக தேர்வு செய்யப்படும்.

தேர்வுக்காக பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக சுயமாகத் தயாரிக்கப்பட்ட விபரத்துடன் நூலின் 4 பிரதிகளை 30.11.2012 க்கு முன்னர் அனுப்பி வைக்கவேண்டும்.

ஒரு படைப்பாளி எத்தனை வகையான படைப்புகளையும் அனுப்பி வைக்கலாம்.

பணமும், தமிழியல் விருதும் எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் நிபந்தனைகளுக்கு அமைய வழங்கப்படும்.

**அனுப்பவேண்டிய முகவரி:**
**டாக்டர் .ஓ.கே.குணநாதன்.**
**மேலாளர், எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம்**
**இல.64, கதிர்காமர் வீதி,**
**அமிர்தகழி, மட்டக்களப்பு, இலங்கை,**
**தொலைபேசி இல:- 0776041503**
**மின் அஞ்சல் - okkuna@gmail.com**

# கொழும்புத் தமிழ்ச்சங்கம் நடத்திய அமரர் இலங்கையர்கோன் ஞாபகார்த்தச் சிறுகதைப்போட்டி முடிவுகள்

முதற் பரிசு ரூபா 15,000/= **'தமிழ்ப் பௌத்தன்'**
பரிசு பெறுபவர் - வேலாயுதம் சிவராஜா,
மகாத்மா வீதி,அளவெட்டி

இரண்டாம் பரிசு ரூபா 10.000/= **'மீளவும் வாழ்வேன்'**
பரிசு பெறுபவர் - எஸ்.பி.கிருஷ்ணன்
244/4, கண்டி வீதி, அரியாலை யாழ்ப்பாணம்

மூன்றாம் பரிசு ரூபா 7.500/= **'கனவுகள் கலைந்தபோது'**
பரிசு பெறுபவர் - அனுராதா பாக்கியராஜா,
'ஜெயசதனம்', களுவாஞ்சிக்குடி

ஊக்குவிப்புப் பரிசு ரூபா 1.000/= பெறும் ஐந்து சிறுகதைகள்

1) **'ஒரு தாயின் கனவு'** - திருமதி.சந்திரகாந்தா முருகானந்தம்
81, மெனிங் பிளேஸ், கொழும்பு - 06

2) **'இனியொரு புதிய விதி'** - தம்பிராசா பரமலிங்கம்,
17/22A,நாவலடி ஒழுங்கை,
வண்.வடமேற்கு, யாழ்ப்பாணம்

3) **'காடு விளைஞ்சென்ன மச்சான்'** - க.இராமநாதன்
'தங்க நிலா', அல்வாய் வடக்கு, அல்வாய்

4) **'குடிபெயர் பறவைகள்'** - இளவரசி மனோகரன்
கலட்டி, கரணவாய் கிழக்கு, கரவெட்டி

5) **'பெற்றது குற்றம்'** - உ.நிசார்
70/3, புதிய கண்டி றோட், மாவனல்ல

பரிசு பெற்றவர்களுக்கான பரிசுத்தொகையும் சான்றிதழும் கொழும்புத் தமிழ்ச்சங்கங்கம் நடத்தும் பரிசளிப்பு விழாவில் வழங்கப்படும். பரிசளிப்பு விழா பற்றிய அறிவித்தல் பின்னர் அறிவிக்கப்படும்.

பொதுச் செயலாளர்
கொழும்புத் தமிழ்ச்சங்கம்

குறுங்கதை

# முடுமந்திரம்

வேல்அமுதன்



சண்முகம் எனது பள்ளித் தோழன். நாம் ஒரே பாடசாலையிற் படித்த காலம் தொட்டு, இன்றுவரை எமது நட்பு கரும்பை நுனியிலிருந்து அடிநோக்கித் தின்பதுபோற் தித்திப்பாய் வேகமாக வளர்ச்சி காண்பதாய் இருக்கிறது. இந்நாட்களில் நாம் 'டா', 'டே' போட்டு அதாவது 'அடே', 'வாடா' எனக் கதைத்தும்; வசதிவரும் வேளை எமது வீடுகளிற் சந்தித்தும் மகிழ்கின்றோம்.

அண்மையில் சண்முகத்தில் ஒரு பாரிய மாற்றம்!

வாடிய முகம் - கலகலப்பு இல்லை - 'சப்'பெனக் காணப்படுகின்றான்.

"டேய், என்னடா உனக்கு? இப்ப உயிரோட்டமே இல்லை? எனக்கு உள்ளதைச் சொல்லு. நீயும் நானும் ஆத்ம நண்பர்கள்" என்றேன். அவன் தனது அன்றைய பிரச்சினையை மறைக்காது சொன்னான். "அடே, உதுக்கேன் கடுமையாக யோசிக்கிறாய்? நான் சொல்லுகிறபடி செய். எல்லாம் சரியாகும்." எனச் சொல்லி ஒருவரின் தொலைபேசி இலக்கத்தையும் முகவரியையும் தெரிவித்து, அவரைச் சந்திக்கும்படி கேட்டுக் கொண்டேன்.

ஒரு முழு மாதம் ஓடி மறைந்தது.

இப்போது அவன் முன்னையைவிடக் குளிர்ச்சி - முகமலர்ச்சி. சண்முகத்தின் மாற்றத்திற்கான உட்சூட்சுமத்தை அறிந்து கொள்ள வேண்டுமா....? சொல்லுகின்றேன்.

எனது வழிகாட்டற் பிரகாரம் அவனது மனைவியும் அவனும் ஒரு டாக்டரைச் சந்தித்தனர். அவர்களது முறைப்பாட்டைக் கேட்டறிந்த டாக்டர் சண்முகத்தின் மனைவிக்குத் தனிமையிற் சொல்லிக் கொண்டவை.

"அவருக்கு வயது எழுபது. உங்களுக்கு நாலு குறைவு. பிரச்சினை என்னவெண்டால் அவரின் உடல்வாகு வித்தியாசமானது. அவருக்கு இன்றும் பால் இயல்பூக்கம்(Sex urge) ரொம்ப உண்டு. இப்படியும் ஒரு சிலர் இருக்கத்தான் செய்யினம். உங்களுக்கு ஆர்வம் இல்லை என்றாலும் மனைவி என்ற முறையில் நீங்க ஒத்தாசை வழங்க வேணும். ஒத்துழைப்பு - ஒத்தாசை வழங்கப்பட பிரச்சினை பறந்துபோகும்.!"

# மணிப்புலவர் மஜீத் அவர்களின் 'பூர்வீக வரலாறு' கட்டுரை தொடர்பாக....

*சென்ற இதழ் தொடர்ச்சி....* **- சா.திருவேணிசங்கமம்**

இக்கிராமங்கள் இருந்த நிலைமையை அறிந்தோருக்கு இங்கு துறைமுகப்பட்டினம் இருந்ததென்னும் செய்தி அதிசயத்திலும் அதிசயமாக இருக்கும்.

மட்டக்களப்பு படுவான்கரையிலிருந்து பல காட்டாறுகள் மேற்கிலிருந்து உற்பத்தியாகி வாவியில் விழுகிறது. அவ்வாறான காட்டாறு ஒன்று வீரமுனைக்கும் சொறிக்கல்முனைக்குமிடையே பலகிளைகளாகப் பிரிந்து வாவியில் கலக்கிறது. வடக்குப் பக்கமாக அதனை அடுத்த காட்டாறு ஒன்று தம்பலவத்தை இரட்டைக்கானடி என்று அழைக்கப்படும். இடத்தினூடாகப் பாய்ந்து வாவியில் விழுகிறது. அதனை அடுத்து மூங்கிலாறு என்னும் பெயரில் ஒரு பெரிய காட்டாறு மண்டூரில் வாவியில் கலக்கிறது. இவ்வாறான காட்டாறுகள் பாயும் செழிப்பான வடிநிலங்கள் வாவியின் கரையில் பெருமளவில் அமைந்திருந்ததாலேயே வீரமுனை, மண்டூர் ஆகிய இடங்களில் புராதன குடியிருப்புகள் சாத்தியமாகின.

ஆனால் வடக்குத் தெற்காக சொறிக்கல்முனை தொட்டு தம்பலவத்தை இரட்டைக்கானடி வரையும் கிழக்குமேற்காக மட்டக்களப்பு வாவியிலிருந்து அக்கிலாவெளி ஈறாக பரந்துள்ள கிட்டத்தட்ட ஆறுமைல் சதுரப்பிரதேசம் ஒரு கட்டாந்தரைப் பிரதேசமாகும். இதன் அடியில் பாறை ஒன்று படிந்துள்ளது என்று கூறப்படுகிறது. இதனால் நெற்செய்கை மிகுவிக்கும் வண்டல் மண் படியும் விரிந்த வயல்வெளிகள் இங்கு இல்லை. கல்லோயாத் திட்டத்துக்கு முன்னர் இப்பிரதேசம் ஆங்காங்கே பொட்டல் வெளியாயும் பற்றைக்காடுகளுமாயிருந்த பிரதேசமாகும். சேனைப்பயிர் செய்கை கூட நடை பெற்றதில்லை என்று முதியவர்கள் கூறக் கேட்டிருக்கிறேன். மழை பெய்யாத காலங்களில் குடிதண்ணீரைக் காணுவதே முயற் கொம்பாகும். இவ்வாறான இடத்தில் பட்டினம் உருவாவதெப்படி? அதுவும் துறைமுகப்பட்டினம்! அப்படித்தான் ஒரு மாயமந்திரத்தால் சவளக்கடையில் துறைமுகப்பட்டினமிருந்திருந்தால் அங்கு கோயில்கள், பள்ளிவாசல்கள், களஞ்சியசாலைகள் போன்றவற்றின் அழிபாடுகள் மண்ணில் புதைந்தும் வெளியிலும் காணப்படுமே. அங்கு ஒரு புராதன நாணயமாவது அல்லது ஒரு கல்வெட்டாவது அகப்படவில்லை ஏன்? மகாவம்சம், தீபவம்சம், மட்டக்களப்பு மான்மியம் ஆகிய வரலாறு கூறும் நூல்களில் இந்நகரம் குறிப்பிடப்படாமல் போனதன் மர்மம் என்ன?

ஆனால் ஒல்லாந்தர் காலத்தில் வாழ்ந்த புலவர்களால் எழுதித் தொகுக்கப் பட்டவை என்று வரலாற்றாசிரியர்களால் கருதப்படும் **'மட்டக்களப்பு**

**மான்மியம்'**, **'மட்டக்களப்பு பூர்வ சரித்திரம்'** ஆகிய நூல்களில் வேறொரு தொடர்பில் சவளக்கடை என்ற இடப்பெயர் வருகிறது. மட்டக்களப்பில் வாழும் முக்குகர், வேளாளர், சீர்பாதர், பறையர், சாண்டார் ஆகிய சமூகத்தலைவர்களை ஏழேழ் குடிகளாக மாகோன் என்னும் மன்னன் வகுத்த விபரம் வருகிறது. அந்த வகையில் மட்டக்களப்பில் வாழும் நாவிதர்களையும் ஏழு குடிகளாக அவன் வகுக்கிறான். அதை மட்டக்களப்பு மான்மியம்,

**சாரியுறு மண்முனை வலையிறவு தங்கும் மகிழடித்தீவு**
**எரியுறு பாலமுனை அனல் வாயிலங்கு சம்மான்துறையென்னுமேழாய்**
**வாரிதுயில் மால் நிழலரசு செய்யும் மாகோனும்**
**இவர் குடியை வகுத்துவைத்து நாசிவனை**
**தாரணியிலறிந்தவர்கள் தக்கபடி வைத்து முறை சாரலாமே**

இந்த விடயத்தை மட்டக்களப்பு மான்மியத்தின் திருத்தப்பதிப்பு எனப்படும் மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் சில பாடபேதங்களுடன் பின்வருமாறு குறிப்பிடுகிறது.

**சாரியுறு மண்முனையதிலறவு தங்கும் மகிளடித்தீவு சவளக்கடை**
**எரியுறு பாலமுனை வழலவாயிலங்கு சம்மான்துறை யெனுமேழாய்**

இவ்விடப் பெயர்கள் கன்னன்குடா மா.வேலாயுதப்போடி என்பவரிடமுள்ள ஏட்டுப்பிரதியில் பின்வருமாறு மிகத்தெளிவாகக் குறிக்கப்பட்டிருக்கிறது என்று தனது **'மாகோன் வரலாறு'** என்னும் நூலில் க.தங்கேஸ்வரி தகவல் தருகிறார்.

மண்முனை நாவிதர், வலையிறவு நாவிதர், மகிழடித்தீவு நாவிதர், சவளக்கடை நாவிதர், பாலமுனை நாவிதர் வலைவாய் நாவிதர், சம்மான்துறை நாவிதர்.

இதிலிருந்து தெளிவாகும் விடயம் என்னவெனில் ஒல்லாந்தர் ஆட்சிக்கு முன்பிருந்தே சரியாகச் சொல்லப்போனால் மாகோனின் காலமான 12ம் நூற்றாண்டிலிருந்தே சவளக்கடை என்ற இடப்பெயர் வழங்கி வருகிறது என்பதும் அங்கே நாவிதர் என்னும் சமூகத்தவர்கள் வாழ்ந்து வருகிறார்கள் என்பதுமாகும். இப்போதும் அங்கு வாழ்பவர்கள் அச்சமூகத்தின் பரம்பரையினர் ஆவர். பக்கத்தில் உள்ள நாவிதன்வெளியில் தற்போது வேறு சமூகத்தவர்கள் வாழ்ந்தாலும் முன்பு அங்கும் வாழ்ந்தவர் நாவிதர்களாவர். அதற்கடுத்த அன்னமலையில் வாழ்கிறவர்கள் கம்மான சமூகத்தினர்.

இனி சவளக்கடை என்ற பெயருக்கான காரணங்களைப் பார்ப்போம். புடவையை அன்றும் சரி இன்றும் சரி ஜவுளி என்று மட்டக்களப்பில் யாரும் கூறுவதில்லை. எனவே ஜவுளிக்கடையிலிருந்து சவளக்கடை வந்தது என்பது சற்றும் பொருந்துமாறில்லை. 'நாவிதர்க்கு சவரர், சவுரர் என்ற பெயர்களுமுண்டு, சவரர்கடை சவுரர் கடை என்பதுதான் சவளக்கடை என்றாகியது' என்று பண்டிதர் வீ.சி.கந்தையா தனது **'மட்டக்களப்புத் தமிழகம்'** என்னும் நூலில் குறிப்பிடுகிறார். அது சரியான விளக்கமாகும். எனினும் கந்தையா அவர்கள் கடை என்ற சொல்லின் அக்காலக் கருத்தை

விளக்கத்தவறிவிட்டார். இக்காலத்தில் செய்வதுபோல் அக்காலத்தில் கடை(Saloon) வைத்துத் தொழில் செய்யவில்லை. 60 - 70 ஆண்டுகளுக்கு முன்னர்கூட அவர்கள் வீடுகளுக்குச் சென்று தமது தொழிலைச் செய்து வந்தனர். மற்றக் குடிமகன்களினது சேவையும் அவ்வாறே. அறுவடையின்போது தமது சேவைக்கான நெல்லை அவர்கள் பெறுவார்கள். அப்படியானால் கடை என்ற பின் ஒட்டின் தாற்பரியம் என்ன? கடை என்பது பக்கம், ஒதுக்குப்புறம், புறம்சாயல் என்ற கருத்தில் வருகிறது. மட்டக்களப்புத் தமிழில் கூறுவதானால் சவரர்களின் புறம் சாயல் அல்லது சவரர்களின் பக்கம் என்பது கருத்தாம். முகமயிர் மழிப்பதை இன்றும் மட்டக்களப்புத் கிராமப்புறங்களில் சவரம் செய்தல் என்று குறிப்பிடுவர்.

***மட்டக்களப்பு என்னும் சொல் அரபுமொழியில் இருந்து திரிபுபட்டு வந்த சொல்லாகக் கருதமுடியும். மஹ்பார் என்னும் அரபுச் சொல்லே நாளடைவில் திரிந்து மட்டக்களப்பாகியது.***

இக்கருத்து பற்றி ஆராய்வதற்கு முன்னர் மட்டக்களப்பு பற்றி வரலாற்று மற்றும் இலக்கியச் சான்றுகளில் குறிக்கப்பட்டிருப்பவைகளில் சிலவற்றை வரிசைப்படுத்துவோம்.

**'மல்வத்தையூரும் அதற்கு சேர்ந்த குளமும் வெளிக்காடும்**
**மட்டக்களப்பு நாடு முழுவதும்'**

வீரமுனை கல்வெட்டு 8ம் நூற்றாண்டு.

**பரராச்சுரவிக்குறும பிரதயாராகிய**
**ராசசிங்க மகராசா ஆண்டவர் திருக்கருணை புரிந்து**
**மட்டக்களப்பு தேசத்திலே**

சம்மான்துறை செப்பேடு 8ம் நூற்றாண்டு

**ஓடமுமோடி உறுபுகழ் ஓங்க**
**நீடு புகழ் மட்டக்களப்பின் கரையாய்**
**வளமிகு வீரமுனையெனுமிடத்தில்**

சீர்பாதவரன் முறைக்கல்வெட்டு 8ம் நூற்றாண்டு

**பன்றித்தீவு, சல்லித்தீவு, பாலமுனை, பாசிக்குடா**
**என்றெக்காலமும் வழங்கும் ஏறாவூர் கடந்து**
**தென்றெப்போ புளியன் துறைசேரப் புறக்கிட்டோடி**
**மன்றலொத்த தொடை மார்பர் மட்டக்களப்பில் விட்டார்.**

கண்ணகி வழக்குரை 12ம் நூற்றாண்டு:

**விட்டனரே கெவுளிமுனை விரைவாக பண்டித்தீவு**
**மட்ட சல்லித்தீவுடனே பாலமுனைதான் கடந்து**
**மட்டு புன்னை கடந்து மட்டக்களப்பில் விட்டனரே**

Inscription of Ceylon, Ed.S.Paranaviththana

"ஆகவே மட்டக்களப்பு என்னும் பிரயோகம் பதினைந்தாம் நூற்றாண்டில் இலக்கியத்தில் ஏறியுள்ள தெனலாம்".

'மட்டக்களப்பு மக்கள் வளமும் வாழ்க்கையும்'
தொகு.எவ்.எக்ஸ்.சி.நடராசா

இவ்வாறு புராதன கல்வெட்டுக்களிலும் இலக்கியங்களிலும் குறிக்கப் பட்டிருக்கும் மண்டூர், சவளக்கடை, மட்டக்களப்பு ஆகிய இடப்பெயர்கள் திரிந்த வரலாற்றை அப்பெயர்கள் தமது இறுதி வடிவத்தை பலநூற்றாண்டு களுக்கு முன்னர் எய்தி இருந்தபோதிலும் - எவ்வித சான்றுகளுமின்றிச் சொல்லும் மணிப்புவலர் மஜீத் அவர்களின் ஞான திருஷ்டியைக் கண்டு வியக்காமல் இருக்க முடியவில்லை.

*"சோழ நாட்டு இளவரசியின் அந்த நேர்த்தியான கப்பல் பிரயாணம் சிந்துபாத் யாத்திரை என்று அழைக்கப்பட்டதாக அருள் செல்வ நாயகம் எழுதிய சீர்பாதகுலவரலாறு என்னும் நூல் கூறுகின்றது. இச்சம்பவத்திலிருந்து நாம் அறிவது என்னவெனில் சோழநாட்டு அரசி தான் வந்த பிரயாணம் சிந்துபாத் வந்த வழிப்பாதையால் அமைந்தபடியால் தனது பிரயாணத்தையும் சிந்துபாத் யாத்திரை என அழைத்ததில் தவறில்லை எனலாம்."*

சோழநாட்டு அரசியின் கப்பல் பிரயாணத்தை அருள் செல்வநாயகம் தனது நூலில் சிந்துபாத் யாத்திரை என்று குறிப்பிடவில்லை. சிந்துயாத்திரை என்றே குறிப்பிடுகிறார். சிந்து என்றால் கடல், யாத்திரை என்றால் பயணம். ஆகவே சிந்துயாத்திரை என்றால் கடற்பயணம் ஆகும். இவ்வாறு நூலாசிரியர் சொல்லாததை சொன்னதென்று குறிப்பிடுவது சுத்த மோசடியாகும். இது கண்டிக்கத்தக்கது.

அடுத்து சிந்துபாத் என்று எழுத்தாளரும் யாத்திரிகருமான ஒருவர் உலகில் இருந்தவர் இல்லை. மஜீத் அவர்கள் ஆயிரத்தொரு அராபியக் கதைகளில் வரும் சிந்துபாத் என்ற கற்பனைக் கதாபாத்திரத்தைத்தான் அவ்வாறு குறிப்பிடுகிறார். அலிபாவா, அலாவுதீன் என்று அக்கதைகளில் வரும் கற்பனைப் பாத்திரங்கள் போன்றவன்தான் சிந்துபாத் என்பவன். அந்த சிந்துபாத் என்ற மாலுமி அதே பெயரைக் கொண்ட சுமைதாங்கிக்குத் தனது கடற்பிரயாணங்களைச் சொல்வதாக அக்கதை அமைந்துள்ளது. இந்த இடத்தில் ஆயிரத்தொரு இரவு அராபியக் கதைகள் பற்றிய மேலதிக விபரங்களை அறிவது இங்கு அவசியமானது.

பல நூற்றாண்டுகாலமாக செவி வழியாகச் சொல்லப்பட்டு வந்த கதைகள் பல ஆசிரியர்கள், மொழிபெயர்ப்பாளர்கள், கல்விமான்களால் திருப்பித் திருப்பி எழுதப்பட்டு 10ம் நூற்றாண்டில் இறுதி வடிவம் பெற்றன. அராபிய, பாரசிக, இந்திய, எகிப்திய, மேசோபட்டோமிய நாட்டார் கதைகள், இலக்கியங்களின் கூறுகள் இக்கதைகளில் இணைந்திருக்கின்றன என்று அறிஞர்கள் கூறுகின்றனர். இறுதியாக அச்சிட எடுத்துக்கொண்ட பிரதி 15ம் நூற்றாண்டுக்குரிய கையெழுத்துப்படியாகும். இவ்வாறான கற்பனைக் கதாபாத்திரம் சொல்வதை வரலாற்றுச் சான்றாகக் காட்டுவது குழந்தைப் பிள்ளைத்தனமானதும் நகைப்புக்கிடமானதுமாகும்.

*"முன்னாள் புதைபொருள் ஆராய்ச்சியாளர் கலாநிதி பாலேந்திரா சோனகர் இந்நாட்டு பழங்குடி மக்கள். அவர்கள் 2000 வருடங் களுக்கு முன்பிருந்தே இங்கு வாழ்கிறார்கள்"*

*"கலாநிதி அந்திரியெஸ்நெல் கி.பி. 177 ல் அநுராதபுரத்தில் அராபியர்களுக்குப் புறம்பான இடம் இருந்தது எனக் கூறுகிறார்."*

என்று இரு மேற்கோள்களை கட்டுரையின் ஆரம்பத்தில் ஆசிரியர் குறிப்பிடுகிறார். வரலாறு, தொல்லியல் துறைகளில் துறைபோனவர்கள் பலர் இருக்க மிகவும் அறியப்படாத இருவரின் மேற்கோள்களை ஆசிரியர் குறிப்பிடுகிறார். அம்மேற்கோள்கள் எங்கிருந்து எடுக்கப்பட்டன என்பதையும் குறிப்பிடவில்லை. இவைகளைக் கருத்தில் கொள்ளும் போது ஆசிரியரின் நேர்மையையிட்டுப் பலத்த சந்தேகம் எழுகிறது.

இங்கிருந்த சொற்பதொகை அராபிய வர்த்தகர்களில் அரேபியாவுக்கு மீண்டவர்கள் போக மீந்த இரண்டொருவர் உள்ளூர் சனத்தொகையுடன் இரண்டறக் கலந்திருப்பர். அக்காலத்தில் இஸ்லாம் தோன்றுவதற்கு முன் அரேபிய தீபகற்பத்தில் நிலவிய சமய நம்பிக்கைகளை நோக்குகின்றபோது இது மிக இலகுவாக நிகழ்ந்திருக்கும் எனத் தோன்றுகிறது. முஸ்லிம் என்ற பிரிவும் காபிர் என்ற பிரிவும் ஏற்பட்டமை இஸ்லாமின் தோற்றத்துக்குப் பின்னதாகும். அதன் தோற்றம் எளிதில் நிகழவில்லை. புதிய சமயத்தை ஏற்க மறுத்தும் பழைய நம்பிக்கைகளை இழக்க மறுத்தும் பல கோத்திரங்கள் வாளெடுத்துப் போராடின. இரத்த ஆறு பெருக்கெடுத்து ஓடியது. எந்த ஒரு சமயமும் பிற சமயத்தவர்கள் பார்வையில் மிக கீழ்த்தரமானதாகக் கருதப்பட்டாலும் (அவ்வாறு கருதுவதே பெரும்பாலும் வழமை) அதை பின்பற்றுவரிடையே அது மிக உயர்ந்த மதம் என்ற கருத்து இருக்கும். அச்சமயத்தவராகப் பிறந்ததற்காக அவர்கள் பெருமை கொள்வர். பொதுவாக வெளி அழுத்தங்கள், லௌகீக நலன்கள், அரசியல் பொருளாதாரப் பின்னணிகள், இராணுவ வெற்றிகள் இவைகள் இல்லாமல் சமூகங்கள் மதம் மாறுவதில்லை. வெற்றி கொண்ட மதம் தனது ஏற்புடைமையை அதைப் பின்பற்றுகிறவர்களிடையே வலுவாக ஊன்றும். தோற்ற சமயங்களைப் பற்றி அவதூறான பிரச்சாரத்தை மேற்கொள்ளும். இந்த நிலைதான் இஸ்லாத்துக்கு முன்பிருந்த சமய நம்பிக்கைகளுக்கு ஏற்பட்டது. அவை பற்றிய விளக்கங்களை இஸ்லாம்தான் தருகிறது. அவை தம்மைப்பற்றிச் சொல்வது என்னவென்று தெரியாது. அவைகள் அழிக்கப்பட்டுவிட்டன. அவைகள் அரேபியாவில் நிலைகொண்டிருந்த காலத்தை அறியாமைக்காலம் அல்லது காட்டுமிராண்டிக்காலம் என்ற பொருளில் ஜாகிலியாக்காலம் என்று இஸ்லாம் குறிப்பிடுவதிலிருந்து இது வெளிப்படுகிறது.

இங்கு வாழ்ந்த அராபியர்கள் இஸ்லாமிய எழுச்சிக்காலத்தின்போது அரேபியாவில் என்ன நடைபெறுகின்றது என்று அறிவதற்காக ஒருவரை அனுப்பியதாகவும் அங்கே இஸ்லாம் என்னும் நன்மார்க்கம் தோன்றி யுள்ளதைக் கேள்விப்பட்டு அதனைத் தழுவிக்கொண்டதாகவும் யாரோ எழுதியதைப் படித்த ஞாபகம். என்ன சிறுபிள்ளைத்தனமான கற்பனை. பல்வேறு சமயப் பிரிவுகளில் கோத்திரங்களில் இருந்து முட்டி மோதிக் கொண்டிருந்த அராபியர்கள் தமது சமய நம்பிக்கைக்கு என்ன ஆபத்து நேரிட்டிருக்கிறதோ என்பதை அறியும் ஆதங்கத்தால் அவ்வாறு ஒருவரை அனுப்பி இருக்க முடியுமே தவிர புது மார்க்கம் தோன்றியிருக்கிறது அதனை தழுவிக்கொள்ள வேண்டும் என்ற ஆவலால் அல்ல.

இரண்டாவது மேற்கோளில் அராபியர் என்ற சொல்லுக்கு பதில் யவனர் என்று இருக்கும் என நினைக்கிறேன். கிரேக்க தொன்னூல்களில் இலங்கை, இந்தியா போன்ற கிழக்கு நாடுகள் பற்றிய குறிப்புகள் உள்ளன. இலங்கை, இந்தியா தமிழக சான்றுகளும் யவனரைப் பற்றியும் அவர்களின் வணிகம் பற்றியும் நிறையத் தகவல்களைத் தருகின்றன. தமிழர்களோடு அவர்களுக்கு வணிகத்துக்கு அப்பாலான பண்பாட்டு உறவுகளும் உள்ளன என்று சொல்கிறார்கள். ஊழ் அல்லது விதிக்கோட்பாடு அவர்களின் தாக்கத்தால்தான் தமிழ் வாழ்வில் கருக்கொண்டது என்று சொல்லப் படுகிறது. இவற்றை விட தொல்லியல் சான்றுகளும் யவனர்கள், கிரேக்கர்கள் என்பவர்களின் பிரசன்னத்தை நிரூபிக்கின்றன. தமிழகத்தில் கி.மு.300 ஆண்டுகளுக்குரிய கிரேக்கர்களின் நாணயங்கள் கிடைக்கப் பெற்றமையை நோக்கும்போது உரோமருக்கு முன்னரே கிரேக்க நாட்டினர் தமிழகத்துடன் வணிகத் தொடர்பு கொண்டிருந்தமை தெளிவாகின்றது. இவ்வணிகம் பின்னர் உரோமரின் கைக்கு மாற அவர்களும் யவனர் என அழைக்கப்பட்டனர் என்று வரலாற்று தொல்லியல் துறைப்பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் குறிப்பிடுகிறார் (பண்டைய தமிழகம் - சி.க.சிற்றம்பலம்) இவைகளிலிருந்து யவனர் என்றால் கிரேக்கரையும் ஓரளவு உரோமரையும் குறிக்கும் என்பது புலனாகிறது.

யவனர் என்பது எக்காலத்திலும் அராபியரைக் குறித்ததில்லை. அராபியரின் வருகை 12ம் நூற்றாண்டுகளில்தான் தெளிவாக வெளிப்படுகிறது. "12ம் நூற்றாண்டுக்குப் பின் (இக்காலம் இல்லாவிட்டால் இதற்குப் பின்னர்) கணிசமான தொகையினராக இருந்து தென் இந்தியா மற்றும் இலங்கை துறைமுகங்களில் வர்த்தகம் செய்த தமிழ் பேசும் முஸ்லிம்களின் முன்னோடிகள் என்று அஞ்சுவண்ணத்தாரை கருதலாம்" என்ற வரலாற் றாசிரியர் கே.இந்திரபாலாவின் கூற்று இங்கு கருதத்தக்கது.

("What is of great interest is that the Anjuwannam could be reckened among the forerunners of the Tamil - using (and Later, if not at this time tamil speaking) muslim traders who were settled in considerable numbers in south Indian and Sri lankan post towns after twelth century.

The Evolution of an Ethnic idenlity pa.284)

கிழக்கு மாகாணத்தில் அவர்களின் பிரசன்னம் 17ம் நூற்றாண்டுக்குப் பின்னராகும்.

முடிவாக ஒரு குறிப்பு. இங்கே கி.மு பல வெளிநாட்டவர்கள், அபிசீனியர், அராபியர், யூதர், ஆப்கானியர், இந்தியர், துருக்கியர், பாரசீகர், கிறேக்கர் சீனர் வந்தார்கள்; போனார்கள். தங்கிய ஒரு சிலர் உள்ளூர் மக்களுடன் இரண்டறக் கலந்து போனார்கள். கி.பி. 7ம் நூற்றாண்டுக்குப் பின் அதாவது இஸ்லாமின் தோற்றத்துக்குப் பின் அரேபியர் வந்திருந்தால் மதவிதி காரணமாக தமது இஸ்லாமிய அடையாளத்தைப் பேணமுற்பட்டிருப்பர். ஆனால் அவர்களின் வருகை 12ம் நூற்றாண்டுகளில்தான் நிகழ்கிறது. அராபியாவில் இருந்து வந்த முஸ்லிம்களை விட இந்தியா, ஆப்கானிஸ் தான் ஆகிய நாடுகளிலிருந்து வந்த முஸ்லிம்களே அதிகமாக இருந்தனர். அரேபிய முஸ்லிம்கள் கருதத்தக்க எண்ணிக்கையில் இங்கு குடிபெயர வில்லை. அராபியர்கள் பெரும்பான்மையினராக இருந்தால் அரபு சமூக

சாயலில் - தந்தை வழி உறவுக்குடும்ப முறையும் சமூக அமைப்பும் கொண்டதாக முஸ்லிம் சமூகம் அமைந்திருக்கும். ஆனால் மாறாக முஸ்லிம் சமூகம் தாய்வழிச் சமூகமாக அமைந்துள்ளது. திராவிடர்களான தமிழர்களை விட முஸ்லிம் திராவிட தன்மைகளைக் கூடக் கொண்டுள்ள தைக் கண்டு மானிடவியலாளர்கள் ஆச்சரியப்படுகின்றனர். உலகில் உள்ள தாய்வழி உரிமை பேணும் மூன்று முஸ்லிம் சமூகங்களில் கிழக்கு மாகாண முஸ்லிம் சமூகமும் ஒன்று என்று அச்சமூகம் பற்றி ஆய்வு நடத்திய மானிடவியலாளர்கள் மக்ஜில்வரே, கணநாத் ஒபயசேகர என்போர் கூறுகின்றனர். இவ்வாறு யதார்த்தம் இருக்க இலங்கை முஸ்லிம்களில் ஒருசாரார் நாங்கள் அரபு வழித்தோன்றல்கள் என்று கூறுவது அப்பட்டமான அரசியல் வெளிப்பாடாகும். இது வெறும் கருத்தியலாகும். உண்மை அல்ல. உண்மை வரலாறு என்பது நடந்த சம்பவங்களின் மீது அமை வதாகும். அதனால் அது ஒரு சமூக விஞ்ஞானமுமாகும்.

1) 12ம் நூற்றாண்டு முடியும் தறுவாயில்.... மேலும் இலங்கையின் மேற்குக் கரைத் துறைமுகங்களில் பொருளாதார ரீதியில் ஆதிக்கம் செலுத்திய தமிழ் பேசும் முஸ்லிம்களின் முன்னோர்கள் என்று அடையாளம் காணத்தக்க முஸ்லிம் வர்த்தக சமூகத்தைப் பற்றிய தகவல்களை முதற் தடவையாக பெறக் கூடியதாக உள்ளது.

" Up to the end of the twelth century . In addition, for the first time we get informtion about a muslim mercantile community identifiable as one of the forerunners of the later Tamil speaking Muslim traders who controlled the posts along the west coast of sri lanka."

(The Evolution of an Ethnic Identity pa.282)

2) ரியால் என்னும் நாணயத்தின் ஆதிவடிவம் அல்றியால் பிரான்சிக் (Alreyal Alfransi) எனப்தாகும். இதன் பொருள் பிரேஞ்சு றியால் என்பதாகும். ஹெஜாஸ் ரியால் என்னும் நாணயமும் அங்கே புழக்கத்தில் இருந்தது. 1902ல் மன்னர் அப்துல் அஸிஸ் பின் சவூத் ஒட்டமன் ராச்சியத்துள் அடங்கி இருந்த அரேபியாவை மீட்டெடுத்து அங்கே தனி அரசொன்றை நிறுவினார். அது அவர் பெயரில் சவூதி அரேபியா என்று அழைக்கப்பட்டது. 1925ல் தனது அரசுக்கென்று பிரத்தியேக நாணய முறைமையை வகுக்க விரும்பிய மன்னர் ஏற்கனவே மக்களுக்குப் பழக்கமான நாணயங்களின் பின் ஒட்டின் பெயரில் நாணயத்தை வெளியிட்டார்.

றியால்(Reyal) என்பது ஓர் அரபுச் சொல் அல்ல. அரசர், அரசருக்குரிய என்ற கருத்தில் வரும் இலத்தின் வேர் சொல்லிலிருந்து பிறந்த சொல்லாகும் அது. இன்று Royal என்று ஆங்கிலத்தில் வழங்கும் சொல்லின் ஆதிவடிவமே றியால் ஆகும். 14ம் நூற்றாண்டில் வாழ்ந்த பிரபல ஆங்கிலக் கவிஞரான ஜியோவெறி சோஸர் மன்னன் ஒருவனை His rial Majesty என்று விளிக்கிறார். 1913 வரையும் வெப்ஸ்டுரரின் (Webteri) அகராதி இந்த சொல்லை இதே பொருளில் கொண்டிருந்தது.

இலத்தின் மொழிகளான ஒல்லாந்து, ஸ்பானிஸ், போர்த்துக்கீஸ் மொழிகளில் இயல்பாகவே இச்சொல் இப்பொருளில் வழங்கிவருகிறது. ஸ்பெயின், போர்த்துக்கல், ஒல்லாந்து, பிரேஸில் ஆகிய நாடுகளில் இப்பெயரில் நாணயங்கள் வெளியிடப்பட்டுள்ளன. வெளியிடப்படுகின்றன.

கம்போடியா போன்ற நாடுகளிலும் பிரேஞ்சு காலனித்துவம் நிலவியதால் அங்கும் ரியால் என்ற பெயர் கொண்ட நாணயம் புழக்கத்தில் உண்டு.

3) மேலும் சுமேரியர்கள் தமது செழிப்பான யூப்பிரடீஸ் - ரைக்கிரீஸ் வடி நிலங்களை விட்டு தகிக்கும் தென்னிந்தியாவுக்கு ஏன் புடைபெயர்ந்தனர் என்ற கேள்விக்கும் பதிலில்லை.

4) இதைத்தான் நேரம்சொஸ்க்கி என்னும் சிந்தனையாளர் தோற்றவருக்கு வரலாறு கிடையாது என்று சொன்னார். இது பிரபஞ்ச விதி.■

# தளிர்ப்பு



இலையுதிர் காலம்.
மரம் மொட்டையாக நின்றது.
புல்மேய்ந்த மாடுகள் மரத்தை இரக்கத்தோடு நோக்கின.

"உன் இலைகள் விழுந்துகொண்டிருக்கின்றன.
உன்னைப்பார்த்தால் அழவேண்டும் போல் இருக்கிறது...." என்று ஒரு மாடு தழுதழுத்த குரலில் கூறியது.

மரம் சொன்னது:-
"நான் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை. புதிய தளிர்களுக்காக அவை விழத்தான் வேண்டும்"

நிமிர்ந்தே நின்றது மரம்.

அது சொன்னது:-

**'விழுவதற் கெல்லாம்**
**அழுவதற் கில்லை."**

நன்றி:- **'காசி ஆனந்தன் கதைகள்'**






– கோத்திரன்

# வானத்தைப் போல.....

தமிழ் இலக்கியத்தில் வரையாது வழங்கும் வள்ளல்களுக்கு இணையாக வானம் ஒப்பிடப்படுகிறது. அதுவே மழையைத் தருகிறது. வெயிலாய் எறிக்கிறது. புயலாக வீசுகிறது. புனலாக மாறிப் பயிர்களை வளர்க்கிறது. உயிர்களுக்குத் தாகம் தணிய வைக்கிறது. இத்தனைக்கும் அந்த வானம் நிர்மலமாக நிற்கிறது. நிலைக்கிறது. ஆரம்பமும் அதற்கோர் முடிவும் இல்லை. அந்த அண்டவெளியிடை வரும் ஒளியே இறைவன். அற்புதரான வள்ளல் பெருமான் அதை அருட்சோதி என்கிறார். அதுவே சைவப்பிரகாசம் என நாவலர்தமிழில் சொல்லப்பட்டிருக்கிறது. **“துயர் இல் சுடரொளி தன்னுடைச் சோதிநின்ற வண்ணம் நிற்கவே”** எனத் ‘திருவாய்மொழி’ குறிப்பிடுகிறது.

இப்படி எல்லாவற்றையும் பிறருக்காகக் கொடுத்துவிட்டுத் தான் மட்டும் உயரே நிற்கும் வானம்போல மனிதர்களுள் மனத்தால் - செயலால் உயர்ந்தவர்கள் பலர் வாழ்ந்திருக்கிறார்கள். வழிகாட்டியுமிருக்கிறார்கள். தேய்ந்துபோன சந்தனக்கட்டையாய், தன்னை உருக்கிக் கொண்ட மெழுகு வர்த்தியாய் மாய்ந்து போனவர்களின் வரலாறுகள் நம்மிடையே உண்டு. வளத்தோடு பிறந்து, சிறப்போடு உயர்ந்து, படிப்போடு பலருக்கு உதவி நின்று விடுதலைப் போராட்ட வேள்வியில் - அது ‘சுதேசியம்’ எனப்பட்டது - அவிந்துபோன ஒருவரின் வீரவரலாறுதான் இப்பந்தி. தன்னிடம் இருந்த எல்லாவற்றையும் இழந்து இறுதி நாட்களில் இன்னொருவர் தயவில் வாழ்வதா? என்ற மானப்போராட்டத்தில் வருந்திய நாட்கள்... அப்பப்பா கொடுமையிலும் கொடுமை. அத்தகைய ஒரு நிலைக்கு இந்த அற்புதமான மனிதர் தள்ளப்பட்டிருந்தார் என்பதைக்கேட்ட இதயம் விம்முகிறது. வறுமையை வலிய வரித்துக் கொண்ட இந்த மாமேதைதான் **வ.உ.சி** என்ற **சிதம்பரனார்**. இந்திய விடுதலைப் போராட்டத் தளபதிகளின் சரித்திரத்தில் காங்கிரஸ் இயக்கத்தால் இவர் கணக்கில் எடுக்கப்படாதவராகிப் போனார் என்பதுதான் வேதனையான உண்மையாகிறது. இத்தனைக்கும் இவர் திலகரின் நண்பர். சுதேசி என்ற திலகரின் எண்ணத்தைச் செயற்படுத்திய முதல்மனிதர். இவரது இறுதிநாட்கள் சோதனையானவை. துன்பங்கள் நிறைந்தவை. இறுதிவரை இவருடன் இருந்த மனிதர் பரலி.சு.நெல்லையப்பர்தான். அவரை இவர் “கம்பனுக்கு சடையப்பவள்ளல் போல எனக்கு இவர்.” எனப் பெருமைப்படுத்தியிருக்கிறார்.

**“பூவுலகதனைப் பொருந்தி என்று
தேவுல கதனிற் சிறந்த உலகின்
நழனைவொடு நிற்கும் ‘நெல்லையப்ப’ நீ
கனிவொடு கேட்டவென் கதைக்குறிப் பி்.தே”**

எனத் தன் சுயசரிதத்தின் தோற்றுவாய்தனைத் தொடங்குகிறார் வ.உ.சி. வ.உ.சிதம்பரனார் என்ற ஒருவர் வக்கீலாக, இலக்கியவாதியாக அரசியலாளராக, சமய அறிஞராக, உரையாசிரியராக, பதிப்பாளராக அச்சுக்கோப்பாளராக, சுதந்திரப் போராளியாக, கப்பல் ஓட்டிய தமிழராக, ‘றோயல்டி’ என்ற அரச வருமானத்தையே ஆட்டிப்படைத்தவராக, செக்கிழுத்த செம்மலாக இந்தச் சமூகத்துக்கு அறிமுகமானவர். இந்திய சுதந்திரப் போராட்ட கதாநாயகர்களிலே இத்துணை ஆளுமைகள் கொண்ட ஒரே மனிதர் இவர்தான் என்பது மிகை அல்ல. திலகரினால் இவர் நண்பராக வரிகப்பட்டமைக்கு இந்தச் சிறப்பு அம்சங்கள்தான் காரணம். காங்கிரஸ் இயக்கம் கோபாலகிருஷ்ண கோகலே, மோதிலால் நேரு என்ற மிதவாதிகளின் ஆக்கிரமிப்பில் இருந்தது. காந்திஜி அவர்களின் செல்வாக்கினால் ஈர்க்கப்பட்டிருந்தவர். தனது 60ம் அகவையைக் கடந்தபின்பே காந்திஜி இந்திய அரசியலுக்குள் நுழைந்தவர். ஆன்மீக நம்பிக்கை கொண்டவர். மிதவாதியாகவும் இல்லை. தீவிரவாதியாகவும் செயற்பட்டவரல்லர். ஆயினும் காந்திஜி வரவின்பின்பே காங்கிரஸ் புத்துயிர் பெற்றது. எனினும் திலகர், சுபாஸ் சந்திரபோஸ், வ.உ.சி. போன்றவர்கள் காந்தியாரால் ஈர்க்கப்படவில்லை. அதனால் ஒதுங்கிக் கொள்ள நேர்ந்தது. மகாத்மா வராவிடின் காங்கிரஸ் சிலவேளை அரசுடன் ஏதோ ஒரு வகையில் இணங்கிப்போயிருக்கும் அல்லது கிடைத்ததை வரித்திருக்கும். இந்திய தேசிய காங்கிரஸ் என்பதே ஒரு வெள்ளைக்காரனின் சிந்தனையில் உதித்ததுதான். அந்த நல்லவனின் பெயர் ‘ஹியூம் டங்கன்’ என்பது.

“இந்திய சுதந்திரப்போராட்ட வீரர்களுள் இவர் முற்றிலும் வித்தியாச மானவர். பலவிதமான ஆய்வுகட்கு உட்படுத்தப்பட்ட வாழ்வின் வரலாறு இவருடையது. இந்த மனிதரிடம் தமிழர்கள் எல்லோரும் மறக்கமுடியாத பல அம்சங்கள் உள்ளன. பாரதியார், வ.ரா, இராசகோபால் ஆச்சாரியார் என்றெல்லாம் இருபதாம் நூற்றாண்டின் மத்திய காலம்வரை வாழ்ந்த செயலாக்கமும் சிந்தனைச் சிறப்பும் கொண்டவர்களில் தனித்தன்மை கொண்டவர் இவர். இருபதாம் நூற்றாண்டின் பெரிய தமிழ் ஆளுமைகள் என்று ஒரு பெயர்ப்பட்டியல் தயாரித்தால் கண்டிப்பாக விடுபடமுடியாமல் சேர்க்கப்படவேண்டிய பெயராக வ.உ.சி.எனக்குத் தெரிகிறார். ஏனென்றால் சிவஞான போதத்துக்கும், திருக்குறளுக்கும் தொல்காப்பியத்துக்கும் தொடர்பு கொள்ள மூளை நான்கு ஆண்டுகள் சிறைவாசம் பூணுகிறது. அதுபோலத் தொழிலாளர் போராட்டத்திலும் தலைமை தாங்குகிறது. தத்துவம், தொல்காப்பியம், பண்டைத்தமிழ் இலக்கியம், தற்காலப் பழங்கதை இலக்கியம், சுதந்திரப்போர், தொழிலாளர் போராட்டம் இவை ஒன்றோடு ஒன்று தொடர்பு உடையவையல்ல - ஒவ்வொன்றும் வேறு வேறு திறமைகள். இவைகள் அனைத்தும் பெற்றிருந்த ஒரு அபூர்வமான மனிதர் வ.உ.சி.” இப்படி ஆய்வாளரான ‘தமிழவன்’ ஈழப்போராட்டத்தை மையப்படுத்தி எழுதிய ஆய்வுக்கட்டுரையொன்றில் வ.உ.சி யை நினைவுபடுத்தி விபரித்திருக்கிறார்.

வ.உ.சி. சிறையில் வெள்ளைக்காரன் கொடுக்க முற்பட்ட சலுகைகளை ஏற்க மறுத்தவர். இந்நிலையில் இவர் ஒரு நிரந்தர புரட்சிக்காரராகவே இருந்தவர். இன்றைக்கு 'ஏர்னஸ் சே குவேரா' எப்படியோ அப்படி அன்று வ.உ.சி. வாழ்ந்திருந்ததாக எண்ணத் தோன்றுகிறது. பெருமையாகவும் இருக்கிறது. ஏனெனில் பலதடவைகள் மகாத்மா காந்தியடிகளை வ.உ.சி. சந்தித்திருக்கிறார். ஆனால் அவர்பால் இவர் ஈர்க்கப்படவில்லை. காங்கிரஸில் திலகரை நேசித்த அளவு இவர் ஏனையோரை விரும்பியிருக்கவில்லை என்பதுதான் உண்மை. திலகரின் ஆசியுடன் இவர் 'சுதேசிக்கப்பல் நிறுவனத்தை' ஆரம்பித்தபோது வயது 33 மாத்திரமே. 1908ல் தனது 36வது வயதில் தூத்துக்குடி, கோரல் ஆலைத் தொழிலாளர் போராட்டத்துக்குத் தலைமை தாங்குகிறார். "இதுவே இந்தியாவில் ஆரம்பித்த முதற் தொழிலாளர் வேலை நிறுத்தப் போராட்டமாகும்." என்கிறார் தமிழவன். இந்தக் காலகட்டத்திலேயே பாண்டிச்சேரியில் இருந்த அரவிந்தர் வ.உ.சி க்கு நண்பராகிறார். அதே ஆண்டு 1908 ல் கைதான வ.உ.சி க்கு இருபது ஆண்டுகள் சிறைவாசம் தீர்ப்பு ஆகிறது. எனினும் காங்கிரஸ் இதைக்கண்டு கொள்ளவில்லை. மேன்முறையீட்டில் இது நான்கு ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டது. இந்தச் சிறைத்தண்டனை கேட்டதும் இவரது தம்பி மீனாட்சி சுந்தரம்பிள்ளை சித்தசுவாதீனம் அற்றவரானார். அந்தச் சிறையில் இவருக்கு கருப்பொற் காப்பணியும் கஞ்சிக்கலசமும் தரப்பட்டது. அது பாளையங்கோட்டைச் சிறைச்சாலை. இங்குதான் 'செக்கிழுத்த செம்மல்' ஆகிறார் சிதம்பரனார். இச்சிறையில்தான் சிதம்பரனாரின் தமிழ்த்தொண்டு ஆரம்பமானதாம். சிறையுள் நடந்த சிறிய கலகம் இவர்பால் சந்தேகத்தை வளர்க்க கடுமையாக விசாரிக்கப்பட்டார். மக்களுடன் இருந்தால் இவரால் கலகம் வரும் என அஞ்சிய நிர்வாகம் இவரைப்பிரித்துத் தனியே நூல் நூற்கவைத்தனர். தோட்டி வேலை செய்யவும் பணித்தனர். ஆனால் புலி என்றுமே புல்லுத்தின்னாது என்பதைப் புரிய வைத்தார் இவர். அவர்களால் எதுவும் முடியவில்லை. விட்டுவிட்டார்கள். அந்தச் சிறையிலேயே அச்சுக்கோர்க்கும் கலையையும் கற்றுக் கொண்டார். எனவே சிறை வாழ்க்கை தொழில்பல கற்கத் துணை நின்றது. சிதம்பரனாரின் ஆக்கங்கள் பல கையெழுத்துப்பிரதியாக இன்றி நேரடியான அச்சுக் கோர்ப்பாகவே இருந்திருக்கிறது. (இதே பாணியை ம.பொ.சி யிடமும் பார்க்கமுடியும். அவரும் ஒரு சிறந்த அச்சுக்கோர்ப்பாளர்.)

மீண்டுமொரு சர்ச்சையால் 'கான்விக்ட் ஆபிசருடன்' காரமான வாதம் நடந்தது. அதன்பலன் இவர் கண்ணனூர் சிறைக்கு மாற்றப்பட்டார். இச்சிறையின் அதிகாரி இவரைக் கனிவுடன் நடத்தினான். கௌரவமாகவும் பழகினான். சிதம்பரனாரின் நூல்களும் உரைகளும் இங்குதான் உருவாகின. பரலி சு.நெல்லையப்பரின் 'பரோபகாரி' இதழுக்கு இங்கிருந்து எழுதலானார். இந்த நாட்களிலேயே இவர் வெறுத்த கலெக்டர் 'ஆஷ்' வாஞ்சிநாதனால் அழிக்கப்பட்ட செய்தி வந்தது. 1912 டிசம்பரில் இங்கிருந்து விடுதலையாகி வெளிவருகிறார் வ.உ.சி. வாசலில் வரவேற்ற சுப்பிரமணிய சிவாவையும், பரலி நெல்லையப்பரையும் பற்றிக்கொண்டு பாசமழை பொழிகிறார் இவர். "காங்கிரஸ் இன்று மாத்திரமல்ல அன்றும்

ஒரு மனச்சாட்சி அற்ற இயக்கமாகவே இருந்திருக்கிறது". என்கிறார் பெரியார் ஓரிடத்தில். 1927ல் நடந்த காங்கிரஸ் - பெரியார் மோதல் காரணமான வ.வே.சு.ஐயரின் 'சேரன் மாதேவி'யில் இருந்த 'குருகுலம்' இதற்கோர் உதாரணம் எனலாம். வ.உ.சி, திரு.வி.க, பெரியார், அண்ணா, ம.பொ.சி என்று இவர்கள் எல்லோரும் அன்று காங்கிரசைக் கண்டித்தமை பற்றிப் பார்க்கும்போது நமக்குப் பலவித சந்தேகங்கள் தோன்றுவதைத் தவிர்க்கமுடியாதுள்ளது. இந்தத் தலைவர்களின் எண்ணங்கள் அன்று ஒன்றாகவே இருந்திருக்கின்றன. 'ஜின்னா' தனி நாடு கேட்கும் முன்பே ஒரு தனிநாட்டு எண்ணம் தமிழகத்துள் வந்திருக்கிறது. வ.உ.சி. - பெரியார் வாழ்க்கைமுறையை ஆராய்ந்தால் அது தெரியும். "திராவிட நாடு பிரச்சினையைக் கைவிட்டபோதே அண்ணா இன்னொரு இந்தியாவைக் கற்பனை செய்தார் என்பதுதான் உண்மை" என்கிறார் நீதியரசர் கே.கோகிலகிருஷ்ணன் "இது வ.உ.சி.யின் வாழ்க்கை வழிகாட்டல்தான்" என்கிறவர் ஆய்வாளர் தமிழவன்.

அண்ணா மாத்திரமல்ல நேரு போன்றவர்கள் கூட இந்திய அமைப்புப்பற்றி உறுதியான கருத்துக்கொண்டிருக்கவில்லை. 'சுயராச்சியம்' என்ற சர்ச்சையின் ஆரம்பகர்த்தா வ.உ.சி.தான். 1927ல் சேலத்தில் சிதம்பரனார் ஆற்றிய சொற்பொழிவு இதற்கோர் உதாரணம். அதுபற்றி செ.திவான் என்பவர் வெளியிட்டிருந்த 'வ.உ.சி.யின் சொற்பொழிவு' என்ற வெளியீடு இப்படிச் சொல்லுகிறது. பிரிட்டனிடமிருந்து பெறும் 'சுய அரசாட்சி' நான்கு விதமாக இருக்கலாம். பிரான்சு தேசத்திலும் அமெரிக்காவிலும் உள்ளது போன்ற குடியாட்சி (Republic), இங்கிலாந்து அல்லது யப்பான் போன்று கோலாட்சி (வரம்புடை முடியாட்சி), மக்களால் தேர்தெடுக்கப்பட்ட சார்ந்த குடியாட்சி (Dependent Republic), அவுஸ்ரேலியா கனடா போன்ற சார்ந்த கோலாட்சி(Dependent - Monarch). இந்த நான்கு வகை சுய அரசாட்சி பற்றியும் நாம் சிந்திக்க வேண்டும். வேண்டியதைத் தெரிவு செய்யலாம்." எனத் தொடர்கின்றது. இப்படி வ.உ.சி. சிந்தித்திருந்த நாட்களில் காங்கிரஸ் இதில் எதையும் அறிவித்திருக்கவில்லை. ஆராயவும் இல்லை என்பதுதான் உண்மை. அப்போது திலகரைத் தவிர எவரும் சுதேசியம் பேசவில்லை. இந்நாட்களில் நேரு அவர்கள் 'தஷின்' என தென்னாட்டுக்கு ஒரு மைய அரசை நிறுவலாம் என ராஜாஜியுடன் ஆலோசனை செய்திருந்தார் என்ற செய்தி இப்போது ஊர்ஜிதமாக்கப்பட்டிக்கிறது. ஏனென்றால் இந்திய அரசியல் சட்டத்தில் மாநிலங்கள் தங்களுக்கென தனிக்கொடியுடன் ஐ.நா சபையில் இடம்பெறலாம் என்றொரு சரத்து உண்டு. இந்தச் சரத்து இடம்பெற முன்னோடியான கருத்துக்கள் வ.உ.சி.யின் சிந்தனைகளிலும் பேச்சிலும் இடம்பெற்றிருந்தன என்கிறார்கள்.

பெரியார் ஏற்படுத்திய புதிய அரசியல் சர்ச்சைகளிலெல்லாம் வ.உ.சி.சிந்தனைகளின் முன்னோடித் தன்மை உண்டு. இந்திய சுதந்திரப் போராட்டத்தில் தமிழ் நாட்டுத் தலைவர்கள் எவரும் 'தமிழ்நாடு' என்ற சிந்தனையில் இருக்கவில்லை. ஆனால் முதலில் வ.உ.சியும் பின்னால் திரு.வி.க, ம.பொ.சி. போன்றோரும் பெரியாரும் அந்த நிலைக்கு வந்தனர். அண்ணா அதைச் சற்றுத் தெளிவுபடுத்தியவர். 'தமிழ்நாடு' என்ற தன்

மண்ணுக்கு இந்தியாவிலிருந்து ஒரு தனித்தன்மை வேண்டும் என்ற எண்ணத்தை இந்திய சுதேசியபோராளிகளிடையே விதைத்த பெருமை வ.உ.சி.க்கே உண்டு. இந்த வகையில் 'சேகுவேரா' பாணிச்சிந்தனையை முதலில் வெளிப்படுத்தினார் எனலாம். தமிழ் அரசியல் தத்துவத்தின் மூலவேராக இவர் இருக்கிறார். இது இவரது மறுப்பக்கப்பார்வை. இவர் உயிர்வாழ்ந்திருந்தால் சிலவேளை ராஜாஜியுடன் சேர்ந்து 'ஜின்னா' வின் பாகிஸ்தானை ஆதரித்திருக்கவும் கூடும். தன்மான உணர்வில் வ.உ.சிக்கு நிகர் வ.உ.சியே. தமிழர்கள் ஒரு இனமாய் எதிர்கொள்ளும் பிரச்சினையை அவர்களது கலாசார போக்கில் நூல்களிடையே வெளிப்படுத்தியவரும் தூண்டியவரும் என்ற பெருமையை வ.உ.சி. மாத்திரமே பெறுகிறார்.

1872 ஆவணி அத்தத்தில் தான் பிறந்ததாக இவரே தனது வரலாற்றில் குறிப்பிடுகிறார். அப்பா - உலகநாதபிள்ளை, அம்மா - பரமாயி. பிறந்த இடம் ஒட்டப்பிடாரம். எட்டுக்குழந்தைகளில் இவர் இரண்டாமவர். வளமுள்ள குடும்பம். வசதிகட்குக் குறைவில்லை என்பதால் இவரின் ஆங்கில ஆரம்பக்கல்விக்காகவே 'கொல்லம்' கிராமத்தில் ஒரு தனிப்பாடசாலையே ஆரம்பிக்கப்பட்டதாம். ஆறுவயதில் ஆரம்பக்கல்வி. அதன்பின் புரட்டஸ்டன்ட் கல்லூரி, கதலிக் கல்லூரி என்று மெற்றிக்குலேசன் வரை பயின்றார். திருநெல்வேலி இந்துக்கல்லூரியிலும், கால்டுவல் கல்லூரியிலும் மேற்படிப்பை மேற்கொண்டிருந்தார். சும்மா இராத சிதம்பரனார் தனது மிக இளம்வயதில் தாலுகா அலுவலக குமாஸ்தாவாகிறார். அதன்பின்னான சட்டப்படிப்பில் வக்கீலாகத் தேறுகிறார். பொய் உரைக்காத சட்டத் தொழிலை மேற்கொள்ளச் சிதம்பரனார் தயாராகிறார். அதைச் சாத்தியமுமாக்கிப் பார்க்கிறார். ஒட்டப்பிடாரத்தில் சிலகாலம் தொழில் நடக்கிறது. தொழிலும் சிறக்கிறது. ஆயினும் அதிகரித்த வருமானம் இவருக்கில்லை. ஏழைகட்கும் இழந்தவர்கட்குமாக இவர் இலவசமாகவே வாதாடினார். பெயர் நிலைத்தது. ஆயினும் பணப்பெட்டி நிரம்பவில்லை. ஒருமுறை லஞ்சப்புகாரில் மாட்டிக்கொண்ட நீதிபதி ஒருவர் இவரிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்ட நிகழ்வும் நடந்தது. வக்கீல் தொழில் ஆரம்பித்த 1895ல் இவர் திருமணமும் நடந்தேறியது. செந்தூர் சுப்பிரமணியப்பிள்ளையின் மகளார் வள்ளியம்மை இவரது துணைவியாகிறார்.

'விவேகபானு' இவர் வெளியிட்ட பத்திரிகை. சைவசிந்தாந்தசபை, மதுரைத் தமிழ்ச்சங்கம், பிரமசங்கம் என்பன இவரால் வழிநடத்தப்பட்டவை. அத்துடன் பிரசங்கம் செய்தல் இவரது பொழுது போக்காயிற்று. திருக்குறள், திருமந்திரம், சிலப்பதிகாரம், தொல்காப்பியம் ஆகியன இவரை ஆட்கொள்ளுகின்றன. இங்குதான் ஒரு புதிய எழுச்சிக்குக் கால்கோல் நடக்கிறது. இவரது உறவினரும் இராமகிருஷ்ண மடத்துறவியுமான 'இராமகிருஷ்ணானந்தர்' இவரைச் சந்திக்கிறார். "கைத்தொழில் வாய்க்கவும் கைத்தொழில் கொள்ளவும் எத்தகை முயற்சி இயற்றினை!" என்றிட்டார். அந்தக் கேள்வி இவர் இதயத்தின் ஆழத்தில் பதிந்தது. உள் உணர்வுகளை உசுப்பிவிட்டது. நான் வெறும் பிரசாரகன்தானா? செயல்வீரன் இல்லையா? என்று உள்மனம் அரித்துக்கொண்டது. சுதேசியச்

செயற்பாட்டுச் சிந்தனை தோன்றியதன் ஆரம்பமாக அக்கேள்விக்கான விடை வெளிவந்தது. "செயற்பாடு இல்லாத சேவை ஏன்?" என்ற சுவாமிகளின் சொல்வீச்சு இவரைத் தூண்டிவிட்டது. விளைவு முதலில் 'தர்மசங்க நெசவுசபை', 'சுதேசிய நாவாய்ச்சங்கம்', 'சுதேசியர் பண்டகசாலை' என கூட்டுத் தொழில்கட்கு ஊட்டம் அளிக்கப்பட்டன. இந்த அமைப்பு களிடையே வ.உ.சி. உள்வீட்டுப் பகைகளையும் சந்திக்க நேர்ந்தது. பட்டபாடுகள் அதிகம். கெட்ட நோக்கர்கள் உள்புகுந்து அமைப்புக்களை அலங்கோலமாக்க முயன்றனர். உட்பகைகளை மிகப் பொறுமையோடு சிதம்பரனார் சந்தித்தவிதம் அலாதியானது. தன் சுயசரிதையில் இவைகள் பற்றி இவர் எழுதும் இடங்களில் நமக்குக்கூட வாசிக்கும் பொறுமை இல்லாமற் போய்விடுகிறது. கொழும்பில் இருக்கும் கப்பலை விலைபேச இவர் பம்பாய் உரிமையாளரைப் பார்க்கப் பலமுறை சென்று வரவேண்டியதாயிற்று. ஒவ்வொரு முறையும் நம்மவர்களால் ஏற்பட்ட தடைகளைத் தகர்க்க இவரது திறமையுடன் திலகரின் சேவையும் தேவையாய் இருந்தது. அதே நேரம் அடிக்கடி இவரும் திலகரும் சந்தித்துக்கொள்வதை வெள்ளைக்கார அரசு வேவுபார்க்கவும் செய்தது. அதை அரசியல் ஆக்கி அநாவசியத் தொல்லைகளையும் கொடுத்தது. இவர் பேச்சுக்கள் எல்லாம் பதிவு செய்யப்பட்டனவாம். இத்துணை இடர்பட்டு இவர் உருவாக்கிய நாவாய்ச் சங்கத்திலிருந்து ஒருதடவை இவராகவே வெளியெற வேண்டியும் வந்தது. எனின் நன்றி கெட்ட தமிழர்களின் நயவஞ்சகத்தின் கொடுமைதான் என்னே. எனினும் மீண்டும் வலிய அழைத்து வழிவிட்டனர். ஆயினும் இவரது சிறை வாழ்வு நாவாய் சங்கத்தை நலிவுறச் செய்ததுடன் நடாத்தமுடியாமலும் இழுத்து மூடவும் செய்தது.

சிறைசென்று மீண்டதன் பின்னான சிதம்பரனாரின் தமிழ்ப்பணி தலைசிறந்தது. இங்கே இன்னொரு செய்தியும் உண்டு. இவருக்கான 'வக்கீல் சன்னத்தை' ஆங்கில அரசு பறித்துவிட்டதுதான் அது. வறுமையை விரட்ட இவர் வாணிபம் செய்ய சென்னை செல்லவேண்டியதாயிற்று. ஒரு வல்லரசையே எதிர்த்து நின்ற மாவீரர் தன் வறுமை போக்க மண்டிக்கடை வியாபாரி ஆனார். எனினும் வ.உ.சி. மனம் சோர்ந்துவிடவில்லை. தன்நிலை விளக்கமாக இவர் தரும் கவிதையைக் கேட்கக் கண்ணீர் சுரக்கிறது.

**"வந்த கவிஞர்க் கெல்லாம் மாரியெனப் பல்பொருளும்**
**தந்த சிதம்பரன் தாழ்ந்துநின்று - சந்தமில்வெண்**
**பாச் சொல்லிப் பிச்சைக்குப் பாரெல்லாம் ஓடுகிறான்**
**நாச் சொல்லும் தோலும் நலிந்து."**

என்று தன்நிலை குறித்து நொந்து எழுதுகிறார். பேரம்பூரில் இவர் நிறுவிய 'தபால் ஊழியர் சங்கம்' தான் நாட்டில் இன்று பழமையான தொழிற்சங்கம். இக்காலத்தில்தான் பேராசிரியர் கேசவராய முதலியார், ராவ்பகதூர் வையாபுரிப்பிள்ளை, வ.ரா. போன்றோர் இலக்கிய நண்பர்கள் ஆகினர். இவரிடம் திருக்குறள் கற்றதாகச் சொல்லும் சுவாமி சகசானந்தர் "சிதம்பரம் என் சற்குருவே" எனக் குறிப்பிட்டிருக்கிறார். 'ஆனைப்பசிக்குச் சோளப்

பொரி' என்பர். வள்ளலாகவும் கோமானாகவும் வாழ்ந்த சிதம்பரனாருக்கு இந்த வாணிபம் வளம் சேர்க்கவில்லை. இதேவேளை சிறையில் எழுதிய ஆக்கங்களை அச்சிடும் சுமையும் சேர்ந்து கொண்டது. வழக்கறிஞர் விருதை இவர் மீண்டும் பெற எடுத்த முயற்சிகளும் தோல்விகண்டன. ஓட்டப்பிடாரம் மீண்டவர் ஏற்கனவே செய்த குடும்பத் தொழிலான விவசாயத்தை விரும்பிச் செய்யலானார்.

வேண்டும்போது கிட்டாதது வெட்டென வெறுக்கும்போது கிட்டியது. சென்னை உயர்நீதிமன்ற நீதியரசராகப் பணியேற்ற 'வாலேசு' என்பவர் வ.உ.சியை மதித்து வழக்கறிஞர் தொழிலுக்கு அனுமதியளித்தார். இவரது தியாக வரலாறு அவருக்குத் தெரிந்திருந்தது. இங்கே நன்றி மறக்காத நமது சிதம்பரனார் தனது இளைய மகனுக்கு (வாலேசு துரையை நினைவுபடுத்த) வாலேசுவரன் எனப் பெயரிட்டு மகிழ்ந்தார். மீண்டும் நிரபராதிகட்கான நீதியின் குரலாக சிதம்பரனாரின் குரல் நீதிமன்றத்தில் கேட்கத் தொடங்கியது. வசூலை எதிர்பாராமலே இந்த 'வானம்' வறியவர்க்காக வாதாடியது.

1932 மீண்டும் தூத்துக்குடி வாழ்க்கை. உற்சாகமாகத் தூத்துக்குடி வந்தவர் சிறைவாழ்வின் சீரழிவுகளினால் ஏற்பட்ட உடல்வாதைகட்கு உள்ளானார். நீதிமன்றம் செல்வது இடைக்கிடை நிறுத்தப்படலாயிற்று. தமிழ் தொண்டினைத் தொடரலானார் வ.உ.சி. இந்த நாட்களிலேயே இவரது அறுபதாம் ஆண்டு விழா நடைபெற்றது. சிறையில் தொடங்கிய திருக்குறள் உரைகாணும் பணி தீவிரமாயிற்று. 1934ல் திருச்செந்தூர் முருகன் ஆலயத்தில் கூட்டப்பட்ட புலவர் பேரவையில் 'திருக்குறள் விருத்தியுரை' அரங்கேற்றம் ஆனது. விரைவில் இதை அச்சேற்றிட விழைந்தார். இந்நாட்களில் இவரது இல்லம் மாலை வேளைகளில் ஒரு இலக்கியக் கொட்டகையாக இருக்குமாம். வள்ளுவம், சிவஞானபோதம், கம்பன் கவிதைகள் என்று இலக்கிய இளைஞர்கள் கூடும் இடமாகக் காணப்பட்டது என்கிறார்கள். தனது கடந்தகால வீர வரலாறுகளை இளைஞர் விருப்புக்காக எடுத்துரைப்பாராம்.

சிறை மீண்டபின் சிதம்பரனார் அரசியலில் ஆர்வம் காட்டவில்லை. இவர் மனங்கவர்ந்த திலகரும் போராட்டத்தில் இல்லை. இவரால் நேசிக்கப்பட்ட இன்னொருவர் நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் அவர்கள். அவரும் இந்தியாவை விட்டு வெளியேறிவிட்டார். அதனால் தமிழ்ப்பணி, புத்தக வெளியீட்டுப்பணி, குடும்பப்பாரம் என இவர் சுமை தாங்கியானார். வள்ளுவரின் 'அறத்துப்பாலு'க்கான விருத்தியுரை 1935 முற்பகுதியில் வெளியானது. எத்துணை முயன்றும் பொருட்பாலின் சில பகுதிகள் மாத்திரமே அச்சேறின. சிறைவாழ்வின் கொடுமைகள் அவர் உடலைச் சீரழித்திருந்தது. உருக்குலைந்து போனார். 1936 செப்டம்பர் முதல் இந்தச் சிங்கம் தன்னைத் தன் குகைக்குள்ளேயே முடக்கிக்கொண்டு விட்டது. களத்தில் நின்ற கம்பீரம் களையிழந்து கட்டிலில் சங்கமமானது. 1936 நவம்பர் 18 புதன்கிழமை பின்னிரவில் வ.உ.சி. என்ற 'வரையாத வானம்' தன் வாழ்வினை முடித்துக் கொண்டது. இவரது கனவுகள் இரண்டு அன்று நிறைவேறவில்லை. ஒன்று நாட்டின் சுதந்திரம், மற்றையது

வள்ளுவத்துக்கு ஒரு முழுமையான உரையை நூல் வடிவில் வெளியிட முடியாதது. நிறைவேற்றப்படாத இந்தக் கனவுகளுடனேயே நீண்ட துயிலுள் ஆழ்ந்து போனார் வ.உ.சி.

வெளிவரமுடியாத தவிக்கும் படியான கடுந்துன்பம் வரினும் அதற்கு மனம் அழியாது உறுதியுடன் இருத்தல் 'இடுக்கண் அழியாமை' எனப்பட்டது.

"ஒரு காரியம் ஆற்றும்போது முயற்சித் துன்பங்கள் வரும். தன் காரியம் முடித்தல் கருதி வருதலின் அவையும் இன்பமே எனக் கொள்ளும் மனப்பக்குவம் ஒருவனுக்கு வாய்த்தால் தன் பகைவரும் விரும்பும்படியான சிறப்பை அடைவான்" என வள்ளுவம் வ.உ.சி யை வகைப்படுத்துகின்றது.

**"இன்னாமை யின்ப மெனக் கொளி னாகுந்தன்**
**ஒன்னார் விழையுஞ் சிறப்பு."**

(இடுக்கணழியாமை - குறள்: 630)



## சுந்தர ராமசாமி (1931 – 2005)

தமிழின் முன்னோடி எழுத்தாளர்களில் ஒருவரான சுந்தரராமசாமி நாகர்கோவிலில் பிறந்தார். பள்ளியில் மலையாளமும் ஆங்கிலமும் சமஸ்கிருதமும் கற்றார். 1951 இல் 'தோட்டியின் மக' னைத் தமிழில் மொழிபெயர்த்ததே முதல் இலக்கியப்பணி. 1951 ல் புதுமைப்பித்தன் நினைவு மலரை வெளியிட்டார். இவரது முதல் கதையான 'முதலும் முடிவும்' அதில் இடம்பெற்றது. மூன்று நாவல்களும் பல கட்டுரைகளும் சுமார் 60 சிறுகதைகளும் பசுவய்யா என்ற பெயரில் கவிதைகளும் எழுதினார். 1988 ல் காலச்சுவடு இதழை நிறுவினார்.

சுந்தரராமசாமிக்கு டொரொண்டோ (கனடா) பல்கலைக்கழகம் வாழ்நாள் இலக்கியச் சாதனைக்கான 'இயல்' விருதை (2001) வழங்கியது.

வாழ்நாள் இலக்கியப்பணிக்காக 'கதா சூடாமணி' விருதையும் (2003) பெற்றார்.

சுந்தர ராமசாமி 14.10.2005 அன்று அமெரிக்காவில் காலமானார். மனைவி - கமலா, குழந்தைகள் - தைலா, கண்ணன், தங்கு. (மூத்த மகள் சௌந்தரா 1996 இல் காலமானார்.

# தேசிய சாஹித்திய விருது

# – 2012 –

இவ்வருடத்திக்கான அரச தேசிய சாஹித்திய விருது வழங்குல் வைபவம் 30.09.2012 வெயங்கொட தேசிய கல்வியியல் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. இம்முறை விருது பெற்ற தமிழ் நூல்கள் மற்றும் நூலாசிரியர்கள் விபரம் வருமாறு:-

01.**சிறந்த நாவல்** - 'சொடுதா' - எஸ்.ஏ.உதயன்

02.**சிறந்த சிறுகதை தொகுதிகள்**

'வெள்ளிவிரல்'- எம்.நௌஷாத்

'நெல்லி மரத்துப் பள்ளிக்கூடம்' - நந்தினிசேவியர்.

03.**காவியம்** - 'தோட்டுப்பாய்மூத்தம்மா' - பாலமுனை பாறூக்

04.**கவிதை** - 'நிலம் பிரிந்தவனின் கவிதை' - சுஜந்தன்

05.**சிறந்த ஆய்வு** - 'இந்துக் கணித வானியல் மரபு' - ச.முகுந்தன்

06.**சிறந்த நாடக நூல்** - 'கருவறையில் இருந்து'

- கந்தையா ஸ்ரீகந்தவேள்

07.**சிறந்த மொழிபெயர்ப்பு நாவல்** - 'அம்மாவின் ரகசியம்'

- எம்.ரிஷான்ஷரீப்

08. **சிறந்த மொழிபெயர்ப்புச் சிறுகதை** -

'ஒரு சுறங்கைப் பேரீச்சம்பழங்கள்' - அஷ்ர.ஃப் சிஹாப்தீன்

09. **சிறந்த மொழிபெயர்ப்பு (இளையோர் இலக்கியம்)** -

'காட்டுப்புற வீரர்கள்' - திக்குவல்லை கமால்

10. **சிறந்த மொழிபெயர்ப்பு (நானாவிதம்)** -

'பர்மிய பிக்கு சொன்ன கதைகள்' - சோ.பத்மநாதன்

**விருது பெற்ற படைப்பாளிகளைச் 'செங்கதிர்' பாராட்டி மகிழ்கிறது.**

# வாழ்க்கைத் தடம் - 07

- அன்புமணி



06.03.2010 அன்று பவளவிழாக்கண்டு அகவை எழுபத்தைந்தைத் தாண்டியும் இன்றும் கலை இலக்கிய செயற்பாடுகளில் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கும் மூத்த எழுத்தாளர் அன்புமணி (இரா.நாகலிங்கம்) அவர்கள் தனது வாழ்க்கை வரலாற்றினை 'வாழ்க்கைத் தடம்' என்ற தலைப்பிலே இங்கே 'செங்கதிர்' வாசகர்களுக்கு வடித்துத் தருகிறார்.

## எழுத்துத் துறை:
## ஆரம்ப எழுத்துக்கள்

இவ்விடத்தில் எனது எழுத்துத் துறை பற்றிக் கூறிவிட வேண்டும் என்று நினைக்கிறேன்.

நான் கல்வித்திணைக்களத்தில் சேர்ந்த காலகட்டத்தில்(1953) என் முதல் கதை **'கிராமபோன் காதல்'** 'கல்கி'யில் வெளிவந்தது. எனக்கு தலைகால் புரியாத ஆனந்தம். அலுவலகத்தில் உள்ள எல்லோரிடமும் காட்டிப் பெருமைப்பட்டேன். அவர்களுக்கும் என்மீது ஒரு மதிப்பு ஏற்பட்டது.

தொடர்ந்து 'கல்கி'யில் **'விளையும் பயிர்'**, **'பயங்கர இரவு'** முதலிய கதைகள் வெளிவந்தன. அவ்வாறே தமிழகத்திலிருந்து வெளிவரும் 'கலைக்கதிர்' சஞ்சிகையில் **'மாமாங்கம் தீர்த்தம்'** என்ற சிறுகதை வெளிவந்தது. இதே கதை யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த சிற்பி சரவணனின் 'கலைச்செல்வி' மாத இதழிலும் வெளிவந்தது.

(ஒரு சஞ்சிகைக்கு அனுப்பிய கதை வெளிவரத்தாமதமானால் அதை வேறொரு சஞ்சிகைக்கு அனுப்புவது என் வழக்கம். பிறகு பார்த்தால் முன்பு அனுப்பிய சஞ்சிகையிலும் அது வெளிவந்துவிடும்.)

இதன்பின்னர் இலங்கைப் பத்திரிகைகளான வீரகேசரி, தினகரன், சிந்தாமணி, சுதந்திரன் முதலிய பத்திரிகைகள் என் கதைகளை வரவேற்றுப் பிரசுரித்தன. ஏராளமான கதைகள் பிரசுரமாகின. பாராட்டுக்கடிதங்களும் வந்தன.

அந்தவகையில் 'பாடும்மீன்'(வீரகேகரி), 'பொன்னித்தெய்வம்' (தினகரன்), 'இதயக்குரல்'(சுதந்திரன்), 'போனால் வராது'(சிந்தாமணி) முதலிய கதைகள் குறிப்பிடத்தக்கன.

## சில சிறுகதைகள்:

1960களில் நிறைய சிறுகதைகள் எழுதி இடையில் சில காலம் கட்டுரைகளை எழுதி மீண்டும் சிறுகதைகளை எழுத ஆரம்பித்தேன். அந்தவகையில் 1953முதல் இற்றைவரை என் சிறுகதைகள் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

2009ல் வெளிவந்த **'குந்தியிருக்க ஒரு குடில்'** என்ற சிறுகதை m t ŧ hz ŀ f F uя 'தகவம்' மதிப்பீட்டில் இரண்டாம் பரிசு பெற்றது குறிப்பிடத்தக்கது. தொடர்கதை எதையும் நான் எழுதவில்லை. ஆனால் 'ஒரு தந்தையின்கதை' என்ற நாவலையும், 'ஒரு மகளின் கதை' என்ற குறுநாவலையும் எழுதினேன். 'ஒரு தந்தையின் கதை' மட்/உதயம் பிரசுர வெளியீடாக வெளிவந்தது. இவை எனது தந்தையையும் மகளையும் பற்றிய கதைகள். இவை என் மனதில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய நிகழ்வுகளாகும். பல கதைகள் சஞ்சிகைகளிலும் சிறப்பு மலர்களிலும் வெளிவந்துள்ளன.

இவைகளில் சில சிறுகதைகள் 'இல்லத்தரசி'(அன்பு வெளியீடு), 'வரலாற்றுச் சுவடுகள்'(அன்பு வெளியீடு) ஆகிய தொகுதிகளாக வெளிவந்துள்ளன. சில கட்டுரைகள் மட்டக்களப்பிலிருந்து வெளிவந்த 'ஈழநாதம்', வாரமலரில் வெளிவந்தன. இவை பின்னர் 'தமிழ் இலக்கிய அறிமுகம்', 'எட்டுத் தொகை பத்துப்பாட்டு', 'பதினெண் கீழ்கணக்கு' நூல்களாக வெளிவந்தன. இவற்றைச் சென்னை மணிமேகலைப் பிரசுரம் வெளியிட்டது. அறிமுகவிழா கொழும்பில் நடைபெற்றது.

எழுத்துத்துறை பற்றிக் குறிப்பிடும்போது, நூல் வெளியீடுகளுக்கு வழங்கிய அனுசரணை பற்றியும் குறிப்பிட வேண்டும். அந்த வகையில் மட்டக்களப்பில் அமரர் சிவதாசன்('வாடைக்காற்று' திரைப்படத் தயாரிப்பாளர்) உருவாக்கிய 'உதயம்' பிரசுரம் பற்றியும் குறிப்பிட வேண்டும். உதயம் பிரசுரத்தின் ஆலோசனைக் குழுவில் ஒரு முக்கிய உறுப்பினராக நீண்டகாலம் செயற்பட்டேன்.

கவிஞர் செ.குணரத்தினத்தின் **'தெய்வதரிசனம்'**, ரவிப்பிரியாவின் **'சந்தன ரோஜாக்கள்'** மற்றும் **'ஒருவானவில் ரோஜாவாகிறது'** முதலிய நாவல்கள் உதயம் பிரசுரமாக வெளிவந்தன. பலநாவல்களைப் பரிசீலனை செய்து பிரசுரத்திற்கேற்றதாகச் சிபார்சு செய்துள்ளேன்.

பல சிறப்பு மலர்களைத் தொகுத்து வெளியிட்டமையையும் இங்கு குறிப்பிடவேண்டும். 'ஆரையூர்க்கந்தன்' (ஆரையம்பதி முருகன் ஆலய கும்பாவிஷேக மலர்), 'புலவர்மணி நூற்றாண்டு விழாமலர்', 'கூத்துக்கலை ஆவணப்படுத்தல் சிறப்பு மலர், 'விபுலானந்த இமயம்' சிறப்பு மலர். முதலியவற்றை இவ்வகையில் குறிப்பிடலாம்.

### நாடகப்பணி:

வானொலிக்காகப் பல நாடகங்களை எழுதினேன். **'நமது பாதை'** தொடர் நாடகம்(1967) இதில்அடங்கும். **'திரைகடல் தீபம்'** முழு நீள நாடகம், இலங்கைப் கலைக்கழகம் நடாத்திய நாடகப் போட்டியில் முதற் பரிசு பெற்றது (1963). **'சூழ்ச்சிவலை'** மேடைநாடகம், **'வெள்ளம்'** (வீரகேசரி சித்திரக்கதைத் தொடர்), **'கபட நாடகம்'** (தினகரன் சித்திரக்கதைத் தொடர்) முதலியவற்றையும் இங்கு குறிப்பிடலாம்.

## அன்பு வெளியீடு:

ஏராளமான நூல்களுக்கு அணிந்துரை எழுதியுள்ளேன். இவற்றுள் ஜுனைதா ஷெரிப் நாவல் (இன்னும் வெளிவரவில்லை), மருதமைந்தன் நாவல் முதலியன அடங்கும். அவ்வாறே பல நூல்களுக்கு எழுதிய விமர்சனக் கட்டுரைகள் பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன. (உதாரணம் ஆய்வார்வலர் நா.நவநாயகமூர்த்தி எழுதிய 'பழந்தமிழர் நடுகல் பண்பாடு')

நூல் வெளியீட்டுத்துறையில் பல நூல்களுக்கு அனுசரணையாக இருந்ததுடன் தனிப்பட்ட முறையில் 'அன்பு வெளியீடு' நிறுவனத்தின் மூலம் பல நூல்களை வெளியிட்டுள்ளேன். அனுசரணை - திருமலை.ந. பாலேஸ்வரியின் 'தத்தைவிடுதூது', எஸ்.எல்.எம். ஹனிபாவின் 'மக்கத்துச் சால்வை' நாவல். அன்பு வெளியீடு நிறுவனத்தின் மூலம் இதுவரை 15 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றுள் தொல்லியலாளர் செல்வி. க.தங்கேஸ்வரி எழுதிய 'விபுலானந்தர் தொல்லியல் ஆய்வு', 'குளக்கோட்டன் தரிசனம்', 'மாகோன் வரலாறு' முதலிய ஆய்வு நூல்கள் அடங்கும்.

பல பழைய நூல்களை மறுபதிப்புச் செய்வதற்குக் கனடா றிப்ளெக்ஸ் அச்சகம் இலக்கிய கலாநிதி க.தா.செல்வராசகோபால் உதவினார். அவ்வாறு மறுபதிப்புச் செய்யப்பட்ட நூல்களில் வித்துவான் ச.பூபாலப்பிள்ளையின்'சீமந்தினி புராணம்', வித்துவான் அ.சரவணமுத்தனின் 'மாமாங்கேஸ்வரர் பதிகம்', 'சனிபகவான் தோத்திரத்திரட்டு' முதலியன குறிப்பிடத்தக்கன.

## மணிமேகலைப் பிரசுரம்:

சென்னை மணிமேகலைப் பிரசுரம் மட்டக்களப்பில் நடாத்திய நூல் விற்பனைக் கண்காட்சிகளை ஏற்பாடு செய்தமை எனது எழுத்துத் துறையில் குறிப்பிடத்தக்க அம்சமாகும். அந்தவகையில் மட்டக்களப்பில் ஏற்பாடு செய்த நூல் விற்பனைக் கண்காட்சி மட்/அரசினர் ஆசிரியர் கலாசாலையில் மிகக் கோலாகலமாக நடைபெற்றது.

மேலும் மற்றொரு சந்தர்ப்பத்தில் செங்கலடி, ஏறாவூர், காத்தான்குடி, களுவாஞ்சிக்குடி, கல்முனை, அட்டாளைச் சேனை, திருக்கோவில் முதலிய இடங்களில் ஒரே நாளில் நூல் விற்பனைக் காட்சிகளை ஏற்பாடு செய்து ரவி தமிழ்வாணனுடன் சுற்றுப்பயணம் செய்தது மறக்கமுடியாத அனுபவமாகும்.

இந்த செயற்பாடுகளில் தொல்லியல் தாரகை செல்வி க.தங்கேஸ்வரி முழு ஒத்துழைப்புடன் ஈடுபட்டதைக் குறிப்பிடவேண்டும். அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் நடைபெற்ற இவ்வைபவம் மிகவும் கோலாகலமான விழாவாக நடைபெற்றது. முஸ்லிம் அன்பர்கள் மிகுந்த உற்சாகத்துடன் இந்த ஏற்பாடுகளைச் செய்தனர். இதனால் எழுத்துத்துறைக்கு என்ன லாபம்? மேற்குறித்த இடங்களில் உள்ள பல எழுத்தாளர்களின் நூல்கள் மணிமேகலைப் பிரசுரமாக வெளிவந்து தமிழகத்திலும், வெளிநாடுகளிலும் விநியோகமாகின.

இவ்வாறு நூல்களை வெளியிட்டபோது நூலாசிரியருக்குக் கொடுக்கும் ரூ.35,000/= க்கு 300 பிரதிகள் நூலாசிரியருக்கு வழங்கப்பட்டன. தவிரவும் கொழும்பில் அனைத்து நூல்களுக்கும் வெளியீட்டு விழா நடாத்தப்பட்டது.

## நூல் அறிமுக விழாக்கள்:

இந்தவகையில், உள்ளூர் நூல் வெளியீடுகளுக்கு நாம் மட்டக்களப்பில் நடாத்திய நூல் அறிமுக விழாக்களையும் குறிப்பிடலாம்.

பாடும்மீன் சு.ஸ்ரீஸ்கந்தராசா(அவுஸ்ரேலியா) வெளியிட்ட 'சங்ககாலமும் சங்க நூல்களும்', இ.தங்கராசா(கனடா) வெளியிட்ட 'மாமாங்கேஸ்வரர் பதிகம்' (தமிழ்+ஆங்கிலம்), ராணிசீதரன்(திருமலை) வெளியிட்ட சிறுகதைத் தொகுதி, மாவை நித்தியானந்தன். (அவுஸ்ரேலியா) வெளியிட்ட சிறுவர் நாடகங்கள், ஆய்வாளர் நா.நவநாயகமூர்த்தி (அக்கரைப்பற்று) வெளியிட்ட 'பழந்தமிழர் நடுகல் பண்பாடு', எழுத்தாளர் முகில்வண்ணன்(பாண்டிருப்பு) வெளியிட்ட 'செல்லக்கிளி' (நாவல்) முதலிய நூல்களின் அறிமுகவிழாக்கள் மட்டக்களப்பில் நடாத்தப்பட்டன. இந்த வெளியீட்டு விழாக்கள் மூலம் இந்த நூல்கள் மிக விரிவான முறையில் மக்கள் மத்தியில் அறிமுகமாகின.

மட்டக்களப்பிலிருந்து வெளிவரும் 'தொண்டன்', 'செங்கதிர்', 'தென்றல்', 'கதிரவன்', 'கவிஞன்' சஞ்சிகைகளின் விநியோகத்தை ஊக்குவிப்பதிலும் கணிசமான பங்களிப்பு எம்மால் செய்யப்பட்டது. இவ்வாறு எழுத்துத் துறையின் பல்வேறு முகங்களிலும் தொடர்புபட்டு எனது எழுத்துத்துறை வளர்ந்தது.

## எழுத்தாளர் மாநாடுகள்:

வெளியூர்களில் நடைபெற்ற பல இலக்கிய மாநாடுகளில் பங்கு பற்றியதையும் இதில் சேர்த்துக்கொள்ளலாம். அந்தவகையில், கண்டியில் முதுபெரும் எழுத்தாளர் புண்ணியாமீன் நடாத்திய இலக்கிய மாநாட்டில் பங்குபற்றிக் கௌரவிக்கட்டமை, திருகோணமலையில் திரு செல்வக்குமார் நடாத்திய இலக்கிய மாநாட்டில் பங்கு பற்றிக் கௌரவிக்கப்பட்டமை, 2011, ஜனவரி 6,7,8,9 ஆகிய திகதிகளில் கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் 'சிற்றிதழ்கள்' அரங்கிற்குத் தலைமை வகித்துக் கௌரவிக்கப்பட்டமை, டென்மார்க் ஜீவகுமாரன் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடாத்திய இலக்கிய விழாவில் பங்குபற்றிக் கௌவிக்கப்பட்டமை மற்றும் கல்முனை (பரதன் கந்தசாமி) அக்கரைப்பற்று (நோ.மணிவாசகன்) முதலிய இடங்களில் நடைபெற்ற நூல் அறிமுக விழாவில் கௌரவிக்கப்பட்டமை முதலியனவும் எனது தமிழ்ப் பணிக்குக் கிடைத்த கௌரவங்களாகக் கொள்ளலாம்.

அவ்வப்போது பத்திரிகைகள், சஞ்சிகைகள் முதலியவற்றில் என்னைப்பற்றி வெளிவந்த கட்டுரைகளும், நேர்காணல்களும் எனக்குக் கிடைத்த கௌரவங்களாகவே கொள்கிறேன். அந்தவகையில் தெளிவத்தை ஜோசப்(நேர்காணல் - வீரகேசரி), தி.ஞானசேகரன் (ஞானம் கட்டுரை), பரணீதரன் (ஜீவநதி), மலர்வேந்தன் (தொண்டன் கட்டுரை), செங்கதிரோன்

('செங்கதிர்' கட்டுரை) முதலியோரை நன்றியுடன் நினைவு கூர்கிறேன்.

### 60 வருடகால இலக்கியப் பயணம்:

நினைத்துப் பார்க்கிறேன். இதை எழுதுகிறபோது எனக்கு 77 வயது பூர்த்தியாகிறது. பிறப்பு (06.03.1935). இத்தனை வருடங்களில் சுமார் 58 வருடங்களை எனது இலக்கியப் பணிகளுக்காகச் செலவிட்டிருக்கிறேன். இதில் எனது நாடகப்பணியையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

இலங்கை வானொலியில் ஒலிபரப்பான நாடகங்களைத் தவிர மேடையில் பல நாடகங்களை எழுதித் தயாரித்து நெறியாள்கை செய்திருக்கிறேன். அந்தவகையில் **'திரைகடல் தீபம்'** (இருநாட்கள் மட்/நகரமண்டபத்தில்) **'சூழ்ச்சிவலை'** (ஆரையம்பதி முருகன் ஆலய வீதி) **'அமரதீபம்'**, **'குகைக்கோயில்'**, **'இலக்கிய உள்ளம்'**, **'வருசம் பொறந்தாச்சி'** முதலிய ஓரங்க நாடகங்களை எழுதித் தயாரித்து மேடை ஏற்றியது நினைவுக்கு வருகிறது. (அவ்வாறே 'என் அண்ணா' நாடகம் காத்தான்குடி மத்திய கல்லூரி) மற்றும் பல நாடகங்கள்.

இவை தவிர எனது நண்பர்கள் தயாரித்த நாடகங்கள் கூத்து முதலிய வற்றுக்கும் முழுமையான ஒத்துழைப்பு வழங்கியுள்ளேன். அந்த வகையில் ஆரையம்பதியில் அரங்கேறிய 'முதல் முழக்கம்', சிவசுந்தரம் கொழும்பில் மேடையேற்றிய 'தாதுகோபுரம்' நாடகங்கள் மற்றும் கவிஞர் மூனாக்கானா கொழும்பில் மேடை ஏற்றிய 'பரிகாரி மகன்' கூத்து முதலிவற்றுக்கு உடன் பயணம் செய்து ஒத்துழைப்பு வழங்கியுள்ளேன். மட்டக்களப்பு கலாசாரப்பேரவை மட்டக்களப்பு முற்றவெளியில் நடாத்திய கலை நிகழ்ச்சிகளுக்கும் ஒத்துழைப்பு வழங்கியுள்ளேன்.

### மட்/கலாசாரப்பேரவை:

இவை தவிர 1990முதல் மட்டக்களப்புக் கச்சேரியில் தலைமையக உதவி அரசாங்க அதிபராகக் கடமை ஆற்றிய காலத்தில் கலாசாரப் பேரவையின் சார்பில் நானே பல கலாசார விழாக்களை நடாத்தியுள்ளேன். இந்த விழாக்களில் கவிஞர் மூனாக்கானா, ஆரையூர் நல்.அளகேச முதலியார், வித்துவான் FXC நடராசா, வித்துவான் - பண்டிதர் வீ.சி. கந்தையா முதலியோருக்கு (தமிழ்மணி, மகாவித்துவான்) விருதுகளை வழங்கிக் கௌரவிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளேன். கலாசாரப் பேரவையின் சார்பில் மகாகவி சுப்பிரமணிய பாரதியார் நினைவுதின விழாவை நடத்தியுள்ளேன். இவற்றையெல்லாம் எண்ணிப் பார்க்கும்போது என்மனம் பெருமிதமடைகிறது.

1990 ம் ஆண்டு ஜூன் மாதம் மட்டக்களப்பு நகர மண்டபத்தில் நடாத்திய கலாசார விழா என் நினைவுக்கு வருகிறது. இவ்விழா மிகவும் கோலா கலமாக நடைபெற்றது. மறுநாள் மட்டக்களப்பில் கலவரம் வெடித்தது. மட்டக்களப்பு நகரை ராணுவம் பொறுப்பேற்றது. எவரும் சுதந்திரமாக நடமாட முடியாது, வீட்டில் அடங்கிக் கிடந்தனர். மட்.கச்சேரிக்குச் செல்லும் போது மஞ்சந்தொடுவாய் வரை ராணுவ ஜீப் கூடவரும். அவ்வாறே மட்டக்களப்பிலிருந்து பயணம் செய்யும்போது ஆரையம்பதி ராணுவ கப்டனுக்கு போன் செய்து ஒரு ராணுவ வாகனத்தை மஞ்சந்தொடுவாய்க்கு வரவழைத்து அதன் பாதுகாவலுடன் ஆரையம்பதிக்குச் செல்ல வேண்டியதாயிருந்தது.

## அரும்பொருட் காட்சியகம்:

1992ம் ஆண்டு நான் திருகோணமலைக்கு மாற்றப்பட்டேன். அங்கு நான் இளைப்பாறும் வரை (06.03.1995) கடமை ஆற்றினேன். அங்கு நடைபெற்ற கலை இலக்கிய விழாக்களிலும் பங்கு கொண்டேன். நூல் அறிமுக விழாக்களை நடாத்தினேன்.

06.03.1995 ல் இளைப்பாறியபின் மட்டக்களப்புக்கு வந்து கலாசாரப் பேரவையின் நடவடிக்கைகளில் ஈடுபட்டேன். அந்தவகையில்இரு முக்கிய நிகழ்வுகளைக் குறிப்பிட வேண்டும். அவை.

1) கச்சேரியில் அரும்பொருட்காட்சியகம் அமைப்பதற்கு மாவட்ட கலாசார உத்தியோகத்தர் செல்வி.க.தங்கேஸ்வரிக்கு உதவியது.

2) அவ்வாறே மட்டக்களப்புக் கூத்துக்கலையை ஆவணப்படுத்துவதற்கு அவருக்கு உதவியது. பேராசிரியர் சி.மௌனகுருவின் நெறிப்படுத்தலுடன் இந்நிகழ்வு நடைபெற்றது. 'அல்லி நாடகம்'(தென்மோடிக் கூத்து), 'சுபத்திரை கல்யாணம்'(வடமோடிக் கூத்து) அரங்கேற்றப்பட்டு வீடியோப் பதிவு செய்யப்பட்டது. இந்த இருநாடகங்களும், இரு அண்ணாவியார் இருவர் நேர்காணல், கூத்துக்கலைஞர் இருவர் நேர்காணல், சுவைஞர் இருவர் நேர்காணல் முதலியன 9 வீடியோ கசட்டுகளில் பதிவு செய்யப்பட்டன. இவற்றின் வெளியீட்டு விழா மட்டக்களப்பு தேவநாயகம் மண்டபத்தில் மிகக் கோலாகலமாக நடந்தது. மட்டக்களப்பு 'கூத்துக்கலை ஆவணப்படுத்தல்' சிறப்புமலர் வெளியிடப்பட்டது. இந்தச் சிறப்பு மலர் என்னால் தயாரிக்கப்பட்டது.

## பரிசுகளும் பாராட்டுக்களும்:

இந்த 58 வருடகால இலக்கியப் பணியில் பல பாராட்டு விழாக்களையும் நான் கண்டுள்ளேன். 1962ல் நான் 'திரைகடல் தீபம்' நாடகப் பிரதிக்கு முதற்பரிசு பெற்றதை முன்னிட்டு எனது ஊர் மக்கள் ஆரையம்பதியில் மிகக் கோலாகலமான பாராட்டு விழா எடுத்தனர். ஆரையம்பதி முருகன் ஆலய வீதியில், திறந்தவெளி அரங்கு அமைக்கப்பட்டு இந்தப் பாராட்டு விழா நடத்தப்பட்டது. கவிஞர் மூனாக்கானா, சு.பரசுராமன் அதிபர், எனது மைத்துனர் ஆரையூர் இளவல் இன்னும் பலர் சேர்ந்து இவ்விழாவை நடாத்தினர்.

2) நான் 1984 ல் SLAS பரீட்சை பாஸ் செய்து உதவி அரசாங்க அதிபராக நியமனம் பெற்றதையும் 50 வயதைப் பூர்த்தி செய்ததையும் முன்னிட்டு மட்.இ.கி.மி.பாடசாலை மண்டபத்தில் மதிய போசனத்துடன் ஒரு பாராட்டு விழா மலர் வெளியிடப்பட்டது. இதை முன்னின்று நடாத்தியவர் எனது மைத்துனர் ஆரையூர் இளவல், கவிஞர் மூனாக்கானா அதிபர் சு.பரசுராமன், உதவிக் கல்விப் பணிப்பாளர் துரைராசசிங்கம் மற்றும் பலர்.

இந்தப் பாராட்டு விழாக்களில் ஊர்ப்பிரமுகர்களும் திணைக்கள அதிகாரி களும் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்க அம்சமாகும். எத்தனையோ பாராட்டுக்களும் கௌரவிப்புக்களும் நடைபெற்றிருந்தபோதிலும் மேற் கூறிய இரு பாராட்டு விழாக்களையும் என்னால் மறக்கமுடியாது.

## விருதுகளும் பாராட்டுக்களும்:

இதுவரை எனக்குக் கிடைத்த சில கௌரவங்கள் பற்றியும் இங்கு குறிப்பிட வேண்டும்.

1) தமிழ்மணி விருது - இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம்
2) கலாபூசணம் - இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம்.
3) ஆளுநர் விருது - வடக்குக் கிழக்கு மாகாண சபை
4) இலக்கிய வித்தகர் - மட்.தமிழ் எழுத்தாளர் பேரவை
5) இலக்கிய வித்தகர் - கண்டி புண்ணியாமீன் நிறுவனம்
6) எழுத்தியல் வித்தகர் - மட்.எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம்
7) ASDA கௌரவம்(11.12.2011) ஆரையம்பதி ASDA நிறுவனம்

மேற்படி கௌரவங்கள் எனது 58 வருடகாலத் தமிழ்ப்பணிக்குக் கிடைத்த சான்றுகள் எனலாம்.

**(தொடரும்.....)**

ஜூலை2012, செங்கதிர் - வாழ்க்கைத்தடம் பற்றி திரு.க.சபாரெத்தினம், துறையூர் செல்லத்துரை ஆகியோர் எழுதியிருந்த 'தெறிகதிர்' படித்து அளவிலா மகிழ்ச்சி அடைந்தேன். இவர்கள் இருவரும் எழுதியிருந்த அத்தனை விடயங்களும் அப்பட்டமான உண்மை.

1) துறையூர் க.செல்லத்துரை, என்னுடன் மட்/காத்தான்குடி ம.ம.வி யில் புலமைப்பரிசில் பெற்று(5ம் வகுப்பு) படித்தவர். அவர் எழுதியுள்ள அத்தனை விடயங்களும் என் நினைவில் தவறிவிட்டன. அதை நினைவூட்டி எழுதியமைக்கு அவருக்கு என் நன்றி.

2) திரு.க.சபாரெத்தினம் என்னுடன் மட்டக்களப்பு கல்விப்பணி மனையில் நீண்டகாலம் பணியாற்றியவர். அவர் எழுதியுள்ள அத்தனை விஷயங்களும் உண்மை. அவர் மிகுந்த தன்னடக்கம் கொண்டவர். என்னை மிக நுணுக்கமாக அவதானித்துள்ளார்.

அவர் பிற்காலத்தில் மொஸ்கோ தூதரகத்தில் பணியாற்றிய இலக்கிய ஆர்வலர். சிறந்த எழுத்தாளர். அவருக்கு இவ்வருடம் மாகாணசபை முதலமைச்சர் விருது கிடைத்துள்ளது. வாழ்க்கையில் அரிச்சந்திரன். அவருக்கு என் பாராட்டுக்கள்.

தவறவிட்ட விடயங்களை நினைவூட்டியமைக்கு இருவருக்கும் என் இதயம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**இரா.நாகலிங்கம்**
**(அன்புமணி)**

தொடர் நாவல்

# மீண்டும் ஒரு காதல் கதை

19



- திருக்கோவில்
யோகா.யோகேந்திரன்

நான் அமெரிக்கா சென்று படிப்பு முடிந்து திரும்புவதற்குள் ஜயலத்தைக் கண்டு பிடித்து மணந்து கொள்ள வேண்டு மென்றும் அப்படி முடியாது போனால் அமெரிக்காவிலிருந்து வந்ததும் என்னை மணந்து கொள்ள வேண்டுமென்றும் ராதாவிடம் வாக்குறுதி பெற்றுக் கொண்டுதான் அமெரிக்கா சென்றேன். ராதாவிடம் அவ்வாறான வாக்குறுதியொன்றைப் பெறுவதிலோ இயல்பான விருப்பமின்றி அவளைத் திருமணம் செய்வதிலோ எனக்குத் துளியும் விருப்பம் கிடையாது. மாமா மாமிக்காகவே அப்படி வாக்குறுதி பெற்றேன்.

அமெரிக்கா போன பிறகும் ஜயலத்தைப் பற்றி ராதாவிடம் அடிக்கடி போனிலும் கடிதத்திலும் விசாரித்துக் கொள்வேன். எந்தவிதமான தகவலையும் அவளால் பெறமுடியாதிருந்ததையே அறிய முடிந்தது.

அங்கு ஆறு மாதங்கள் வரை விரிவுரை ரீதியிலும் செயன்முறை ரீதியிலுமான கல்வியே கற்பிக்கப்பட்டது. ஆறுமாதங்களின் பின் தொடர்ந்து செயன்முறைக் கல்வி கற்பிக்கப்பட்டது.

நான் பணிபுரிய நியமிக்கப்பட்ட பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த ஒரு இலங்கையரை அங்குள்ள டாக்டர் ஒருவர் அறிமுகப்படுத்தினார். விபத்தொன்றில் இரு கண்களும் செயலிழந்து போனதால் சிகிச்சைக்காக வந்திருப்பதாக தகவல் கூறினார் அந்த டாக்டர்.

'ஜயலத்' என்று அவரின் பெயரைக் கேட்டதுமே அவர் அருகில் சென்று பேச்சுக் கொடுத்தேன்.

"இலங்கையில் நீங்க எந்த இடம்?"

"நாம வவுனியா. நம்ம பேரு ஜயலத்."
"வவுனியாவா? நீங்க எங்கே வேலை செய்தீங்க?" என்று கேட்டேன் சந்தேகத்துடன்.

"நாம கடசியா மட்டக்களப்பில வேலபார்த்தது.. ரீச்சர் வேல."
எனது சந்தேகம் தீர்ந்த நிலையில் "நீங்க பேப்பருக்குகெல்லாம் கதை எழுதுற ஜயலத் தானே?" என்று கேட்டேன்.

"ஆமா! அது எப்பிடி ஒங்களுக்குத் தெரிஞ்சது."

"எப்படியோ கேள்விப்பட்ட ஞாபகம்" என்று சமாளித்த எனக்கு இலங்கையில் ஒரு வருசமாகத் தேடியும் கண்டுபிடிக்க முடியாதிருந்த மனுசன் பல்லாயிரக்கணக்கான மைல்களுக்கப்பால் கையில கிடைத்த மாதிரி கிடைத்த அதிசயத்தை நினைக்க வியப்புத் தாளவில்லை எனக்கு! எவ்வாறானதொரு கடமையை ஆண்டவன் என்னிடம் ஒப்படைத்துள்ளாரென எண்ணும்போது உடல் புல்லரித்தது. ராதாவை ஏமாற்றி விட்டு சென்று விட்டதாக ஜயலத்தைத் தவறாக நினைத்ததற்காக அவனிடம் மானசீகமாக மன்னிப்புக் கேட்டுக் கொண்டேன்.

"அது சரி.... உங்களுக்கு எப்படி இந்த அக்ஸிடென்ற் நடந்தது?" என்று கேட்டேன்.

"நாம சும்மா ரோட்ல நடந்து போனப்ப டக்குனு ஒரு ஓட்டோவுக்கு சைட் குடுக்கப்பாத்தகாரு நம்மமேல மோதிச்சு. நம்ம கூட வந்த கொளந்த, நங்கி, இன்னொரு பையன் மூணுபேரும் கொஞ்சம் முன்னால போனதால தப்பிச்சாங்க."

"அக்ஸிடென்ற் நடக்கும் போது மட்டக்களப்பிலதான் வேலை செய்தீங்களா?"

"இல்ல டாக்டர். அது பெரிய கதய். அதெல்லாம் ஒங்ககிட்ட சொல்லி ஒங்க நேரத்த வீணடிக்க கூடாதில்லையா?"

"பரவாயில்ல. இப்போ நான் வேலை நேரம் முடிந்துதான் இங்க வந்தேன். சும்மா சொல்லுங்க."

ஜயலத்துக்கும் தன் மனப்பாரத்தை யாரிடமாவது சொல்ல வேண்டும். மளமளவென்று பேச ஆரம்பித்து விட்டார்.

"நமக்கு ஆறு வருசம் முந்தி கல்யாணம் ஆச்சு. நமக்கு ஒரு கொளந்த இருக்கா. நிலூக்கா பிரியதர்ஷினி அவ பேரு. கொளந்தயோட அம்மா மூணு வருசம் முந்தி கொளம்ப பக்கம் நடந்த குண்டு வெடிப்பில செத்துப்போனா. அதுக்கப்புறம் என்ன பண்றதென்னே வெளங்கல. வேல பாக்கவும் மனசாகல. வீட்ல இருக்கவும் மனசாகல. அதுனால வேலய மாத்தி எடுத்துக்கிட்டு மட்டக்களப்பு போனன்.

"அங்க ஒரு தமிழ் பொண்ணு என்னைய கல்யாணம் கட்ட விருப்பம் சொன்னா. அவ ஒரு டாக்டர் பொண்ணு. நமக்கு அந்தப் பொண்ணுமேல விருப்பம் கெடயாது. நம்ம கொளந்த மிச்சம் விருப்பம் காட்டி 'அம்மா'

'அம்மா'ன்னு கூப்பிட்டா. ஏன்னா நம்ம சித்ராபோல அவ மோகம் வெச்சிருந்தா. எனக்கு என்ன பண்றதின்னே தோணல்ல. கடசியா லீவப் போட்டுக்கிட்டு கொஞ்சநாள் வெலகி இருப்போமின்னு மட்டக்களப்ப விட்டுப் போனப்பதான் அந்த அக்ஸிடென்ற் நடந்திச்சு."

நான் இடை மறித்து, "ஏன் அந்த டாக்டர் பெண்ணை நீங்க கல்யாணம் கட்ட விரும்பல்ல. அவ தமிழ் பெண் என்றதாலா?" என்று கேட்டேன்.

"ஐயையோ! அப்பிடியெல்லாம் எதுவும் கெடயாது டாக்டர். அது ஒரு ஏங்சல் மாதிரி பொண்ணு! அதப்போய் நான் கலியாணம் கட்ட நெனக்கிறதே பாவம். அது ரொம்பவும் தப்பு!"

"ஏன் அப்படிச் சொல்றீங்க?"

"நாம அப்பிடியெல்லாம் ஆசைப்படுற ஆள் கெடயாது. அது ஏதோ முட்டாள்தனமா நம்மள விரும்பிச்சு. அது ஞாயம் இல்லே. அதுனால அது வழில நிக்காம எங்காச்சும் போகலாம்னு நெனச்சுத்தான் கொளந்தயோட போனது. கடசில இப்பிடி ஆகிப்போச்சு."

"அமெரிக்காவுக்கு வர மிச்சம் செலவாகி இருக்குமே. செலவெல்லாம் யார் செய்தது?"

"மீஹமுவ (நீர் கொழும்பு) பெரிய பணக்கார மொதலாளி காத்திகேசன் ஐயாதானே நம்மள மோதினகாரை ஓட்டி வந்தாரு? அவருதான் நமக்கு எல்லாச் செலவும் பண்ணி இஞ்ச அனுப்பி வெச்சாரு."

"உங்க மகள் யாரோடு இருக்கிறா?"

"நம்ம மகள் நிலு, தங்கச்சி நேத்ரா, வேலக்காரப் பையன் சீனு எல்லாப்பேருமே மொதலாளி வீட்டதான் இருக்காங்க. அவருக்கு நெறைய சொத்தெல்லாம் இருக்கு. ஆனா சொந்தம் ஒண்ணும் இல்லே. இருந்த ஒரு மகளும் அக்ஸிடென்ற்ல செத்துப் போனாங்க. மொதலாளி ரொம்ப நல்ல ஆளு"

"அதுசரி... அந்த டாக்டர் உங்களைத் தேடியிருப்பா தானே? நீங்க அவங்களுக்குச் சொல்லிவிட்டு வந்திருக்கலாம். அல்லது நிலமையை விளக்கி ஒரு கடிதமாவது போட்டிருக்கலாம் இல்லையா?"

"அது என்னைத்தேடிப்பாத்து நாம் சொல்லாம வந்ததுக்கு கோவம் வந்து நமக்கு ஏசவேணும். நம்ம மேல வெறுப்பு ஏற்படணும். நமக்கு திட்டனும். அதுதானே நமக்கு தேவைப்பட்டுச்சி."

"ஏன் ஜயலத் அப்படிச் சொல்றீங்க?"

"அவ தன்னோட சொந்த மச்சானை கல்யாணம் கட்ட இருந்த

பொண்ணுங்க. நம்ம நிலு அவங்கள அம்மான்னு கூப்பிட்டுக் கிட்டிருந்திச் சில்லையா? அதனால அவங்க மனசு மாறி நம்மள கல்யாணம் கட்டிக்க நெனச்சாங்க. அது நமக்குச் சரியாப்படல்ல. அதுதான் நாம சொல்லிக்காம பொறப்பட்டு வந்தது."

"அவ தன் மச்சானைக் கல்யாணம் செய்யாம உங்களையே எதிர்பார்த் திருந்தா அவ பாவமில்லையா?"

"சின்ன வயலிலிருந்தே அவங்களைக் கட்டிக்க இருந்த அவங்க மச்சான் பாவமில்லையா? அந்தப் பொண்ணைவிட அவங்க மச்சான நெனச்சுத்தான் நாம போனது?"

எனக்கு உடல் சிலிர்த்தது. ஜயலத் என்கிற மாமனிதனுக்கு முன்னால் எனது விட்டுக் கொடுப்பு ஒரு தூசு போலத் தெரிந்தது எனக்கு! இது எத்தனை உயர்ந்த மனசு என எண்ணி மனம் நிறைந்தேன். என் ராதாவின் தெரிவில் தப்பே இல்லை எனத் திருப்திப்பட்டேன்.

"உங்களுக்கு மீண்டும் கண்பார்வை கிடைக்க வேணுமென்று விரும்பியது நீங்களா அந்தப் பெரியவரா?"

"நாம நெணச்சி என்ன பண்றது டாக்டர். அதுக்கு லெச்சக்கணக்கில் பணம் வேணுமில்லையா? அது எங்கிட்ட ஏது? அவருதான் எங்கிட்ட இதப் பத்தி கதச்சாரு. ஒரு மனுசனுக்கு கண்ணு தெரியாட்டிப் போனா எப்பிடி சீவிக்கிறது? எனக்காக மட்டுமில்ல எங் கொளந்தைக்காகவும் மொதலாளி ஐயாவைப் பாத்துப் பராமரிக்கவும் கண்ணு வேணும். நம்ம விரும்பம் கேளாமலே எல்லாச் சொத்துக்களையும் நம்ம பேருக்கு எழுதி வச்சிட்டாரு. அவர தெய்வம் கணக்கா நாமதானே கவனிச்சிப் பார்த்துக்கணும்!

என்னால இனியும் உண்மையை மறைக்க முடியவில்லை.

(கதை தொடரும்....)


**'திருக்கோவில் பிரதேச இலக்கிய வரலாறு' (ஆய்வு)**

ஆசிரியர்:- ஆய்வார்வலர் நா.நவநாயகமூர்த்தி

- இந்நூலை வெளியிட விரும்பும் திருக்கோவில் பிரதேச இலக்கிய ஆர்வலர்கள் நூலாசிரியருடன் தொடர்பு கொள்ளவும்.

நா.நவநாயகமூர்த்தி
சின்னப்பனங்காடு
அக்கரைப்பற்று
தொலைபேசி 067 3678826, 077 2729641

# விசுவாமித்திர பக்கம்

## முன்னீடு

விசுவாமித்திர பக்கத்தில் **நோக்கல்** என்ற பகுதியை ஆரம்பித்து இலக்கியப் பிரதிகள் மீதான கண்ணோட்டம் இடம்பெற்று வந்தமை தெரிந்ததே... பாரிய கண்டனங்கள் எதுவுமில்லாமலும் படைப்பாளி மனம் நொந்துவிடாமலும் 'பத்திரமாகச் சொல்லி' நூல் மதிப்பீட்டுத் துறைக்குப் புதிய பரிமாணத்தைக் கொடுத்தமை பற்றி 'செங்கதிர்' வாசகர்கள் நன்கு அறிவார்கள். பல திசைகளிலுமிருந்து நோக்கல் பற்றி விசுவாமித்திரனுக்குப் பல பாராட்டுக்கள் வந்தன. குறிப்பாக மூத்த படைப்பாளியான செங்கை ஆழியான் போன்றவர்கள் உற்சாகம் தந்தார்கள்.

இந்த நிலையில் இரண்டாம் விசுவாமித்திரனுக்கு தனது பன்முக ஆளுமையின் வெளிப்பாட்டை **ஆக்கல்** என்ற பகுதியூடாக இணைத்துக் கொள்ள நேர்ந்தது. பின்னர் **தாக்கல்** எனற பகுதியின் பிரசவம். இவ்வாறான நிலையில் நோக்கல் என்ற பகுதி விசுவாமித்திர பக்கத்தை ஆக்கிரமித்திருப்பதாக முறைப்பாடும் கிடைத்தது. எனவே இந்த இதழில் **ஆக்கல்** என்ற பகுதியில் காதல் கவிதையொன்று பிரசுரமாகின்றது. இது இரண்டாம் விசுவாமித்திரனின் இன்னுமொரு படைப்பு முகம்.

காதல் கவிதை என்ற பேரில் நாம் சந்திக்கும் அவலம் கொஞ்ச நஞ்சமல்ல. கம்பன் தொடக்கம் கண்ணதாசன் ஊடாக வைரமுத்து, மேத்தா என்ற பிரபலங்களின் மேதாவிலாசத்தையும் காதல் பற்றிய கவிதைகளின் வித்துவங்களையும் விளங்கிக் கொண்டவன் என்ற வகையில் குறிப்பிட்ட சில சொற்களை வைத்துக் கொண்டு கயிறு திரித்து மாயாஜாலம் காட்டும் கவிதைக் கோட்பாட்டில் இந்த இரண்டாம் விசுவாமித்திரனுக்கு உடன்பாடில்லை... ''வாசிக்கத் தெரியாத வம்பர் தலைப்பட்டு காசிக்கு ஐநூறு கவி'' என்று ஔவையாரே பாடியுள்ளார். ஔவையார் காலமே அப்படி என்றால் இன்றைய நிலையைக் கேட்கவா வேண்டும்?

விசுவாமித்திரன் யார்? எந்த சாகித்தியம்? வயது என்ன? போன்ற கேள்விகளால் தலையைப் போட்டுக் குடைந்து கொள்ளத் தேவையில்லை. காதலர்களினதும் வாசகர்களினதும் மனங்களுக்கு மல்லிகைப் பூச்சூடுதல் மட்டுமே நோக்கம்.

# காதலி என்னை மட்டும் காதலி

**ஆக்கல்**

அன்று
உலகில்
முதலாவது காதல்
முத்தமிட்டபோதுதான்
ரோஜா
மலர்களின் ராஜாவானது
இன்று
உன் பெயரை
தாளில் எழுதி
மணந்து பார்க்கிறேன்.
ரோஜாப்பூ வாசம்
***

உன்விருப்பத்தை
முதன் முதலாக
நீ
என்னிடம் தெரிவித்தபோது
வாழ்த்தியவர்கள்
சாஜஹான் மும்தாஜ் தம்பதிகள்தான்
***

சொல்லியபடி நான்
உரிய நேரத்தில்
வரவில்லை என்பதற்காக
ஏன்
காவிரி அணைக்கட்டின்
கதவுகளைத் திறந்து விடடாய்?
***

என் காதலும் உன் காதலும்
ஒன்றானபோது
பூச்சியமானது
இந்தப் பூலோகம்தான்.
***

தாஜ்மஹாலின் நிழலில்
நான் இருப்பதாகக்
கனவு கண்டேன்
நிழலே நீ தான்.
***

உன் கால் கொலுசுகள்
கவிதை பாடின.
இசையமைக்க முடியாமல்
அழுதது இதயம்
***

உன் காதலுக்காக
என் இதயம் ஏங்கியபோதெல்லாம்
எனக்காக
குரல் கொடுத்தது
குயில் மட்டும்தான்.

***

உன்
பல்வரிசையைப் பார்த்துத்தானோ
மாதுளம் கனிகள்
மரத்திலிருந்து
மயங்கி விழுந்தன.

***

உன்னைப்பற்றிய
என் நினைவுகளுக்கு
விலங்கு மாட்டிப் பார்த்தேன்
நித்திரைக் குளிகைகள்தான்
நினைவுக்கு வந்தன.

***

நீ
என்பக்கத்தில் இருந்தால்
பகலும் இரவும் ஒன்றுதான்.

***

ஏனையோருக்கு
வருடத்தில் ஒரு நாள்தான்
காதலர்தினம்
நமக்கோ
ஒவ்வொரு நாளும்
காதலர் தினம்தான்.

***

நமது காதலை அறிந்து
நட்சத்திரங்கள்
வானத்திலிருந்து
வாழ்த்துக் கூறின.

***

தாங்க முடியாமல் தவிப்பதற்கும்
தூங்க முடியாமல் துடிப்பதற்கும்
சந்திரன்தான்
நமக்குச் சாட்சி.

--------------- இரண்டாம் விசுவாமித்திரன்.

# பேராசிரியர் மௌனகுரு பக்கம்....

## அபூர்வமான ஒரு மனிதர்



தர்மஶ்ரீ பண்டாரநாயக்கா சிங்கள மக்கள் மத்தியில் பரவலாக அறியப்பட்ட ஒரு பெரும் நாடகக் கலைஞர், மேடை நடிகர், சினிமா இயக்குநர், சினிமா நடிகர். 1975 இலிருந்து அவருடன் எனக்கு நெருக்கமான உறவு இருந்து வருகிறது. தமிழ் மக்கள்மீதும் அவர்கள் நடத்தும் நியாயபூர்வ போராட்டங்கள்மீதும் அக்கறை கொண்டவர். உண்மையான தமிழ் சிங்கள ஐக்கியத்தை விரும்புவர்.

2005ல் இராவணேசனை கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பார்த்த பின்னர் அவர் அந்நாடகத்தின் நேசனாகவே மாறிவிட்டார். அது மேடையிடப்படும் இடங்களுக்கெல்லாம் வந்துவிடுவார். அவருக்கு அதனைச் சிங்களத்தில் (தமிழ்க்கூத்தையும் சிங்கள நடனத்தையும் இணைத்து) தயாரிக்கும் திட்டமும் இருந்தது.

இராவணேசனை தமது செலவிலேயே 2005 இல் கொழும்பு சென்ற் பிஷப் கல்லூரியில் காட்டினார். அந்நாடகத்திற்கான அழைப்பிதழ்களைத் தானே நேரில் சென்று பிரபல சிங்களக் கலைஞர்கட்குக் கொடுத்தார்.

நாங்கள் இராவணேசனைக் கொழும்பில் நடாத்துவதற்கு முதல்நாள் அவரின் தாயார் காலமாகிவிட்டார். முறைப்படி அவர் நாடகத்தை ஒத்தி வைத்திருக்க வேண்டும். அவர் என்ன செய்தார் தெரியுமா? பிரேதம் வீட்டில் இருக்கத்தக்கதாக இராவணேசனை மேடையிடும் வேலையிலும் வீடுவீடாகச் சென்று பிரபல சிங்களக் கலைஞர்கட்கு அழைப்பிதழ் அனுப்பும் வேலையிலும் ஈடுபட்டிருக்கிறார். என்ன அற்புதமான மனிதர்! இவையெல்லாம் தமிழர் தரப்பினர் அறியாத விடயங்கள்.

அத்தோடு எம்மைக் கொண்டு சிங்களக் கலைஞர்கட்கு ஒரு கூத்துப்பயிற்சிப் பட்டறையும் வைத்தார். அதுமாத்திரமல்ல இராவணேசனையும் பயிற்சிப் பட்டறையையும் சிங்கள - ஆங்கிலத் தலைப்புகளுடனான வீடியோப் படமாக்கித் தான் சென்ற உலக நாடுகளுக்கெல்லாம் (இந்தியா, பிரான்சு, லண்டன், செக்கோசெலவாக்கியா) கொண்டு சென்று அவற்றை அங்குள்ள அரங்கவியலாளர்கட்கும் போட்டுக்காட்டி ஈழத்தில் தமிழ் நாடக மரபும் ஒன்று உண்டு என்பதைப் பிற நாட்டவர்க்கும் உணர்த்தினார். இதனால் சிங்களப் பேரினவாதிகளின் எதிர்ப்பையும் பெற்றுக் கொண்டார். தமிழ் மக்கள் தலைநகரம் கொழும்பில் கும்பாவிஷேகங்களையும், பெருவிழாக் களையும், பரதநாட்டியத்தையும் பிரபலமாக்கிக் கொண்டிருக்கும் ஒரு சூழலில் தர்மஶ்ரீ பண்டாரநாயக்கா ஈழத்துத் தமிழரின் அடையாளமான கூத்தையும், கூத்து வழியாக வந்த இராவணேசனையும் வெளி உலகுக்கு அறிமுகப்படுத்தினாரென்றால் அவருக்குத் தமிழ் உலகு எவ்வளவு கடப்பாடுடையதாக இருந்திருக்க வேண்டும். ஆம், அவர் ஒரு அற்புத மனிதர்!

# தெறிகதிர்-28

- வேல்அமுதன்

செங்கதிரில் கோத்திரன் எழுதிவரும் ஆக்கங்களை வாசித்து மகிழ்வேன் நான். கோத்திரனின் ஆக்கங்களை விரும்பி வாசிக்கும் பொழுதெல்லாம் "இனிமைத் தமிழ்மொழி எமது - எமக்கு இன்பம் தரும்படி வாய்த்த நல் அமுது" என் பாவேந்தர் பாரதிதாசனின் அடிகள் நினைவுக்கு வருவதுண்டு.

ஆம்! கோத்திரனின் தமிழ்மொழிநடை அப்படிப்பட்டது. அது மிக இனிமை; எளிமை; அருமை. கோத்திரனின் எழுத்துக்களிற் காணப்படும் இன்னொரு சிறப்பம்சம் அவை பெறுமதி மிக்க தகவற் கருவூலங்களாகக் காணப்படுகின்றமை. கோத்திரனை அகமகிழ்ந்து பாராட்டும் அதேவேளை தொடர்ந்து எழுதும்படியும் அன்பாக அவரைக் கேட்டுக் கொள்கிறேன்.

அண்மையில் வெளிவந்த 'செங்கதிர்' 54ம் இதழில் 'இலங்கை அறிவு இயக்கம் ஒரு மறுமலர்ச்சியின் குறியீடு' என்ற இலக்கிய வரலாற்றைக் கோத்திரன் எழுதியிருந்தார். அது சத்தியமான பதிவு என்பதை இலங்கை அறிவு இயக்கத்தின் அமைப்பாளர் என்ற முறையில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதேவேளை அக்கட்டுரையிற் குறிப்பிடப்பட்ட விடயங்களுக்கு மேலாக சில விடயங்கள் இந்நேரம் நினைவுக்கு வருவதால் அவற்றையும் குறிப்பிட ஆவலாகவுள்ளேன்.

1) இலங்கை அறிவு இயக்கம் 1970ல் தோற்றம் பெற்ற ஆரம்பகாலத்தில் எங்களுடன் சேர்ந்து கடுமையாக உழைத்த இன்னொருவர் கோண்டாவில் மருந்தாளர் **சர்வானந்தன்** அவர்கள்.

2) இயக்க நிகழ்ச்சிகளில் பங்குபற்றிச் சிறப்பித்த அறிஞர்கள் மேலும் இருவர்.
i) இணுவையூர் **இரத்தினம்** ii) நூலகர் **கமால்டீன்.**

3) அறிஞர் பெருமகன் சிவன்கருணால பாண்டியனைப் பாராட்டி, கொட்டாஞ்சேனை வள்ளுவ பெருவிழாவில் சிறப்புரை நிகழ்த்த வைத்தமை, அத்தோடு அவர் சிவன்பத மெய்தியமையைத் தொடர்ந்து வெள்ளவத்தை இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் அறிவு இயக்கம் இரங்கல் வைபவம் ஒன்றையும் நடத்தியது.

4) இலங்கை அறிவு இயக்க ஆட்சிக்குழு உறுப்பினாக இருந்தவர் 'வெற்றிமணி' ஆசிரியர் M.K.S.சிவகுமாரன். இவர் தற்சமயம் புலம் பெயர்ந்து ஜேர்மனியில் வாழ்கிறார்.

எங்கள் திறனாய்வாளர் K.S. சிவகுமாரன் எங்களுக்கு ஒத்தாசை வழங்கிய இன்னொருவர். திறனாய்வாளர் K.S.சிவகுமாரன் எழுத்தாளர் நித்தியகீர்த்தியின் 'மீட்டாத வீணை' நாவல் அறிமுக விழாவில் பங்குபற்றி ஆய்வுரை வழங்கி உதவியவர்; பம்பலப்பிட்டி கிறீன்லண்ட் ஹோட்டலில் இலங்கை அறிவு இயக்கம் நடத்திய இலக்கிய ஜாம்பவான் செங்கை ஆழியான் பாராட்டுக் கூட்டத்திலும் பங்கு பற்றிப் பாராட்டுரை வழங்கிச் சிறப்பித்தவர்.

கலை இலக்கிய பண்பாட்டுப் பல்சுவை திங்களிதழ் செங்கதிரினைக் குறிப்பாகச் செந்தமிழ்க் கவிஞன் செங்கதிரோன் திரு.த.கோபாலகிருஷ்ணன் அவர்களை எனது இக்குறிப்பில் நான் மறந்தால் நன்றி மறந்தவனாவேன். வருங்கால இலக்கிய ஆய்வாளருக்கும், மாணவருக்கும் வசதியாக இவ்வரலாற்றுக் கட்டுரையைப் பிரசுரித்து இலக்கியச் சேவை செய்யும் இவர்களுக்கும் எனது இதயபூர்வமான நன்றியினை நவில்கின்றேன். மீளவும் எழுத்தாளர் கோத்திரனுக்கும் சஞ்சிகையாளர் செங்கதிரோனுக்கும் நன்றிகள்!

# தெறிகதிர்-29

ஆர்.எம்.நௌஸாத்

'செங்கதிர்' - 57 கிடைத்து மகிழ்ந்தேன்.
அதில் மணிப்புலவர் மஜீத்தின் கட்டுரைக்குப் பதிலளித்துள்ள சா.திருவேணிசங்கமத்தின் கட்டுரையில்,
"..... இஸ்லாம் தோன்றுவதற்கு முன்னைய காலத்தை அரபு வரலாற்றாசிரியர் 'காட்டுமிராண்டிக்காலம்' என்பர்......"
என்று குறிப்பிட்டுள்ளார். அப்படியல்ல. இஸ்லாத்திற்கு முன் அங்கு யூதமதமும், கிறிஸ்தவமும் பரவியிருந்தன. வர்த்தகம் செழிப்புற்றிருந்தது. அக்காலம் அரபியில் 'அய்யாமுல் காஹிலிய்யா' (அறிவு குறைந்தகாலம்) எனப்படுகிறது.
இஸ்லாம் (நபிகள் பெருமான்) அங்கு தோன்றி அறிவொளி பரப்பியதற்கு முன்னரே இருந்த நிலை இஸ்லாமிய மெஞ்ஞான அறிவு விருத்தியாகாதிருந்தமையால் அது 'அய்யாமுல் காஹிலிய்யா' எனப்பட்டது. தவிர, அது காட்டுமிராண்டிகளின் காலமல்ல.
மேலும், திருவேணிசங்கமம் 'அரபிகள்', 'முஸ்லிம்கள்' என்ற இருசொற்கள் குறிப்பிடும் இருவேறு உண்மையான பொருளை மேலும் ஒரு இஸ்லாமிய அறிஞரிடம் கேட்டுத் தெளிவுபெறல் நலம்.

◆ 'சொல்வளம் பெருக்குவோம்' பகுதியில் End - பயன் என்ற மொழிபெயர்ப்பு சரியானதா?
◆ மருதூர் ஜமால்தீனின் 'நிலைமாறுகிறேன்' கவிதை அருமை.
◆ அன்புமணியின் மலர் சஞ்சிகையின் வரலாறு ('வாழ்க்கைத்தடம்'-6) மிகச்சுவைபட எழுதியிருக்கிறார். அதில் எழுதியிருந்தோரைக் கண்டு ஆச்சரியமாக இருந்தது. மலரின் அட்டையையும் காட்சிப்படுத்தியிருக்கலாம்.
◆ கோத்திரனின் 'கதைகூறும்குறள்'இல் - கூட இருந்து குழிபறித்தோரின் கதைகளில், இயேசு தொடக்கம் அண்ணா வரை பலபேரைச் சொல்லியிருக்கையில், தமிழரின் போராட்ட வரலாற்றில் 'சமீபத்திய ஒருகதை'யையும் எழுதியிருக்கலாம். (நமக்கு ஞாபகம் வந்து தொலைத்துவிட்டது)

◆ 'விசுவாமித்திரபக்கம்' வழமைபோல சூடு... சுவை... சுவாரஸ்யம்... விசுவாமித்திரன் அடிக்கடி 'வட்டார வழக்கு' கொண்டு எழுதுவோரின் தலையில் குட்டிக் கொண்டே இருக்கிறார். ஏனோ தெரியவில்லை.... குட்டக் குட்டக் குனிபவன் ஒருநாள் நிமிர்ந்து நெற்றிக்கண் திறக்கும் நெருப்பு வரிகளை செங்கதிர் பிரசுரிக்கும் என்றே நம்புகிறேன்.
◆ 'விளாசல் வீரக்குட்டி' இம்முறை சரியான விளாசல்தான்! மிதுனனுக்குப் பாராட்டுக்கள்.

## தெறிகதிர்-30

திரு.த.வேணுதாசன்
உதவி விரிவுரையாளர்
விவசாயபீடம்
கிழக்குப் பல்கலைக்கழகம்
வந்தாறுமூலை, செங்கலடி

**2012 ஆவணி மாத செங்கதிர் இதழ்**

மேற்படி மாத இதழ் அதிதிப்பக்கத்தில் எழுத்தாளர் திரு.எஸ்.முத்துக்குமாரன் அவர்களையிட்டு பல அரிய தகவல்களை வெளியிட்டு இருந்தீர்கள், மகிழ்ந்தேன். அதில் அவருக்குக கிடைத்த பாராட்டுக்கள் விருதுகள் என்பவற்றைக் குறிப்பிடத் தவறி விட்டீர்கள் என்பது கவலையைத் தருகின்றது. பூவும் பொட்டுமிழந்த அழகுமிகு சுமங்கலிப் பெண்ணுக்குரிய தோற்றத்தையே அக்கட்டுரை பிரதி பலித்துள்ளது.

நான் தெரிவிக்கும் விபரங்களை அடுத்த மாத இதழில் இடம்பெற ஆவன செய்யின் மிக்க நன்றியுடையவனாயிருப்பேன்.

பதிவாளர் நாயகம் திணைக்களத்தில் அறுபது எழுபது வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தின் பின் தமிழர் ஒருவர் உதவிப் பதிவாளராகப் பதவி வகித்தது திரு.எஸ்.முத்துக்குமாரன் அவர்களே!

**அவர் பெற்ற விருதுகளாவன:**

(1) 1999ல் அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்ற பின் சர்வதேச தாபனமான றொட்டரி கழகத்தினால் 'சிறந்த மக்கள் சேவை'க்கான விருது வழங்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டது.

(2) 2011ம் ஆண்டு அரச விருதான 'கலாபூஷணம்' விருது வழங்கப்பட்டது.

(3) இவரது நாடக நூலான 'வீரவில்லாளி' நூலுக்கு
 1) 2008ம் ஆண்டு எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தினால் சிறந்த இலக்கிய நாடக நூலுக்கான தமிழியல் விருது வழங்கப்பட்டது.
 2) 2009ம் ஆண்டில் அரச சாகித்திய விருது இந்த நூலுக்கு (இலக்கிய நாடகம்) வழங்கப்பட்டது.

கௌரவ ஆசிரியர் அவர்களே திரு.எஸ்.முத்துக்குமாரன் அவர்களுக்கு கிடைக்கப்பட்ட விருதுகள் பற்றி என்னால் குறிப்பிட்ட விபரங்களையும் உள்ளடக்கி அதிதிப்பக்கக் கட்டுரைத் தகவலை நிறைவு செய்வீர்கள் என நம்புகிறேன்.

நன்றி!

2010 'வாசிப்பு மாதத்தை' முன்னிட்டு மட்டக்களப்பு நூலகத்தினால் அங்கத்தவர்களிற்காக நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் முதலிடம் பெற்ற கட்டுரை

# மனிதனை மனிதனாக்கும் வாசிப்பு

'அத்திவாரம் இல்லாத கட்டடம் ஆட்டம் காணும்! அதுபோல நூலறிவு இல்லாதவன் வாழ்வு சோகமாகும்.' இருளை வெல்வதற்கு ஒளி எவ்வளவு அவசியமாக உள்ளதோ அவ்வாறே எம் அறியாமையை நீக்குவதற்கு அறிவு அவசியமானது. இவ் அறிவைத் தருபவையாக நூல்கள் உள்ளன. காட்டிலும் மேட்டிலும் அலைந்து கொண்டிருந்த மனிதன் தனது சிறப்பான சிந்தனா சக்தி மூலம் பரிணாமம் அடைந்த நவீன சமூகமாக இன்றுள்ளான். மனித இனத்தின் இந்த முன்னேற்றம் போற்றப்பட வேண்டியதொன்றுதான். இருப்பினும் அவை எமது தனித்துவ அடையாளங்களை அழித்து எம்மைப் பட்ட மரங்களாக்கின்றன என்பதை எம்மில் எத்தனைபேர் அறிவார். இவை எம்வாழ்வை சென்நெறிப்படுத்தும் நூல்களை படிக்காததால் வந்த விளைவன்றோ!

அறிவென்பது எல்லா மனிதர்களிற்குள்ளும் அடங்கியுள்ளது. அடங்கிக் கிடக்கும் அவ் அறிவைத் தூண்டி விடுவதற்கும், அதன் மூலம் உலகை ஒளிமயமாக்குவதற்கும் பேருதவி புரிபவையாக நூல்கள் உள்ளன. இன்றைய நவீன உலகில் சட்டினி போடுவதிலிருந்து சந்திரனில் காணி வாங்குவது எப்படி? என்பது வரை அவ்அவ் துறைசார் நூல்களின் வருகை அதிகமாகவே உள்ளன. பத்திரிகை, சஞ்சிகை, புத்தகங்கள் என விரிவடையும் அச்சூடக சாதனங்கள், தொலைக்காட்சி, வானொலி, கணனி என விரிவடையும் இலத்திரனியல் ஊடகங்கள் என வெகுசன ஊடகங்களின் வளர்ச்சி எம்மைப் பிரமிக்கவே வைக்கின்றன.

உலகை வளமாக்கும் மனிதனால் அவனது உள்ளத்தை வளமாக்க முடியவில்லை. இன்று அவன் மனஅழுத்தம், உளமுரண்பாடு, மன அமைதியின்மை என்பவற்றால் சிக்கித் தவிக்கிறான். மேலும் போட்டி, பூசல், கொலை, களவு, பொய், குரோதம், காமம் என அனைத்தப் பாதகச் செயல்களையும் செய்து முரண்பாடுகளை வளர்த்துக் கொண்டே செல்கின்றான். இவற்றுக்கெல்லாம் காரணம் இயந்திரமயமான வாழ்க்கையில் எம்மை நாம் நேசிக்கத் தவறியமையே ஆகும்.

'வாசிப்பதனால் மனிதன் பூரணமடைகின்றான்' என்ற வார்த்தையின் கனதியை எம்மில் எத்தனைபேர் அறிவார்? இன்றைய உலகில் வாசிப்புப் பழக்கம் அருகிக் கொண்டு வருவதாகக் கூறுவது எந்தளவிற்கு ஏற்புடையது என்பது சந்தேகம், ஆனால் 'நல்லவாசிப்பு' குறைந்து கொண்டு செல்கின்றது என்பதை ஏற்றுக்கொண்டேயாக வேண்டும். நவீன தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியின் விளைவாக வெகுசன ஊடகங்கள் எட்டமுடியாத இமயத்தை எட்டிவிட்டன. இன்று அச்சூடகங்களின் வாசகர்களைவிட இணையவாசகர்களின் தொகை பன்மடங்காகப் பெருவிட்டதாக ஆய்வுகள் கூறுகின்றன. இயந்திரமயமான வாழ்க்கையில் அச்சுப்பிரதிகளைப் படிப்பதற்கு எமக்கு நேரமில்லை. இதன் காரணமாகத்தான் இன்றைய ஒவ்வொரு பத்திரிகை நிறுவனங்களும் தமக்கென தனியான இணையத்தளங்களை உருவாக்கி அதிலே செய்திகளைப் பதிவேற்றும் கட்டாயத்தில் உள்ளன.

இங்கே நாம் ஒவ்வொருவரும் ஏதாவது ஒன்றைத் தினமும் வாசிக்கின்றோம். ஆனால் அதில் எத்தனை சதவீதம் எமக்கும், நாம் சார்ந்த சமூகத்திற்கும் பயன்படுவதாக உள்ளது என ஆராய்ந்தால் விடையாக பூச்சியமே கிடைக்கும். இன்றைய எமது வாசிப்பு எதைப் போன்றது என்றால் அழகிய நல்ல பழுத்த பழங்கள் இருக்க, காய்களைக் கவர்ந்து கொண்டு செல்வது போன்றது. அதாவது எம்மை வளப்படுத்தும் நல்ல நூல்கள் இருக்க நாமே எம்மைச் சிறுமைப்படுத்தும் விடயங்களைத் தேடிச்செல்கின்றோம். இதன் காரணமாக முரண்பாடுகளின் மொத்த வடிவமாக வாழ்க்கையைத் தொலைத்துக் கொண்டிருக்கின்றோம்.

எம்மை நேசித்து யோசிக்க வைக்கும் நூல்களை நாம் தேடிச்சென்று வாசிக்க வேண்டும். இதற்கு திருக்குறள் தொடக்கம் திருக்குறான் வரை சான்று பகர்வனவாக உள்ளன. ஆனால் நாமோ 'நாகரிகம்' என்ற போர்வையைப் போர்த்திக் கொண்டு எமது அக உணர்வைப் பார்க்க மறுக்கின்றோம். இளைஞர்களே! போர்வையை விலக்கி விட்டு வெளியே வாருங்கள். எமது கலாசாரத்தையும், பண்பாட்டையும், வரலாற்றையும், மரபுகளையும் அடையாளப்படுத்தும் எத்தனையோ நல்ல விடயங்கள் இங்கே பரவிக்கிடக்கின்றன. அவற்றை வாசியுங்கள். மனிதநேயத்தை அகத்தில் ஏற்றுங்கள்.

கணனியின் முன் கண்களை உருட்டிக் கொண்டிருக்கும் எம்மில் எத்தனைபேருக்கு நூல்நிலையங்கள், வாசிகசாலைகள் இன்றும் உள்ளன என்பதன் உண்மை தெரியும். இணைய வாசிப்பைப் பற்றிக் குறைகூறவில்லை. அதில் நல்ல அம்சங்களும் உண்டுதான். ஆனால் ஒப்பீட்டளவில் தீமைகளே அதிகம். குறிப்பாக நம்பகத்தன்மை என்பது இணையவாசிப்பைப் பொறுத்தவரையில் பாரிய சிக்கலாகவே உள்ளது. மேலும் எம்மில் எத்தனை பேர் 'நல்ல வாசிப்பை' இணையத்தில் மேற்கொள்கின்றோம் என்பது ஐயத்திற்கு இடமானதே.

எவ்வளவுதான் தொழில் நுட்பங்கள் வளர்ந்தாலும் 'நூல் நிலையங்கள்' என்பவை எம் ஒவ்வொருவரினதும் சொத்துக்கள், இங்கே உள்ள ஒவ்வொரு நூல்களும் எம்மை நல்வழிப்படுத்தும் ஆசான்கள். கல்வி அறிவில்லாமல் நல்ல வாசிப்பினால் மேதாவியான அறிஞர்கள் பலர் உண்டு. கவிப்பேரரசர் வைரமுத்து கூறும்போது "தனது ஒருநாள் பொழுதில் பாதிக்கும் மேற்பட்ட நேரத்தை நூல்நிலையங்களிலே கழிக்கிறேன்." என்கிறார். எனவே நாம் ஒவ்வொருவரும் நல்ல வாசிப்பைப் பெறவேண்டுமாயின் கட்டாயம் நூல்நிலையம் சென்றே ஆகவேண்டும்.

இன்றைய பாடசாலை மாணவர்கள் முதல் பல்கலைக்கழக மாணவர் வரை எம்மில் எத்தனைபேர் நல்ல வாசிப்பைப் பெற நூல்நிலையங்களை நாடுகிறோம் என்பது சிந்திக்கவேண்டியதாகவே உள்ளது. இன்று நூல்நிலையங்களில் உள்ளபுத்தகங்கள் 'எடுக்கப்பட்டு அடுக்கப்படுகின்றன, தூசு தட்டுவதற்காக மட்டும்' என்ற உண்மையை நாம் ஏற்றே ஆகவேண்டும். நடமாடும் நூல்நிலையங்களை அமைக்கும் அளவுக்கு வளர்ந்த நாம் 'நல்ல வாசிப்பை' மறந்துவிட்டோம்.

எனவே மனித மனத்தின் மிருகப் பண்பை நீக்கி, நல்ல பண்பை வளர்ப்பதையே வாசிப்பு செய்யவேண்டும். சுருங்கச் சொன்னால் மக்களின் உடல், உள்ளம், உணர்வு ஆகிய மூன்றும் வளர்ச்சி பெற உதவும் வாசிப்பே நல்ல வாசிப்பாகும். இவையே 'மனிதனை மனிதனாக்கும்' கைங்கரியத்தைச் செய்யவல்லன.

- **காண்டீபன்**

## விளாசல் வீரக்குட்டி



மிதுனன்

### விபத்து மலிந்த உலகம்

ராவு ஒன்பது மணிபோல இவன் நல்லான் சைக்கிள்ல வந்தாப்போல மாட்டுக்கரத்தையோட மோதுப்பட்டுச் சரியான காயப்பட்டுப் போனானாமே! பாவ இழவு! புள்ளகுட்டிக் காரன்! எங்க வச்சிருக்காங்க? மட்டக்களப்பு பெரிய ஆசுபத்திரியிலயா? என்னடாப்பா எதிர மாட்டுக் கரத்த வந்ததக் கவனிக்கல் லையாமா? என்ன? ஆளுக்கு நல்ல வெறியா? நான் நினச்சன் அப்பிடித்தான் நடந்திருக்குமெண்டு.

இந்த நாளையில நீட்டுக்கும் ஒரே விபத்தாகத்தானே இருக்கு! ‘அக்சிடென்ட்’ பட்டு ஒவ்வொரு நாளும், வீணாக இந்தச் சனங்க ளெல்லாம் சாகுதுகள்.

பேப்பரப்பார்த்தாலும் ‘அக்சிடன்’, தொலைகாட்சியப் பாத்தாலும் ‘அக்சிடன்’, வரவரக் குறஞ்சமாதிரித் தெரியல்ல, கூடிக் கொண்டுதான் போகுது. இதுக்கெல்லாம் முக்கியகாரணம் குடிவெறிதான். என்ன நான் சொல்ற புழையா?

அதுமட்டுமில்ல முன்னால போற வாகனத்த முந்திப்போக வேணுமெண்டுற அவசரமும்தான். இதனாலதான் விபத்துக்கள் ஏற்படுகுதெண்டு பொலிஸ்காராக்களும் சொல்லுறாங்க. என்னடாப்பா அவ்வளவு அவசரம்? போற இடத்துக்கு ஒரு அஞ்சி பத்து நிமிசம் பிந்திப்போனா என்ன? உயிர எடுத்துப்போடுவாங்களா? நம்மட கிராமங்களில போட்டிருக்கிற றோட்டெல்லாம் பள்ளம்படுகுழி மோசம்தான். ஆனா.. ரவுணில அப்படியா? எல்லா றோட்டுகளும் மாபிள் றோட்டுக்களாப் போட்டிருக்கிறாங்க. போறத்துக்கு ஒரு வழி, வாறத்துக்கு ஒரு வழி. எந்த விபத்தும் நடக்கிறதுக்கு வாய்ப்பில்லை. இது அகம்பாவம், ஆணவம். ஆண்டவன மதியாத தன்ம!

முன்னால போற வாகனத்த முந்திப்போய் வெற்றிக் கம்பத்தைத் தொடுறதுக்கு ‘றேசா’ வைக்கிறாங்க.?

பயித்தியகாரக் கும்பல்கள் நல்லாக் குடிச்சித்து வாகனத்த ஓட்டினா இப்படித்தான் வரும்.

முதலெல்லாம் ட்றைவர்மார் குடிச்சிருக்காங்களா எண்டு பாக்கிறதுக்கு ஊதச்சொல்லி பலூன் குடுக்கிறதாக் கேள்விப்பட்டிருக்கன். இப்ப ட்றைவர் மாருக்கு இறைச்சிப் பொரியல் குடுக்கிறாங்களோ தெரியாது.

ஆரு செத்தாலும் எல்லாரும் மனிசர்தானே! ட்றைவர்மார நம்பியல்லவா சனங்கள் வந்து பஸ்ஸில , ஓட்டோவில ஏறுதுகள். கொஞ்ச மென்டாலும் இவனுகள் யோசிச்சிப் பாக்கவேணும். சரி, நீ எங்க போறா? ஆசுபத்திரிக்கா? நானும் அந்தப்பக்கம்தான் போறன். வா ரெண்டு பேருமா போவம்.

# 'செங்கதிர்' ஆண்டுச் சந்தா : ரூ 1000/-க்குக் குறையாத இயன்ற அன்பளிப்பு

✯ **"செங்கதிர்"** இன் வரவுக்கும் வளர்ச்சிக்கும் அன்பளிப்புச் செய்ய விரும்பும் நலம் விரும்பிகள் (உதவும் கரங்கள்) தாங்கள் விரும்பும் தொகையை ஆசிரியரிடம் நேரில் வழங்கலாம்.

**அல்லது**

✯ மக்கள் வங்கி (நகரக்கிளை), மட்டக்களப்பு, நடைமுறைக் கணக்கு இல : 113100138588996 க்கு வைப்பிலிடலாம்.

**People's Bank (Town Branch) Batticaloa.**

**Current account No.:113100138588996 - For bank deposit**

**அல்லது**

✯ அஞ்சல் அலுவலகம், மட்டக்களப்பில் மாற்றக் கூடியவாறு காசுக்கட்டளை அனுப்பலாம்.

**Post Office, Batticaloa - For money orders**

✯ காசோலைகள் / காசுக்கட்டளைகளை த.கோபாலகிருஸ்ணன் எனப் பெயரிடுக. **Cheques / Money orders in Favour of T.Gopalakrishnan**



பதிவு இல: DS/ MN/C/BR/1659

# ஏஞ்சல்ஸ்

## பியூட்டி ரீட்மென்ட் சென்டர்

உங்கள் அழகு சம்பந்தமான எந்தப் பிரச்சினையானாலும்

- பேர்சியல் (கோல்டன், பேர்ல்)
- முடி ( ஸ்ரெய்ட்னிங், கலரிங்)
- பொடி கெயார்
- மினி கெயார்
- முகப்பரு, அனாவசிய முடி நீக்கல்.

## தொடர்பு கொள்ளுங்கள்

இந்தியாவில் விசேட பயிற்சி பெற்ற பியூட்டிசியன்

ஏஞ்சல் கருணா

இல.29, தண்ணீர் கிணற்றடி வீதி,

பாலமீன்மடு,

மட்டக்களப்பு.

தொ.பே: 065 222 3663 / 077 9761 8801 / 065 490 8000

வணசிங்கா பிரின்டர்ஸ், 126/1, திருமலை வீதி, மட்டக்களப்பு. தொ.பே.இல. : 0652227370